


கம்பன் மலர்

கம்பன் கழகம், கோவை

2009

கம்பன் மலர்
2009

37-ஆம் ஆண்டு
கம்பன் விழா வெளியீடு

கம்பன் கழகம்
மணி மேல்நிலைப் பள்ளி வளாகம்
பாப்பநாயக்கன்பாளையம்
கோவை - 641 037



கடவுள் வாழ்த்து

அன்னை நீ; அத்தன் நீயே; அல்லவை எல்லாம் நீயே;
பின்னும் நீ; முன்னும் நீயே; பேறும் நீ; இழவும் நீயே;
என்னை, 'நீ இகழ்ந்தது' என்றது எங்ஙனே? ஈசன் ஆய
உன்னை நீ உணராய்! நாயேன் எங்ஙனம் உணர்வேன், உன்னை?"

(வருணன் துதி)

கம்பன் கழகம்

கோவை - 37

—○ நிர்வாகக் குழு ○—

தலைவர் : 'கம்பன் அறநெறிச் செல்வர்'

திரு. ஜி. கே. சுந்தரம்

துணைத் தலைவர்கள் : முத்தமிழ்க்காவலர்

திரு. சி. சௌந்திரராஜ்

திரு. வி. செல்வபதி

செயலாளர் : கம்பன் கலைச்செம்மல்

திரு. நா. நஞ்சுண்டன்

பொருளாளர் : திரு. ஆர். ஆர். பாலசுந்தரம்

துணைச் செயலர் : திரு. புலவர். க. முரளி

செயற்குழு உறுப்பினர்கள் :

முனைவர் கோ. சத்யநாராயணன்

திரு. மு. மாணிக்கம்

திரு. கே. வைத்தியலிங்கம்

திரு. பி. லோகசுந்தரம்

முனைவர். க. முருகேசன்

திரு. ஆலால சுந்தரம்

திரு. நிமலசாமி

திரு. பி. ராஜேந்திரன் (Limex)

திருமதி. வி. பொன்னம்மாள்

திருமதி. மகேஸ்வரி சற்குரு

திருமதி. சுவர்ணலட்சுமி

திருமதி. சித்ரா வேலுசாமி

மலர்ப் பதிப்பாசிரியர் :

திரு. நா. நஞ்சுண்டன்

பொருளடக்கம்

37 ஆம் ஆண்டு கம்பன் விழா நிகழ்ச்சிகளுக்கு

பெருநிதி வழங்கி, நிகழ்ச்சிகளை ஏற்ற தொழிலதிபர்கள்

திரு. G. சௌந்திரராஜ், நிர்வாக இயக்குநர்
C.R.I. சாரிடெபிள் டிரஸ்ட், கோவை

திரு. R. சாந்தாராம், நிர்வாக இயக்குநர்
லக்ஷ்மி கார்டு குளோத்திங் மானுபாக்சரிங் கம்பெனி (பி) லிட்

திரு. ரதீந்திரன், நிர்வாக இயக்குநர்
ஸ்ரீ அனந்தகுமார் டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட்

★

மற்றும்

நாளிதழ் விளம்பரங்களை ஏற்ற

திரு. மகேந்திரா ராம்தாஸ், நிர்வாக இயக்குநர்
மகேந்திரா பம்ப்ஸ், கோவை

அழைப்பிதழ்கள் அச்சிட்டு அளித்த
சுபா ஹிந்துமா புராடெக்ஸ்
திரு. R. R. பாலசுந்தரம்

ஆகியோருக்கு எங்கள் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜி. கே. சுந்தரம்
தலைவர், கம்பன் கழகம்

தோரண வாயில்

கோவைக் கம்பன் கழகத்தின் 37 ஆம் ஆண்டு கம்பன் விழா மலர் உங்கள் கைகளில் தவழ்கிறது. 1979 ஆண்டு தொடங்கி இன்று வரை 31 கம்பன் மலரை கழகம் வெளியிட்டுள்ளது. அரிய பல கட்டுரைகள், பதிப்பிக்கப் பெறாத கட்டுரைகள், ஆராய்ச்சி கட்டுரைகள், காண்டம் வாரியாக பல்வேறு நிலைகளிலே கம்பனை ஆராயும் கட்டுரைகள், முதன்மைப் பாத்திரங்கள், துணைப் பாத்திரங்கள், சிறுபாத்திரங்கள் என வகைப்படுத்தி ஆறுகாண்டங்களுக்கும் கட்டுரைகளை வெளியிட்டு நிறைவு செய்திருக்கிறோம்.

இவ்வாண்டு கம்பன் மலரில் - பல அரிய - நுணுக்கமான - செய்திகள் அடங்கிய பல கட்டுரைகள் வெளிவருகிறது. கம்பனுடைய கவிதைச் சிறப்பைப் பற்றிச் சொல்லும்பொழுது,

> ''நாரதன் கருப்பஞ்சாராய், நல்லவான்மீகன் பாகாய்
> சீர் அணி போதன் வட்டாய், செய்தனன். காளிதாசன்
> பார் அமுது அருந்த பஞ்ச தாரையாய் செய்தான். கம்பன்
> வாரம் ஆம் இராமகாதை வளம்முறை திருத்தினானே''

என்ற ராமாயணத்தனியன் ஒன்று ''வளம் முறை திருத்தினானே'' என்பதைக் கூறுகிறது. ஏறத்தாழ, 1123 ஆண்டுகளுக்கு முன் கி. பி. 886 - பிப்ரவரி 25 ஆம் நாள் - விசுவாசு வருடம் - பங்குனி 4 ஆம் தேதி அஸ்த நட்சத்திரத்தில் கம்பன் தன் இராமகாதையை அரங்கேற்றம் செய்தான். தான் வாழ்ந்த காலத்திலே இருந்த நாட்டு நடப்புக்களை எல்லாம், காவியத்தின் போக்கிலே கொண்டு வந்து கொடுத்தான். தேவையான இடங்களிலே கதையிலே—தொடர்புக்கு ஊறு நேராதபடி—மாற்றங்கள் செய்து அரங்கேற்றியதாலேயே ''வளம் முறை திருத்தினான்'' என்று தனியன் சொல்லுவதாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

இவ்வாண்டு 8 கட்டுரைகள் மலரில் வெளிவந்துள்ளன. முதற்கட்டுரை-யாக—மக்களாட்சித் தத்துவத்தை முன்னிலைப்படுத்தி ''கம்பர் ஒரு மக்கள் கவிஞர்'' என்று முனைவர் ச. கணபதி இராமன் எழுதியுள்ளார். திவ்யப்

பிரபந்தங்களிலே கம்பன் எவ்வாறு தோய்ந்து நின்றான் என்பதைக் குறிப்பிட்டு, கம்பனது கவிதைகளின் தாக்கம் ஸ்ரீ வேதாந்த தேசிகரை எந்த அளவிற்கு ஈர்த்திருக்கிறது என்பதையும், அவனது கவிதை நடையில் எவ்வள தோய்ந்து இருக்கிறார் தேசிகர் என்பதையும் "ஸ்ரீ தேசிக பிரபந்தத்தில் கம்பனது கதிர்வீச்சு" என்ற கட்டுரையில் திருமதி பிரேமா நந்தகுமார் ஆய்வு செய்திருக்கிறார். இம்முறையில் இதுவரை யாரும் செய்ததில்லை. அடுத்து கம்பனும் கேரளமும் என்ற கட்டுரை முனைவர் கி. நாச்சிமுத்து எழுதியது. மலயாளத்தில் கம்பனின் தாக்கம்—எப்படியெல்லாம் இருந்திருக்கிறது என்பதை—கன்னச ராமாயணம், எழுத்தச்சன் இராமாயணம். தோல் பாவைகூத்து இவைகளை ஒப்பிட்டு நுணுக்கமான பல செய்திகளை அவர் வழங்கியிருக்கிறார். ஆய்வாளர்களுக்கு இது ஒரு பொக்கிஷம்.

வாலிவதம் புதிய பார்வை—கட்டுரை திரு. இ. கோபாலன் எழுதியுள்ளது, இதுவரையிலும் யாரும் தொடாத சில நிகழ்வுகளை வைத்து வாலிவதம் சரியே என்று தமது ஆய்வில் சொல்லுவது, புதிய விவாதத்தை தொடங்குவதாகக்கூட இருக்கலாம். இலக்கிய திறனாய்வாளர்கள் இதுபற்றி சிந்திக்கலாம்.

இலக்குவன் சூளுரை—கம்பனடிப் பொடியின் கட்டுரை. "பெண்ணை கோறல் சரியா" என்ற அடிப்படையில் எடுத்த வினாக்களுக்கு விடை பகரும் கட்டுரை. "முன்னம் சூளுரை" என்ற கட்டுரை வைணவ இலக்கியங்களில் ஆழங்கால்பட்ட பக்ஷிராஜன் எழுதியது. பரமபத நாயகனாக இருந்தாலும்கூட தன் வாக்குறுதியிலிருந்து மீளமுடியாது என்பதை தக்க சான்றுகளுடன் கொடுத்திருப்பது ஒரு புதிய செய்தியாகும். காகுத்தன் கன்னிப்போர் பற்றி அமரர் பி. ஸ்ரீயின் கட்டுரையில் அவரது நடையழகும், சொற் பிரயோகங்களும், கம்பனை அப்படியே படம் பிடித்து காட்டுகின்றது. படித்துச் சுவைக்க வேண்டிய கட்டுரை.

"இளவலின் இங்கிதம்" பற்றிய கட்டுரை நீதியரசர் அமரர் மு. மு. இஸ்மாயில் எழுதியது. good manners என்று இக்காலத்தில் நாம் குறிப்பிடுவதை—சில பாத்திரங்களின் மூலம் நாம் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதை தெளிவாகச் சுட்டிக் காண்பிக்கிறார். மலரில் வெளியாகி உள்ள எட்டு கட்டுரைகளும் தெவிட்டாத—இன்னமுதாக இருக்கிறது. கம்பனை புதிய—புதிய கோணங்களிலே பார்த்து—அவற்றை நமக்கு தெளிவாகக் கொடுத்திருப்பதை கண்டு வியக்கத்தான் வேண்டும்.

கம்பன் மலருக்கு விளம்பரங்கள் கொடுத்துதவிய நிறுவனங்களுக்கும், தொழிலதிபர்களுக்கும், மலரைச் சிறந்த முறையில் அச்சிட்டுக் கொடுத்த கீதாஞ்சலி அச்சகத்தாருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

என்றும் கம்பன்பணியில்

கோவை
10-2-04

நா. நஞ்சுண்டன்
செயலர்
(மலர் பொறுப்பாளர்)

கம்பர் ஒரு மக்கள் கவிஞர்

- பேராசிரியர் முனைவர் ச. கணபதிராமன்

தமிழகப் பெரும் புலவர்களுள் மக்கள் நெஞ்சில் நீங்காத இடம் பெற்ற புலவர் பெருமக்கள் பலரிருப்பினும் திருவள்ளுவர், இளங்கோவடிகள், ஔவை, கம்பர் போன்ற பெருமக்கள் பெரிதும் மக்கள் நெஞ்சில் இடம் பெற்றுள்ளனர்.

மக்கள் நெஞ்சில் இடம் பிடித்தோர்

மக்கள் நெஞ்சில் இவர்கள் மிகுந்த அளவில் இடம் பிடித்திருப்பதற்கு சான்று, இவர்களைப் பற்றி மக்களிடையே வழங்கும் கதைகளாகும்.

திருவள்ளுவர் பற்றிய கதைகள் - வாசுகி அம்மையாரை வள்ளுவரின் துணைவியாகக் கொண்டு சொல்லப் பெறும் சுவை மிகுந்த கதைகளை மக்கள் தங்களிடையே கூறி வருவதை நாடறியும்.

கோவலன் கதையும் " திருக்கடையுரென்பதும் இது தானோ, தேரோடும் வீதியும் இதுதானோ" பாடல்களும், கண்ணகியைக் காளியாகக் கொண்டு கூறப்பெறும் கதைகளும், O பொற்கொல்லனைப் பற்றிக் கூறும் கதையும் மக்களிடையே வழங்கிவரும் கதைகளாகும்.

ஔவைப்பிராட்டியைத் தெய்வமாகக் கருதித் தமிழ்நாட்டுப் பெண்கள் வழிபட்டு வாழ்த்திக் கதை கூறும் வழக்கத்தினை இன்றும் காணலாம்.

கம்பனே விஞ்சுகிறான்

இவர்களைப் பற்றிய கதைகளைவிட கம்பரைப் பற்றிய கதைகள் மிகப் பரவலாகத் தமிழகத்தில் வழங்கி வருகின்றன.

கம்பன் கலைமகளின் அருளைப் பெற்றது-திருவொற்றியூர் காளி இராமாயணம் எழுதுவதற்கு தீப்பந்தம் பிடித்தது-கம்பன் மகன் அம்பிகாபதியைப் பற்றிய கதை- இலங்கைக்குச் சென்றது - ஆந்திராப்பகுதிக்கு சென்றது- குலோத்துங்க சோழனோடு கருத்து வேறுபாடு கொண்டது - தாசிக்கு அடிமை என்ற கதை - சோழன் மகனைக் கொன்றது - பொன்னுக்குப் பாடியது - கம்பனையும் சடையப்ப வள்ளலையும் இணைத்துப் பேசும் கதைகள் - என்று பற்பல கதைகள் உள்ளன.

இவையெல்லாம் கம்பரை மக்கள் தங்களில் ஒருவராகக் கொண்டு சொல்லப் பெற்ற கதைகள்.

மக்கள் மத்தியில் வழங்கும் நாட்டுப்புறப்பாடல்களில் கம்பன் ஈடுபட்ட கதைகளும் உண்டு.

"மூங்கில் இலை மேலே தூங்கும் பனி நீரே" என்ற ஏற்றப் பாட்டில் கம்பன் ஈடுபட்டதுண்டு.

பாண்டி நாட்டை தமிழ் கொண்டு வெல்வதற்கு வந்த கம்பன், கணவனை இழந்த பெண் அழுது பாடிய ஒப்பாரி பாட்டைக் கேட்டு அதிர்ந்த கதையும் உண்டு. அந்தப் பாட்டு

" *சில்லென்று பூத்த சிறுநெருஞ்சிக் காட்டுக்குள்ளே*
நில்லென்று வைத்து விட்டு நெடுவழி போனீரே "

என்பதாம்.

இவ்வாறு மக்கள் மத்தியில் பல்வேறு வகையாகப் பாராட்டப் பெறும் கம்பனை மக்கள் கவிஞர் என்று போற்றலாம்.

மக்கள் கவிஞராக இலங்கும் கம்பன் ஒரு புரட்சிக் கவிஞனுமாவான்.

மக்களே உயிர்

பழந்தமிழர் சமுதாயத்தில் மன்னனே, மக்களின் உயிராகக் கருதப் பெற்றான். 'திருவுடை மன்னரைக் காணின் திருமாலைக் கண்டேனே' என்ற சிந்தனை அந்நாளைய மக்களிடையே இருந்தது. புறநானூறு என்ற பழந்தமிழர் இலக்கியத்தில்,

" *நெல்லு முயிரன்றே நீருமுயிறன்றே*
மன்னனுயிர்த்தே மலர்தலை உலகம் " (புறம் 186)

என்று குறிப்பிடப்படுகிறது.

" *உலகிற்கோருயிர் பெற்றியான் பயாபதி என்னும் பேருடை*
வெற்றி வேல் மணி முடி வேந்தர்வேந்தனே " (சூளா.நகர 16)

" *மன்னுயிர் ஞாலக் கன்னுயிரொக்கு மிறை* " (பெருங்.2.11.17.18)

என்றும் மன்னனே உயிர் என்று இலக்கியங்கள் பேசுகின்றன.

ஆனால் கம்பன் இக்கருத்தினை ஏற்றுக்கொள்ளாமல் புரட்சிகரமான புதிய சிந்தனையோடு மக்களே உயிர் - மன்னன் உடம்பு தான், என்று மக்களாட்சி முறைக்கு வித்திடுகிறான். தசரதனைப் பற்றி அவன் போற்றிக் கூறும்போது

" *வயிரவான் பூணணி மடங்கல் மொய்ம்பினான்*
உயிரெலாந் தன்னுயி ரொப்ப வோம்பலால்
செயரிலாவுலகினிற் சென்று நின்று வாழ்
உயிரெலா முறைவதோ ருடம்பு மாயினான் "

என்று குறிப்பிடுகிறான்.

அரசன் உடம்பு போன்றவன். மக்கள் தாமே உயிர்கள் போன்றவர்கள் என்ற கருத்து இதனால் பெறப்படுகிறதன்றோ?

தமிழ் வாழவைக்கும்

கம்பன் இரண்டாம் குலோத்துங்க சோழனின் காலத்தைச் சேர்ந்தவன் என்று கற்றோர் கூறுவர். சோழ மன்னனுக்கும் கம்பருக்கும் கருத்து வேறுபாடு எழுந்தது. சோழ மன்னன் கம்பனை நாடு கடத்த ஆணையிட்டான். கம்பர் சோழ மன்னனின் ஆணையைத் துச்சமெனவெண்ணி, அவனை எதிர்த்து,

“ *மன்னவனும் நீயோ வளநாடு உன்னதோ*
உன்னையறிந்தோ தமிழை ஓதினேன் - என்னை
விரைந்து ஏற்றுக் கொள்ளாத வேந்துண்டோ - உண்டோ
குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பு ”

என்று பாடி வீறுகொண்டு விடை பெற்றார்.

மன்னனைப் பாடவில்லை

சோழ மன்னன் காலத்தில் வாழ்ந்தவர் கம்பர். இராமாயணமும் சோழ மன்னர் காலத்தில் இயற்றப் பெற்றது. ஆயினும் சோழ மன்னனை அவர் சிறப்பித்துப் பாடவில்லை. மன்னனாக இல்லாத சடையப்ப வள்ளலையே பாடினார். பத்து இடங்களில் பாடியுள்ளான். சடையப்ப வள்ளலுக்கும், கம்பனுக்கும் அமைந்த நட்பு பற்றிப் பல்வேறு கதைகளுமுண்டு.

சடையப்ப வள்ளலைக் கம்பன் பாயிரத்தில்

“ *தொடை நிரம்பிய தோமறு மாக்கதை*
சடையன் வெண்ணை நல்லூரயிர் வயிற்றந்தோ ”

என்று போற்றுகின்றார். இராமாயண நிறைவில்

“ *வெண்ணையூர்ச் சடையன் மரபிளோர்*
கொடுக்கவே வாங்கி வசிட்டனே புனைந்தான் மௌலி”

என்று முத்தாய்ப்பாக மொழிந்துள்ளார்.

அடித்தள மக்கள்

பெருஞ் செல்வ நிலையிலுள்ள சடையனை மட்டும் இராம காதையில் போற்றவில்லை. சமுதாயத்தின் அடித்தட்டிலிருக்கும் மக்களைப்பற்றியும் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

இராமகாதையின் தொடக்கத்திலேயே கொடிச்சியர், எயினர் போன்ற மக்களை கம்பர் சிறப்பித்துப் பாடியுள்ளது, பாராட்டுதற்குரியது

கொடிச்சியர் இடித்த சுண்ணமும் வாசனைப் பொடியும், குங்குமப் பூவும், ஏலக்காயும் சரயு நதியில் கலந்து வருவதாகக் கம்பர் குறிப்பிடுகிறார். எயினர் வாழ்கின்ற சிற்றூரையும், மான்கள் போல் மருண்ட பார்வையையுடைய இடைக்குல மக்களையும் குறிப்பிட்டும், அவர்களின் செயல்களைப் பாராட்டியும் பாடியுள்ள பண்பு கம்பர் மக்கள் பால் காட்டும் அன்பினைக் காட்டுகிறது.

உழவர்கள்

உழவர் பெருங்குடி மக்களான மள்ளர்கள் தாங்கள் விளைவித்த பொருட்களை அந்தணர் முதல் அனைவருக்கும் வழங்கி விருந்தோம்பிய சிறப்பினைக் கம்பர் செவ்விய முறையில் சித்தரித்துள்ளார்.

“ *முந்து முக்கனியின் நானா முதிரையின் முழுத்தநெய்யின்*
செந்தயிர்க் கண்டம் கண்டமிடையிடை செறிந்த சோற்றின்
தந்தமிலிருந்து தாமும் விருந்தொடுந் தமரினோடும்
அந்தணர முதருந்தி யயிலாறு அமலைத் தெங்கும்”
(நாட்டுப்படலம் செ.22)

கம்பர் உழவர் பெருங்குடி மக்களின் ஆறாத அன்பு கொண்டவர். பசியோடு வந்த கம்பர் பலரிடமும் உணவு கேட்டும் கிடைக்காது கடைசியில் வேளாளர் வீட்டிற்குச் சென்று உணவு உண்டு மகிழ்ந்தார் என்று அவர்கள் மீதும் வாழ்த்து வெண்பா பாடினார் என்றும் ஒரு கதையுண்டு. அவர் பாடிய வாழ்த்து வெண்பா,

“ *மேழி பிடிக்கும் கைவேல் வேந்தர் நோக்கும் கை*
ஆழி தரித்தே அருளும் கை - சூழ்வினையைப்
நீக்கும்கை என்றும் நிலைக்கும் கை நீடுழி
காக்கும் கை காராளர் கை ”

என்பதாம்.

உழவர்களைச் சிறப்பிக்கும் வண்ணம் ஏரெழுபது என்ற நூலைக் கம்பர் செய்துள்ளார் என்று புலவர் பெருமக்கள் குறிப்பிடுவர். ஏரெழுபது நூலில் நூலைப் படித்தவர்கள் மறைகளைப் படித்தவர்கள் பண்ணையம் பாராட்டையும் கற்றவர்கள் கற்றவர்கள் அல்லர்: நெற்பயிரின் நாற்றைப் பிடுங்கி நடுவதற்குக் கற்றவர்களே கற்றவர்கள் என்று மிகச் சிறந்த கருத்தைப் படம் படித்துக் காட்டியுள்ளார்.

குகனும் உண்டு

இராம கதையில் வரும் மிகச் சிறப்பான பாத்திரங்களுள் ஒரு பாத்திரம் குகன். கங்கை இரு கரையினையும் கணக்கிறந்த நாவாய்களையும் கொண்டவன் குகன். இவன் வேடர்க்குலத் தலைவன். வெடித்த சொல்லினன். தடித்த உடலினன். பிடித்த வில்லினன். வேடர் குலத்தலைவனான இந்தக் குகனை குகனோடு ஐவரானோம், என் தம்பி உன் தம்பி, மங்கை கொழுந்தி என்று கூறி அடிமட்டமக்களிடம் இராமன் அன்பு காட்டியதைக் கம்பன் சிறப்பாக எடுத்துப் பேசுகிறான். திருத்திய மீனையும், தேனையும் கொணர்ந்த குகனிடம் அன்பால் கொணர்ந்த அனைத்துமே அமிர்தம் என்கிறான் அயோத்தி வள்ளல் .

சமத்துவ ஞானி

சமுதாயத்தின் அடித்தள மக்களிடம் அன்பு காட்டி அவர்களையும், தமது இராம காதையில் சிறப்பித்த கம்பன் சமத்துவ சமுதாயத்திற்கும் அடி கோலுவதை அனைவரும் அறிவர்

“ *கல்லாது நிற்பர் பிறரின்மையின் கல்வி முற்ற*
வல்லாருமில்லையவை வல்லரால் லாமில்லை
எல்லோரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்தலாலே
இல்லாருமில்லை யுடையாரு மில்லை மாதோ ”

என்பது கம்பச்சித்திரம்.

மக்கள் நலமே மன்னன் நலம்

மன்னர்கள் மக்கள் நலத்தையே கருத்தில் கொள்ள வேண்டும். மக்களைத் தாயாகக் கருதி அவர்களின் நலன்களைக் கருத்தில் கொள்ள வேண்டும். மக்களுள் யாரேனும் குற்றம் புரிந்தால் தீ யெனச் சுடவேண்டும். அறநெறி பேண வேண்டும் என்று மக்கள் நலத்தினையே பேணி காக்க வேண்டும் என்பதை, இராமன் சுக்கிரீவனுக்குக் கூறும் முகமாகக் கம்பன் பாடுகிறான். அப்பாடல் முடி சூட்டப் பெற்றதும் அவனுக்கு அறிவுரை கூறுமுகமாக அமைந்துள்ளது.

“ *நாயகன் அல்லன் நம்மை நனி பயந்து எடுத்து நல்கும்*
தாய் என இனிது பேணித் தாங்குதி தாங்குவாரை
ஆயது தன்மையேனும் அற வரம்பு இகவாவண்ணம்
தீயென வந்தபோது சுடுதியால் தீமையோரை ”

என்பதாம்.

கம்பர் வள்ளுவத்தைக் கசடறக் கற்ற பெரும்புலவர். வள்ளுவப் பெருந்தகையின் கருத்துக்களையும் சொற்றொடர்களையும் தமது காவியத்தில் கையாண்ட செஞ்சொற்புலவர். மன்னன் எத்தகையவனாக இலங்க வேண்டும் என்பதை வள்ளுவப் பெருந்தகை.

" குடிதழீ இக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு "

என்று குறிப்பிடுகிறார். இம்மக்கள் சிலர் குற்றம் செய்வாரகில் அவர்களுக்குக் கடுந்தண்டனை வழங்க வேண்டும் என்பதை வள்ளுவம்

" கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களை கட்ட தனோடு நேர் "

எனக் குறிப்பிடுகிறது. வள்ளுவம் கம்பனுக்குக் கைகொடுக்கிறது.

வசிட்டர் வாய் மொழி

திருவின் கேள்வனான இராமனுக்கு முடிசூட்டிட ஆயத்தப்பணிகள் நிகழ்கின்றன. திருமுடி புனையவிருக்கும் இராமனுக்கு வசிட்டர் அரசியல் பற்றிய அறிவுரைகள் வழங்குகின்றர். அவ் அறவுரைகள் அனைத்தும் குறளின் வெளிப்பாடே எனக் கொள்ளலாம்.

இராமா! செவ்விய அந்தணர்களை பேணுவாயாக. அத்துடன்

" நொந்துள்ளாரையும் நொய்து உயர்ந் தாரையும்
பேணிக் காத்திடுக. "

" வினையின் நீங்கிய மேலவர் தாளினைப் போற்றிடுக. "

" சூது போன்ற தீமைகளை ஒழித்திடுக. "

" யாரோடும் பகை கொள்ளற்க "

" போர் ஒடுங்கி வீடும். புகழ் ஒடுங்காது "

என்று இராமனுக்கு அறிவுரை கூறிய வசிட்டர், அறிவுரையின் முத்தாய்ப்பு வைப்பது போன்று " மன்னன் உடம்பு. மக்களே உயிர்" என்ற புரட்சி முழக்கத்தையும் எடுத்துக் கூறுகிறார்.

" வையம் மன்னுயிராக அம்மன்னுயிர்
உய்யத் தாங்கும் உடல் அன்ன மன்னனுக்கு
ஐயமின்றி அறம்கடவாது அருள்
மெய்யில் நின்ற பின் வேள்வியும் வேண்டுமோ? "

மக்களைக் காத்து அறம் கடவாது ஆட்சிசெய்யின் வேள்வியும் வேண்டாம் என்கிறார் வசிட்டர். அனைத்து மக்களிடமும் அன்பைப் பொழிந்து ஆட்சி செய்க என்பதனை

"என்புதோல் உடையார்க்கும் இலார்க்கும் தம்
வன்பகைப் புலன் மாசற மாய்ப்பது என்
முன்பு பின்பு இன்றி மூவுலகத்தினும்
அன்பில் நல்லதோர் ஆக்கம் உண்டாகுமோ"

என்று வள்ளுவன் குறளுக்கே வழிகாட்டி மக்களாட்சிக்குத் கட்டியம் கூறுகிறார் கம்பர்.

வீடணனுக்கு அறிவுரை

இராவண வதம் முடித்த பின்னர்க் திருவின் கேள்வனாகிய இராமனது ஆணையால் இலக்குவன் வீடணனுக்குத் திருமுடி சூட்டுகிறான். திருமுடி சூட்டப்பெற்று வணங்கி நிற்கும் போது இராமன் அவனுக்கு அரசியல் நெறிமுறைகளைச் கூறி, அறம் வழுவாது ஆட்சி செய்க என்று கூறி வாழ்த்தினான். அது

"உரிமை மூவுலகும் தொழ உம்பள்தம்
பெருமை நீதியறன்வழி பேர் கிலாது
இருமையே யரசாளுதி யீறிலாத்
தருமசிலவென்றான் மறை தந்துள்ளான்"

என்பதாகும்.

முடிவுரை

கம்பன் மக்களிடையே பெரும்புகழ் பெற்றவன் என்பதை அவனைப் பற்றி வழங்கும் கதைகள் மெய்ப்பிக்கின்றன. இதனால் அவன் மக்கள் கவியானான். புதிய புதிய சிந்தனைகள் தந்து மக்களாட்சிக்கும் அறநெறி ஆட்சிக்கும் - அன்பு நெறி ஆட்சிக்கும் - அடிதட்டுமக்களை உயர்த்திட வேண்டும் என்றும் அவர்களைப் பேணி உயர்த்திட வேண்டும் என்ற சிந்தனைக்கும் - சமரச சமுதாயம் அமைய வேண்டும் என்ற சிந்தனைக்கும் கம்பன் வித்திட்டான் என்று கூறலாம். ●

❖❖❖

ஸ்ரீ தேசிக பிரபந்தத்தில் கம்பனது கதிர்கள்

- முனைவர் திருமதி. பிரேமா நந்தகுமார்

இராமனின் சரித்திரம் சங்ககாலத்திலேயே மிகவும் பிரசித்தி அடைந்திருந்தது. புறநானூறு, அகநானூறு முதலிய நூல்களில் இராமாயணக்குறிப்புகள் காணப்படுகின்றன. பழமொழி நானூறு, 257 ஆம் செய்யுள் இராமாயணத்தை குறிப்பிடுகிறது.

" போலந்தார் இராமன் துணையாகத் தான்போந்து
இலங்கைக் கிழவற்கு இளையான் - இலங்கைக்கே
போந்து இறையயதூம் பெற்றான் பெரியாரைச்
சாந்து கெழீஇயிலார் இல் "

பெரியவர்களைச்சார்ந்து நின்றால் விபீஷணன் போல் நன்மை பெறலாம் என்பது குறிப்பு. இதுபோல் கலிங்கத்துபரணி, சிலப்பதிகாரம் முதலிய நூல்களிலும் இராமகாதை உண்டு. இனி, புராணங்கள் அனைத்திலுமே இராமன் கதை எங்கேயோ வந்து விடும். இப்பொழுது சேது அணை பற்றி அனைவரும் பேசிக்கொண்டிருப்பதால், சேது புராணத்திற்குப்போவோமே! மு. இராகவைய்யங்கார் 'இராமாயணமும் தமிழ்வழக்குகளும்', எனும் கட்டுரையில் இப்புராணத்தின் அமுததீர்த்தசருக்கத்தில் நிரம்பவழகிய தேசிகரது பாடல்களைக் குறிப்பிடுகிறார்.

" சானகி தன்னையின்னித் தசமுகத் தரக்கற் கோறற்
கானகா ரியங்கள் செய்வா நவனிருந் தாயும் வேலை
மீனமர் தரங்க வேலை மிககெழு குரைப்பி நுள்ளே
தானடங் குற்றுத் தம்மிற் சாற்றி மாற்றங் கேளார் "

" ஆயின ரவையி னுள்ளோ ரஃதுணர்ந்த் தடலி ராமன்
ஏயெனச் சீறி வல்லே யிருபிரு குடிமு ரிப்பால்
ஓயெனக் குறிப்பினார்க்கு முத்தியை நிறுத்தா நத்தால்
மேயதே காந்தராம விழுப்பெய ரப்ப திக்கே "

சமுத்திரக்கரையில் யுத்தத்திற்கான ஆலோசனைக்கூட்டம் நடந்து கொண்டிருக்கிறது. வானரவீரர்கள் கூட சத்தமிடாமல் கவனிக்கிறார்கள். ஆனால் அலை கடலோ ஆர்ப்பரிக்கிறது. இதில் ஆச்சரியமென்ன? பாலாழியை துறந்து இந்த உப்பு சமுத்திரக்கரையில் வீற்றிருக்கும் இறைவனைக்கண்டால் மகிழ்ச்சிக்கூப்பாடு போடத்தானே தோன்றும்! ஆயினும் இந்த ஆர்ப்பரிப்பு ஆலோசனைக்கு இடைஞ்சல். அதனால் இராகவன் சமுத்திரத்தின் பக்கம் திரும்பி புருவங்களை நெரித்துக் கோபக்குறிப்பு காட்டவும், ஓசை கப்பென்று அடங்கி விட்டதாம். இச்செய்தி இராமேசுவரக்கரை ஏகாந்தமூர்த்தி கோவில் பற்றிச் சொல்லப்படுகிறது என்றும் ஐயங்காரவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

ஆழ்வார்களும் நாயன்மாரும் இராமகாதையைச் சொல்லிக்கொண்டே இருப்பார்கள். சிவநேசச்செல்வர்களுக்கு இராமாயணத்தில் வரும் இராவணன் பற்றி சொல்வது பிடிக்கும். சிவபெருமானை தனது சாமகானத்தினால் கவர்ந்த பக்தன் அல்லவா?

இனி கம்பன். கம்பனது காலத்தை 9 ஆம் நூற்றாண்டிலிருந்து 12 ஆம் நூற்றாண்டுவரை சொல்கிறார்கள். வி.ஆர். ராமச்சந்திர தீக்ஷிதர் அவர்களும் ஆர். இராகவஅய்யங்கார் அவர்களும் 12 ஆம் நூற்றாண்டை எடுத்துக்கொள்கிறார்கள்.

வேதாந்த தேசிகர் 13 ஆம் நூற்றாண்டில் தோன்றி, 1326 வரை வாழ்ந்திருந்தார். சமஸ்கிருதம், பிராகிருதம், தமிழ் மூன்றிலும் ஒப்பற்ற தேர்ச்சி பெற்று பாடல்கள் புனைந்திருக்கிறார். அவரது வடமொழிப்பிரபந்தங்கள் காரணமாக, பொதுவாக அவரது தமிழ்க் கவிதைகள் பற்றி நாம் சிந்திப்பதில்லை. இப்படிப்பட்ட அற்புதமான தமிழ்க்கவிதை எழுதுமுன் தேசிகர் ஆழமாக பழந்தமிழ்க் கவிதைகளை அறிந்திருப்பவார் என்பதில் சந்தேகமில்லை. அதிலும் அவர் பல்லாண்டுகள் வாழ்ந்திருந்த திருவரங்கத்தில் அரங்கேறினதும், அவருக்கு சமீப காலத்தியதுமான கம்பனது இராமாயணத்தை ஆழ்ந்து படித்திருப்பார். இதனாலெல்லாம், தேசிகரது தமிழ்க்கவிதைகளை, கம்பனது இராமாயணப்பின்னணியில் படிப்பது நன்மை பயக்கும். இந்த நல்ல தொண்டினை செய்யவேண்டியது பேரறிஞர்கள் என்பதே சரி. ஆயினும் தமிழின் சந்த இனிமைகளையும் கதைப்போக்கினை நடத்திச் செல்லும் ஆளுமையையும் கம்பனது இராமாயாணம் மூலம் அனுபவிக்கும் ஆர்வத்தில் ஒரு சில எண்ணங்களைப் பகிர்ந்து கொள்கிறேன்.

“ ஓசை பெற்ற உயர் பாற்கடல் உற்று, ஒரு
பூசை, முற்றவும் நக்குபு புக்கென
ஆசை பற்றி அறையலுற்தேன்”

என்று கம்பனே எனக்காகப்பாடி வைத்திருக்கிறார்!

வேதாந்த தேசிகரது தமிழ்ப்பாடல்கள் ஸ்ரீ தேசிகப் பிரபந்தம் என்று வழங்கப்படுகிறது. இவற்றில் மெய்விரதமான்மியம் எனும் நூல் காஞ்சீபுரம் வரதராஜர் பற்றியது. தேசிகர் ஸத்யவிரத மஹாத்மியம் என்று ஒரு மணிபிரவாள நூல் எழுதினார். காஞ்சீபுரத்திற்கு ஸத்யவிரத க்ஷேத்ரம் என்று ஒரு பெயருண்டு. இப்பெயரையே தூய தமிழில் தேசிகர் மெய்விரதம் என்கிறார்.

பிரும்மா எம்பெருமான் தரிசனத்திற்காக மெய்விரத தலத்திற்கு வந்து ஒரு அசுவமேத யாகம் செய்யத்தொடங்குகிறான். யாகம் செய்யும் போது மனைவி அருகில்

இருக்கவேண்டும். சரஸ்வதி ஊடல் காரணமாக சரஸ்வதி நதி தீரம் சென்று தவம் புரிகிறாள். வஸிஷ்டர் சென்றழைத்தும் வர மறுத்துவிடுகிறாள். அதனால் காயத்ரீ தேவி சமேதராக பிரும்மா யாகம் செய்யத் தொடங்குகிறார். விஷயம் தெரிந்த சரஸ்வதி வேகவதி என்ற பெயருடன் ஒரு வெள்ளப்பெருக்காக, கோபமுடன் காஞ்சீபுரத்தை நோக்கி வருகிறாளாம்.

"அன்ன வடிவாள் அசையும் அன்ன நடையாள்
உயரும் அன்ன அரசு ஏறி வருவாள்
அத்தன் அயன் அத் தனையன் உத்தினை
அத்திதென உத்தி புரியாள்
அன்ன நடை விடா நடம் இதென்ன நடவா
நடுவு நண்ணு குவடு ஏறி இழிவாள்
நல் பதிகள் அல் பதிகள் கல் புரள
அற்புத மருற்கதியினால்
கல் நடைவிடா இடமில் உன்னதி சிறா
விகடம் மன்னு கிரி கூடம் இடிய
கட்டை விடை இற்று விடு முற்றும் விழி
உற்று அடைய விட்டு அருகு உற
அன்ன நய சிர் அயன் இது என் என
விழா அமரர் மன்னுபதி ஏறிமகிழ
அச்சுதன் அணைத்தனுவில் அத்திசை வர
அத்தகைய அற்ற அணுகினாள்."

இப்படி பிரவஹித்துவரும் சரஸ்வதியை தடுப்பதற்காக எம்பெருமான் நதி வரும் வழியில் அணையாகக் கிடந்தான். சரஸ்வதியும் நாணி பிரும்மாவைச் சேர, யாகம் இனிதே நடந்தது. வேள்வித்தீயில் எம்பெருமான் வரதராஜனாகத் தோன்றினான்.

இந்தச் செய்யுளைப் படிக்கும்போது ஏதோ ஒரு எதிரொலி என்னுள்ளத்தே கேட்கும்.இவ்வொலி எங்கிருந்து வருகுவதோ! ஒருநாள் என் 'கண்முன்' வந்து தோன்றிவிட்டது.

சரஸ்வதி மகா கோபத்துடன் வருவது போல் இங்கும் ஒரு விஞ்சைப்பெண் வருகிறாள். சரஸ்வதியின் கோபம் இங்கு இல்லை. இங்கு தாபம். ஆனால் அது மென்மை எனும் போர்வை போர்த்துவருகிறது.

"பஞ்சி ஒளிர், விஞ்சு குளிர் பல்லவம் அனுங்க
செஞ் செவிய கஞ்சம் நிகர், சிறடியள் ஆகி,

அம் சொல் இள மஞ்ஞைஎன, அன்னம் என, மின்னும்
வஞ்சி என, நஞ்சம் என, வஞ்ச மகள் வந்தாள்''

பொன் ஒழுகு பூவில் உறை பூவை, எழில் பூவை,
பின் எழில் கொள் வாள் இணை பிறழ்ந்து ஒளிர் முகத்தாள்
கன்னி எழில் கொண்டது, கலைத் தட மணித் தேர்,
மின் இழிவ தன்மை, இது, விண் இழிவது என்ன,

கானில் உயர் கற்பகம் உயிர்த்த கதிர் வல்லி
மேனி நனி பெற்று, விளை காமம் நிறை வாசத்
தேனின் மொழி உற்று, அனிய செவ்வி நனி பெற்று, ஓர்
மானின் விழி பெற்று, மயில் வந்ததுஎன, - வந்தாள் ''

அறிவு தெய்வத்தின் வருகை தேவதேவனான இறைவனையே மண்ணிற்கு அழைத்து வருகிறது. அத்திகிரி யருளாளப்பெருமாள் வந்தார் என்று திருச்சின்னம் ஊதுகிறோம். காமத்தீ உருவான ராக்ஷஸியின் வருகையோ இதே மண்ணை பல தீமைகளுக்கு நிலைக்களானாக்குகிறது. இரண்டு காட்சிகளையும் காட்டும் தமிழின் சாதுர்யத்தில் சற்றே மயங்கி நிற்கிறோம்.

கம்பன் தனது மாகாவியத்தைப்பூர்த்தி செய்துகொண்டிருக்கிறான். இன்று கூட்டங்கள் நடைபெற்ற முடிவில் நன்றி நவிலல் என்று தலைவர் கூறுவார். கூட்டம் வெற்றிகரமாக நடப்பதற்கு உதவிய அனைவரையும், ஒருவர் பெயர் கூட விடாது நன்றி கூறுவதுண்டு. அதுபோல் கம்பனும் தனது நன்றி நவிலல் கூட்டத்திற்கு வந்துவிட்டான். அதாவது இராமனுடைய நன்றி நவிலல்! கடல்வழியே இலங்கை வருவதற்கு உதவிய சேதுவை மறக்காமல் ஆறு செய்யுட்களில் அழகாக சேது அணை பற்றி சீதையிடம் பேசுகிறான். நினைவில் வைக்க வேண்டிய செய்யுட்கள்:

"மற்று இதன் தூய்மை எண்ணின், மலர் அயந்தனக்கும் எட்டா;
பொன் தொடித் தெரிவை! யான்என் புகலுகேன்!கேட்டி,அன்பால்
பெற்ற தாய் தந்தையோடு தேசிகற் பிழைத்து, சூழ்ந்த
சுற்றமும் கெடுத்துளோரும் எதிர்த்திடின் சுரர்கள் ஆவார்."

கங்கையோடு, யமுனைக், கோதாவரி, நருமதை,காவேரி,
பொங்கு நீர் நதிகள் யாவும், படிந்து அலால், புன்மை போகா;
சங்கு ஏறி தரங்க வேலை தட்ட இச்சேது என்னும்
இங்கு இதின் எதிர்த்தோர் புன்மையாவையும் நீங்கும் அன்றே."

இங்கு சமுத்திர ஸ்னானம் செய்யாவிட்டால் பரவாயில்லை, அணை மேல் நடக்காவிட்டாலும் பாதகமில்லை, ஏன் அணையைத்தீண்ட வேண்டியது கூட இல்லை. சேதுவினை கண்ணால் கண்டாலே நமது கொடுமையான பாவங்கள் கூட தீயினில் தூசாகிவிடுமாம். கம்பன் கட்டும் இந்தக்காட்சி வேதாந்த தேசிகரைச் சிந்திக்க வைத்திருக்கும். கண் பார்வையாலேயே கருணைப்பொழிந்து, அமைதி தருவதே வேங்கடவனுக்கு வழக்கம் என்பதற்கு அந்த கருணையை தயா தேவியாகக்கண்டு தயாசதகம் எழுதியிருக்கிறார். பார்வை ஒன்றே போதுமே ! அதுவும் நாம் பார்த்தால் போதும்! ஏனென்றால் இறைவன் நம்மை எப்பொழுதும் பார்த்துக்கொண்டிருக்கிறான். (அதனால் தானே தூக்கமின்றி அவனது விழிகள் சிவந்து கிடக்கின்றன!) கம்பனது அணைபோல மெய்விரதமான்மியத்திலும் இதோ ஒரு அணை. இங்கு எம்பெருமானே அணையுருவத்தில் இருக்கிறான்! பின் கருணை பொழிவதில் குறையொன்று மில்லையே! தெய்வீக அணை பற்றிய தேசிகரது செய்யுள்:

“தரணியின் மன்னி யயனார் தனித்தவங் காத்தபிரான்
கருணை யெனுங்க டலாடித் திருவணை கண்டதற்பின்
திரணர கெண்ணிய சித்திர குத்தன் தெரித்து வைத்த
சுருணையி லேறிய சூழ்வினை முற்றுந் துரந்தனமே.”

இவ்வுலகில் பிரும்மா செய்த தவத்தை காப்பதற்காக எம்பெருமான் அணையாகக்கிடந்தான். கருணையெனும் கடல்நீர் நம்மை குளிர்வித்தது. நாம் செய்த பாபங்களுக்கு பட்டியலிட்டு சித்திரகுப்தன் ஒரு ஓலைச்சுருள் வைத்திருக்கிறான் அல்லவா? நாம் இந்த அணையைக்காணும்போதே அந்த ஓலையில் கண்ட நமது பாபங்கள் அனைத்தும் மாயமாய் மறைந்துவிடுகின்றனவாம். இப்படி கம்பனது ராமன் சொல்வது போல், இப்படி தேசிகரும் நமக்குச்சொல்கிறார். கம்பனும் தேசிகரும், விரகர் இருவர் புகழ்ந்துவர, விரல்நிறைய மோதிரங்கள் அணிந்து வரும் சொற்சிலம்பமாடும் புலவர்கள் அல்ல. நமது புலவர்கள் இருவரும் தெய்வமாக்கவிஞர்கள். வேதத்தில் கூறப்படும் த்ருஷ்டாக்கள் (காண்போர்). இவர்கள் பெற்ற அனுபவம் சத்திய வாக்காக மலர்ந்திருக்கிறது.

ஸ்ரீ வைஷ்ணவர்கள் இராமாயணத்தை சரணாகதி சாஸ்திரம் என்றே கூறுவார்கள் ஒவ்வொரு காண்டத்திலும் ஒரு பிரசித்த சரணாகதி காண்கிறோம். வேதாந்த தேசிகர் சரணாகதியின் உயர்வைப்பற்றி பலவகையான நூல்கள் எழுதியிருக்கிறார். எத்தனையோ பேர்கள் எம்பெருமானை சரணடைந்திருக்கிறார்கள். அப்படிபட்டவர்களில் முதன்மையானவன் விபீஷணன் என்பதை மிகத்துல்லியமாக அபயப்பிரதானசாரம் எனும் மணிப்பிரவாள நூலில் விளக்குகிறார். கம்பனது

காவியத்தில் விபீஷணனுக்கு அடைக்கலம் தரும் செய்யுட்களை தேசிகர் படித்து, கேட்டு மகிழ்ந்திருப்பார் என்றே தோன்றுகிறது.

"காரியம் ஆக! அன்றே ஆகுக! கருணையோர்க்குச்
சீரிய தன்மை நோக்கின், இதனின்மேல் சிறப்பு உண்டோ?
பூரியரேனும் தம்மைப் புகல் புகுந்தோர்க்குப் பொன்றா
ஆர் உயிர் கொடுத்துக் காத்தார், எண் இலா அரசர் அம்மா!"

இது க்ஷத்திரிய தர்மம்; மானுட தர்மமே இதுதான். "அபயம் என்ற பொழுதத்தே அபய தானம் ஈதலே கடப்பாடு என்பது" எனும் சொல்லாட்சி தேசிகரின் அபயபிரதான சாரம் எனும் தலைப்பிலும் காண்கின்றோமே! அந்த மணிபிரவாள நூலில் பிரபத்தி (அடைக்கலம்) நெறியின் ஐந்து அங்கங்களையும் விபீஷண சரணாகதியில் காணலாம் என்பார். அவை:

1.அநுகூல்யஸங்கல்பம் - எம்பெருமான் திருவுள்ளத்திற்கு உகந்தவற்றையே செய்வதாய் உறுதிகொள்ளல்.

2.ப்ராதிகூல்யவர்ஜனம் - எம்பெருமான் திருவுள்ளத்திற்கு விபரீதமானவற்றைச் செய்யாதிருக்க உறுதிகொள்ளல்; அல்லது அவற்றைச் செய்ய எண்ணங்கொள்ளாமை; அல்லது அவற்றைச் செய்யாது விடுதல்.

3.மஹாவிசுவாஸம் - அவன் நம்மை ரக்ஷிக்க வல்லவனென்று தேறி தவறாது நம்மை ரக்ஷிப்பானென்று நம்புதல்.

4.கோப்த்ருத்வவரணம் - பக்தியோகம் முதலிய உபாயங்களை அநுஷ்டிக்க சக்தியற்ற தம் விஷயத்தில் அருள் புரிந்து அவ்வுபாயங்களின் ஸ்தானத்தில் நின்று பலன் கொடுக்குமாறு அவனை வேண்டுகை.

5.கார்பண்யம் - பக்தியோகம் முதலிய உபாயங்களின் தமக்கு அதிகாரமில்லாமையையும், எம்பெருமானைத்தவிர வேறு தெய்வத்தினிடமோ, மோட்சத்தைத் தவிர வேறு பலனிலோ பற்றில்லாமையையும் அநுஸந்தித்தல் - அல்லது இவ்வநுஸந்தானத்தால்முன் தமக்கு இருந்த கர்வம் ஒழியப் பெறுதல் - அல்லது எம்பெருமானது கருணை தம்மீது வளர்ந்தோங்கும்படி தாழ்ந்து நின்று அஞ்சலி நமஸ்காரம் முதலியவற்றைச் செய்தல்.

வால்மீகியின் இராமாயணத்தில் ஆழங்கால்பட்டிருந்தாலும், மணிப்பிரவாள நடையிலும் தமிழிலும் எழுதப்போவதெல்லாம் தேசிகரது மனத்தில் குலசேகராழ்வாரின் தில்லை திருச்சித்ரகூடம் பாசுரங்களும், கம்பனது இராமாயணமும் சுழன்று கொண்டிருந்திருக்கும். விபீஷண சரணாகதியின்

ஏற்றத்தைக்கூறும்போது, கம்பனது செய்யுட்கள் அங்கே சில கதிர்களை வீசி ஒளி பாய்ச்சியிருக்கும். இராமனது திருவடியசூடிய அரசன் விபீஷணன் அங்கே தோன்றியிருப்பான்:

"வீரனை நோக்கி, அங்கம் மென்மயிர் சிலிர்ப்ப, கண்ணீர்
வார, நெஞ்சு உருகி, செங்கண் அஞ்சன மலை! அன்று ஆகின்
கார்முகில் கமலம் பூத்தது! அன்று, இவன்கண்ணன் கொல்லாம்;
ஆர் அருள் சுரக்கும் நீதி அற நிறம் சுரிதோ? என்றான்.

"மின்மினி ஒளியின் மாயும் பிறவியை வேரின் வாங்க,
செம்மணி மகுடம் நீக்கி, திருவடி புனைந்த செல்வன்
தம்முனார், கமலத்து அண்ணல் தாதையார், சரணம் தாழ,
எம்முனார் எனக்குச் செய்த உதவி என்று ஏம்பலுற்றான்."

"கரங்கமீ சுமந்து செல்லும் கதிர் மணி முடியன், கல்லும்
மரங்களும் உருக நோக்கும் காதலன், கருணை வள்ளல்
இரங்கினன் நோக்கும்தோறும், இரு நிலத்து இறைஞ்சுகின்றான்;
வரங்களின் வாரி அன்ன தாள் இணை வந்து வீழ்ந்தான்."

இராமனைப்போன்றவரிடம் அடைக்கலம் பெற்ற விபீஷணன் பாக்கியசாலியா, விபீஷணன் போன்ற பக்தன் கிடைத்த இராமன் பாக்கியசாலியா என்று யோசிக்கவில்லை. கம்பனையும் வேதாந்த தேசிகரையும் இயக்கிய தமிழன்னை பாக்கியசாலி; இந்த திகட்டாத தேனை இன்றும் உண்டு மகிழும் நாம் பாக்கியசாலிகள். ●

(ஸ்ரீ ரமதேசிகாசார்யர், ஸ்ரீ தேசிகப் பிரபந்தம் (1982), பக். 248)

கம்பனும் கேரளமும்

- *முனைவர் கி. நாச்சிமுத்து*

கேரளமும் இராமாயணமும்

கேரளத்திற்கும் இராமாயணத்திற்கும் உள்ள தொடர்பு மிகவும் பழையது. சேர இளவரசராகிய இளங்கோ அடிகள் இராமாயணக் கதைக் குறிப்புகளைச் சிலப்பதிகாரத்தில் வழங்கியிருக்கிறார். அதன் பின் குலசேகராழ்வார் இராமாயணத்தைத் தாலாட்டாகவும் தயரதன் புலம்பலாகவும் முழுக்கதையாகவும் (தில்லைச் சித்திர கூடப்பத்து) புதிய ஒரு கோணத்தில் பதிகங்களாகப் பாடியிருப்பது ஒரு புதுமை. அதுதான் வடமொழி தவிர்ந்த பிறமொழி இராமாயணங்களில் முதன்மையானது என்று அண்மையில் குலசேகரர் பிரபந்தங்களை மலையாளத்தில் மொழி பெயர்த்துள்ள மலையாளக் கவிஞர் பேராசிரியர் புதுசேரி இராமச்சந்திரன் குறிப்பிடுகிறார். (பெருமாள் திருமொழி மலையாள மொழிபெயர்ப்பு).

கம்பனும் கேரளமும்

கம்பர் தம் இறுதி நாட்களில் மலைநாடு வந்து கம்பராமாயணச் சொற்பொழிவுகள் நிகழ்த்தியதோடு தான் வணங்கிய கலைமகள் சிலையைத் சேரமன்னர்களிடம் ஒப்படைத்தாகவும் வரலாறுகள் உண்டு. அந்தக் கலைமகள் சிலை இன்றும் நவராத்திர விழாவின்போது பத்மநாபபுரத்திலிருந்து திருவனந்தபுரத்திற்குக் கொண்டு வரப்பட்டு வழிபாடுகள் தொடக்கம் செய்யப்படுகின்றன. மறைந்த திருவாங்கூர் மன்னர் சித்திரைத் திருநாள் அவர்களை ஒரு முறை நேரில் திருமுகம் கண்டபோது கம்பரைக் கடைசி காலத்தில் போற்றியவர்கள் நாங்கள்தான். அதற்கு நன்றிக் கடனாகவே அவர் வழிபட்ட சரஸ்வதி சிலையை எங்கள் முன்னோர்களிடம் ஒப்படைத்தார். இதைப் பற்றி ஆராய்ச்சி மேற்கொள்ளுங்கள் என்று என்னைப் பணித்தார்கள்.

கம்பராமாயணம் குறள் போன்றவை மலையாள எழுத்தில் எழுதிய ஏடுகள் மலையாளக் குடும்பங்களில் காணப்பட்டதாக மலையாள இலக்கிய வரலாற்றாசிரியர்கள் குறித்துள்ளதை முனைவர் ப. பத்மநாபன் தம்பி தன்னுடைய கம்பன் எழுத்தச்சன் இராமாயணங்கள் (Ramayanas of Kampan and Ezhuthachan. Thuckalay, 1996) என்ற நூலில் எடுத்துக்காட்டியுள்ளார்.

பழங்காலத்தில் கம்பராமாயணச் செய்யுட்கள் கூத்துக் கவிகளாக இராமாயணச் சொற்பொழிவுகளில் மேற்கோள் காட்டப்படுமாம்.

கம்பராமாயணத்தை ஒட்டியே கேரளத்தில் வழங்கும் தோல் பாவைக்கூத்து அமைந்துள்ளதையும் காண்கிறோம்.

எனவே, கேரளத்தில் காணப்படும் கம்பராமாயண ஏட்டுச்சுவடிகள் (தமிழிலும் மலையாளத்திலும் எழுதியவை) கூத்து, சித்திரம், சிற்பம் முதலியவற்றில் காணப்படும் கம்பராமாயண வடிவங்கள், கம்பரும் மலைநாடும் போன்ற இவற்றைப்பற்றி ஆய்வுகள் மேற்கொள்ளப்பெற வேண்டும்.

இந்நிலையில் கம்பனுடைய காவியம் கேரள நூல்களை எவ்வாறு பாதித்துள்ளது என்ற ஆய்வு இன்னொரு நிலையில் முக்கியத்துவம் பெறுகிற ஆய்வாகும்.

இதை இரண்டு நிலையில் காணலாம். 1 முதலாவது மலையாள இலக்கியத்திலும் பிறவற்றிலும் காணப்படும் கம்பனைப்பற்றிய வெளிப்படையான குறிப்புகள். 2. இரண்டாவது கம்பன் சொல்லும் பொருளும் மலையாள இலக்கியத்தில் தாக்கம் செலுத்தியமை.

மலையாள இலக்கியத்தில் கம்பனைப்பற்றிய வெளிப்படையான குறிப்புகள்

மலையாளத்தில் கி.பி.13 நூற்றாண்டில் தோன்றினதாகக் கருதப்படும் திருநிழல் மாலை (எம்.எம்.புருஷோத்தமன் நாயர் பதிப்பு 1981) என்னும் நூல் தன் பொருளாலும் மொழியாலும் தமிழ் மரபின் தொடர்ச்சியை நன்கு வெளியிடுகிறது. இது திருவாறன்விளை என்ற ஆழ்வார் பாடல் பெற்ற தலத்தில் உள்ள இறைவன் பற்றிய மாலை இலக்கியம் ஆகும். இவ்வூர் இன்று ஆறன்முனை என்ற இன்றழைக்கப்படும். இந்நூலில் அமையும் பின் வரும் அவையடக்கப் பகுதி தமிழ் மரபின் தொடர்பைச் சுட்டுவதையும் அதில் கம்பன் பெயர் இடம் பெறுவதையும் காண்க :

“ நால்க்கடல் சுழந்நலெய்க்கும் ஞாவலம் புவனமேந்நும்
வாக்குசேர் கழெனி தன்னில் வான்மீகி யுழவென் வந்து
கவிதெயாம் வித்து கோரிக்கருத்தொரு விதத்திதத்தில்
விவிதமாய் முளத்தெழுந்து விரிந்து போய்ப்பரந்தகாலம்
பராசரதனெயன் கண்டு பகுத்தொரோ புராணமாகி
தராதலம்தன்னில் பின்னெ சமப்பொடு வேலி கெட்டி
கதிர்ப்பெடவிளெயும் காலம்காளிதன் தூதர் வந்திங்
ஙூதித்தெழும் கவித மன்னெரோரோருத்தெர் கொண்டார்
அவிட நின்னங்ஙூமிங்ஙூமரிகாலில் பெறுக்கிக்கூட்டி
சமெயமுற்றகத்தியென்தான் தமிழ்க்கவி நெறியுரெய்த்தான்
அத்தமிழ்க்கவித தன்னெயழகெழு கம்பநாடென்

வித்தரித்தவெனி தன்னில் விலவேறில்லெனச்சமெத்தான்
தலமெழும் நலம் பொலிந்த தமிழ்க்கவி தந்தபின்ன
மலநாடு தன்னில் நிந்து மறுவறும் குறுமூர் பள்ளி
தங்ஙளாலாய வண்ணம் சமத்துடென் நிகென்த்தினாரே"

(திருநிழல் மாலை -மலையாள வடிவம்)

திருநீழல் மாலை என்ற நூலின் கண்உள்ள மலையாள பாடலின் தமிழாக்கத்தைக் கீழே காண்போம்.

"நாற்கடல் சுழன்றலைக்கும் நாவலம் புவெனமென்னும்
வாக்குசேர் கழனி தன்னில் வான்மீகி யுழவன் வந்து
கவிதையாம் வித்து கோரிக்கருத்தொடு விதைத்திதத்தில்
விவிதமாய் முளைத்தெழுந்து விரிந்து போய்ப்பரந்தகாலம்
பராசரதனையன் கண்டு பகுத்தொரோ புராணமாகி
தரா தலம் தன்னில் பின்னே சமைப்பொடு வேலிகட்டி
கதிர்ப்படவிளையும் காலம் காளிதன் தூதர் வந்திங்
குதித்தெழும் கவிதை மன்னரோரோருத்தர் கொண்டார்
அவ்விடம் நின்னங்குமிங்கு மரிகாலில் பெறுக்கிக்கூட்டி
சமையமுற்றகத்தியன் தான் தமிழ்க்கவிநெறியுரைத்தான்
அத்தமிழ்க்கவிதை தன்னையழகெழு கம்பநாடன்
வித்தரித்தவஹி தன்னில் விலைவேறில் லெனச்சமைத்தான்
தலமெழும் நலம் பொலிந்த தமிழ்க்கவி தந்தபின்னே"

இந்த அவையடக்கத்தில் வடமொழி தமிழ் இலக்கிய மரபின் தொடர்ச்சியாக தன் இலக்கிய முயற்சி அமைவதாகப் புலவர் பேசுகிறார். வான்மீகி, வியாசர், காளிதாசன் தோற்றுவித்த இலக்கியப் மரபைத் தமிழில் அகத்தியர் கம்பர் போன்றவர்கள் தொடர்ந்தார்கள் என்கிறார். மேலும் மலைநாட்டிலுள்ள குறுமூர்ப்பள்ளியைச் சேர்ந்தோர் தொடர்ந்தார்கள் என்கிறார். இங்கு மலை நாட்டு மொழிக் கவிதை தமிழ் மரபை ஒட்டியது என்பதைப் புலவர் நிறைவு கூர்கிறார். குறுமூர்ப்பள்ளி என்பது தொடக்க கால மலைநாட்டு நாட்டுமொழிப்புலவர் குழுவைக்குறிக்கலாம் அல்லது குறுமூர்ப் பட்டதிரிப்பாடு என்ற நம்பூதிரி பரம்பரையைக் குறிக்கலாம் என்பர் மலையாள அறிஞர்.

மலைநாட்டு நாட்டு மொழிக் கவிதை தமிழ் மரபை ஒட்டியது என்ற இக்கருத்து வேறு சில குறிப்புகளாலும் புலவர்களால் நினைக்கப்படுகிறது.

இராமசரிதத்தில் (13 நூர்) அகத்தியரைத் தமிழ்க்கவிபடுத்த முனி (1-9) என்று கவிஞர் பாடுவது கம்பன் காட்டும் தமிழ் மரபை ஒட்டியது ஆகும். என்பதை இங்கு நினைவுபடுத்தலாம்.

கி.பி.15 ஆம் நூற்றாண்டில் ஆயிப்பிள்ளை ஆசான் என்ற புலவர் எழுதிய இராமகதப்பாட்டு என்ற இராமாயண நூலின் குழித்துறைப்பிரதியில் உள்ள பாடல் கீழ்க்கண்டவாறு அமைகிறது.

"அருமற கற்ற காளிதாரும் போஜராஜர்
அறிவெழுமொட்டக் கூத்தர் சங்கராச்சார்யார்மாரும்
நிரணத்து கண்ணன் கம்பர் துஞ்சத்திலச்சன்மாரும்
நலமொடெனெல்லா பேர்க்கும் நானவர்க்கபயம் புக்கேன்"

(இராமகதப்பாட்டு - தொகுதி 1, 1970 பக் 55 குழித்துறைப்பிரதியில் உள்ள பாடல்)

இத்செய்யுளில் கம்பர் ஒட்டக்கூத்தர் பற்றிய குறிப்புள்ளதை நோக்குக. இதில் இராமாயணப் பொதுமை வழி வந்த தமிழ் மலையாளப்பொதுமையும் பேசி தமிழ் மலையாள நெருக்கத்தை சுட்டிக்காட்டுவதாக அமைகிறது. இன்னும் இதை ஒத்த ஒரு செய்யுளின் பகுதி தமிழ் மலையாள நெருக்கத்தை காட்டுவதாக அமைவதையும் நோக்குக.

"பரன் கதகள் கம்பர் பந்திராயிரத்தால்
பகர்ந்த கதை கண்ணரில் பாதியாகை"

(மேலே கண்ட நூல் பக்.57.)

கம்பர் பன்னிரண்டாயிரம் பாடலில் சொன்னதைக் கண்ணசர் அதில் பாதியாக்கிப் பாடினார் என்பது இதன் பொருள். இராமகதைப் பாட்டில் காணப்படும் கீழ்க்கண்ட

"செந்தமிழறிந்துணர்ந்தவர்கள்
முன்பிலிக்கதையை
திடமொடு புகழ் வதினருள்
குரவார்களும்"

என்ற பகுதி தன் நூல் தமிழ் பேசுவோர் மலையாளம் பேசுவோர் இரண்டும் கலந்து பேசுவோர் எனப்படும் பலவகையினருக்கும் பொதுவானதாக அமைகிறது என்று ஆசிரியர் கருதுவது போலத் தோன்றுகிறது. இங்கெல்லாம் கம்பன் இருமொழிக்கும் பொதுவான புலவர் என்ற கருத்தாக்கம் இருந்ததைக் காண்கிறோம்.

மலையாள இலக்கியத்தில் கம்பன் சொல்லும் பொருளும்

அவ்வகையில் முனைவர் பத்மநாபன் தம்பியின் கம்பன் எழுத்தச்சன் இராமாயணங்கள் (Ramayanas of Kampan and Ezhuthachan,Thuckalay 1996) ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளது . இது பற்றி அவர் தமிழில் கம்பன் எழுத்தச்சன் , இராமாயணங்கள் (1993) என்ற நூலை இயற்றியுள்ளார். கம்பராமாயணம் இராமசரிதம் ஒப்பாய்வு என்ற பேராசிரியர் ச. மீனாட்சிநாதன் அவர்கள் எழுதிய இன்னொரு நூல் மலையாளத்தின் பழைய இராமாயணத்தைக் கம்பனோடு ஒப்பிட்டுரைக்கிறது.

இன்னும் இவ்வகையில் கேரளப்பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் ஆய்வாளர் கலைச் செல்வன் கண்ணச ராமாயணத்தையும் ஆய்வாளர் விஜயகுமார் இராமகதைப்பாட்டையும் தமிழில் ஒலி பெயர்ப்புச் செய்து உரைக்குறிப்புகள் ஆராய்ச்சிக்குறிப்புகள் முதலியவற்றுடன் வெளிக்கொணர ஆராய்ச்சி மேற்கொண்டுள்ளார்கள். இவற்றிலும் கம்பன் செல்வாக்கை அறிய உதவும் குறிப்புகள் சேர்க்கப்படுகிறது.

பேராசிரியர் ச.மீனாட்சிநாதன் அவர்கள் எழுதிய கம்பராமாயணம் இராமசரிதம் ஒப்பாய்வு நூலில் இத்தகைய ஒப்பாய்வுகளின் முன்னோடிகளைப் பற்றியும் கம்பனும் இராமசரித ஆசிரியரான சீராம கவியும் வாழ்ந்த காலம் சூழல் முதலியன பற்றியும் ஆராய்ந்து விட்டு இரண்டு காவியங்கள் பரப்பு போக்கு பாத்திரங்கள் இவைபற்றி வால்மீகத்தையும் முன்னிறுத்தி ஒரு முக்கோண ஆய்வு செய்கிறார். இரு காவியங்கள் பரப்பும் ஒன்றுபடுவது யுத்தக்காண்டத்திலா தலால் போர் நெறிகளையும் படைக்கலங்களையும் பற்றி ஒரு சிறப்புப் பார்வையும் வெளியிடுகிறார். தமிழ்ப்பாட்டு மரபை அடியொட்டிச் சொல்லும் இராமசரிதம் தமிழ்ப் புறத்திணை மரபை வெளியிடவில்லை என்ற கருத்தை ஆசிரியர் கூறுவது கருதத்தக்கது. புறப்பொருள் வெண்பாமாலை எழுதிய ஐயனாரிதனாரைப் போலவே இராமசரித ஆசிரியரான சீராம கவியும் ஒரு சேர மன்னராவார் என்பதை நினைக்கும் போது இது வியப்பாகவே உள்ளது. இந்நூலில் காப்பியங்களின் யாப்பமைதி என்ற அத்தியாயம் இறுதியில் சேர்க்கப்பட்டுள்ள தெரிந்தெடுத்த இராமசரிதப்பாடல்கள், யாப்பமைதி,போர் பற்றிய விவரங்கள அடங்கிய பட்டியல்கள் இன்னும் நூலினுள் கொடுக்கப்பட்டுள்ள பல ஒப்பீட்டு அட்டவணைகள் போன்றவை தமிழ் மலையாள இலக்கிய வரலாற்றாராய்ச்சியாளருக்கு ஒரு நல்ல விருந்தாகும்.

இப்படியெல்லாம் இரண்டு உடன் பிறப்பு மொழிகள் இலக்கியங்களின் இரத்த உறவை விளங்கிக் கொள்ளப் பேராசிரியர் ச.மீனாட்சிநாதன் ஆய்வு துணைசெய்கிறது. அவர்கள் இன்னும் இந்த ஒப்பாய்வைச் சிறு சிறு

இலக்கியரசனைக் கட்டுரைகளாகவும் எழுதி வெளியிட்டால் பயனுடையதாக இருக்கும். அத்துடன் இராமசரிதத் தமிழ்ப் பெயர்ப்பை வெளியிடவும் ஏற்பாடு செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். காலஞ் சென்ற பேராசிரியர் மா.இளையப்பெருமாள் (1924-84) இராமசரித நூலைத் தமிழில் ஒலிப்பெயர்ப்பு செய்து விரிவான சொற்பொருள் குறிப்புகள் ஆராய்ச்சி முன்னுரை இவற்றுடன் தயாரித்து வைத்திருந்தார். அதைச் சென்னையில் வெளியிட காலஞ் சென்ற பேராசிரியர் ந.சஞ்சீவி அவர்கள் ஒரு முறை எடுத்துச்சென்றார். அதை வெளியிட அவர் ஏற்பாடு செய்தாரா என்பது தெரியவில்லை. ஆனால் அது வெளியிடப் பெறவில்லை என்பது மட்டும் தெரிகிறது .அந்தச் கையெழுத்துப் பிரதி யார் கையில் இருக்கிறது என்பதும் தெரியவில்லை.ஒன்று வெளியிடப்படவேண்டும் அல்லது அத்தகைய ஒரு நூலைத் தயாரித்து பேராசிரியர் ச. மீனாட்சிநாத பிள்ளை அவர்கள் வெளியிடவேண்டும். அந்த முயற்சியில் அவர் இறங்கியிருக்கிறார். என்று நினைக்கிறேன்.

கண்ணச ராமாயணமும் தமிழ் மரபும்

இராமசரிதத்தில் முதற்கண் அமையும் விநாயகர் வணக்கத்தின் முதல் இரண்டடிகளில் தமிழ்ச் சொல்லும் பொருளும் எப்படி அமைகின்றன என்பதைப் பாருங்கள்:

" கானனங்களில் அரன் களிறுமாய்க் கரிணியாயக்
கார்நெடுங் கண்உம தம்மில் விளையாடி நடன்ற அன்று
ஆனனம் வடிவு உள்ள ஆன வடிவாய் அவதரித்த
ஆதியே நல்லவிநாயகன் எனும் ஓர் அமலனே..."

(இராமசரிதம்)

என்று சீராம கவி பாடுவதற்கு மூலம் தேவாரப்பாடல்களிலே காணப்படுகிறது. கி.பி.7 ஆம் நூற்றாண்டில் சம்பந்தப் பெருமானது திருவலி வலம் தேவாரப்பதிகத்திலுள்ள முடுகோசையில் அமைந்த செய்யுளை ஒத்திட்டுப்பாருங்கள்:

"பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தன தடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே"

(திருவலி வலம் தேவாரப்பதிகம்)

கம்பராமாயணம்-இராமசரிதம்

இராவணன் இந்திரசித் இறந்த அவலத்தைச் சொல்லும் இராமசரிதப் பாடலையும் கம்பன் பாடலையும் ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

"எனக்கு நீ சடங்கினாலே இயற்றும் ஒண்கருமம் எல்லாம்
நினக்கு ஞான் செய்யுமாறு நிறுத்திவைத்து உயிரோடு என்னெ
கனத்து எழும் வென்றி நல்கிக் கருதலர்க்கு இளமையும் வாழ்ந்து
இனிப்பமாய் இருந்ததும் விட்டு எங்கேபோய்மறைந்தா(ய்)வாலா?"
(இராமசரிதம்:73:10)

"சினத்தொடும் கொற்றம் முற்றி இந்திரன் செல்வம் மேவி
நினைத்தது முடித்து நின்றேன்: நேரிழை ஒருத்தி நீரால்
எனக்கு நீ செய்யத்தக்க கடன் எலாம், ஏங்கி ஏங்கி
உனக்கு நான் செய்வதானேன்! என்னின் யார் உலகத்து உள்ளார்"
(கம்பராமாயணம் 6:27:39)

கம்பராமாயணம் - கண்ணசராமாயணம்

கண்ணசர் கம்பனைக் கற்றிருக்கிறார். ஆனால் அவர் மனப்போக்கில் தம் இராமாயணத்தை ஆக்கியிருக்கிறார். இதற்கு ஒரு எடுத்துக்காட்டுக் காட்டி விளக்கலாம். அயோத்தியா காண்டம் கைகேயி சூழ்வினைப்படலத்தில் கைகேயி இராமனிடம் இரு வரங்களைப்பற்றி சொன்னபோது இராமன்பேசிய பேச்சை ஒத்துப்பார்க்கலாம்.

"மன்னவன் பணியன்றாகின் நும் பணி மறுப்பெனோ? என்
பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்ற தன்றோ.
என் இனி உறுதி அப்பால்? இப்பணி தலைமேல் கொண்டேன்
மின் ஒளிர் கானம் இன்றே போகின்றேன் விடையும் கொண்டேன்"
(கம்ப.அயோத்.கைகேயிசூழ்,114)

"இதுசெய்வான் மாதாவே பணியில்லேது
மெனிக்கது நில்க்க பிதாவின்
னதிசுகமா யென்னோடிது சொல்வா
னருதாகின்னதினெந்தேமூலம்
விதிவழி ராஜ்யம்வாழ் நீ யென்று
விளிச்சென்னோ டுரசெய்ததுபோலே
இதுபொழுதே போயடவியி வாழ் கென்னெந்து
தெளிஞ்ஞருளிச் செய்யாய்வான்"
(கண்ணசராமாயணம். அயோத்.121)

என்ற பகுதியை ஒத்த நோக்குக. இதில் கம்பன் சொல்லாட்சி போன்ற பகுதி பகுதியை நோக்குக.

"இது செய்வான் மாதாவே பணியில் லேதுமெனிக்கு."

கம்பராமன் அதிகம் பேசவில்லை, கண்ணச ராமன் அதிகப் பிரசங்கம் செய்கிறான். முடிசூட்டிக் கொள் என்று உரை செய்தது போல நீ காட்டுக்குப் போய் வாழ் என்று ஏன் வெளிப்படையாக அரசனால் சொல்லமுடியவில்லை என்கிறான்.

கண்ணசர் தமிழ் நூல்களைக் கற்றவர் என்பதற்கு வீரசோழிய அவை யடக்கத்தில் வரும் கருடன் சென்ற நீள் விசும்பில் ஈயும் பறக்கும் (2:3) என்ற கருத்தைத் தம் அவையடக்கத்தில் ஆண்டிருப்பதைக் கொண்டு ஊகிக்கலாம். அல்லது இருவருக்கும் பொதுவான மூலத்திலிருந்து இவற்றைப் பெற்றிருக்கலாம்.

கம்பராமாயணம் - எழுத்தச்சன் அத்யாத்ம ராமாயணம்

முன் கண்ட இராமசரிதம் கண்ணச ராமாயணம் போன்றவை மணிப்பிரவாளம் பாட்டு என்ற இரண்டு மலையாள இலக்கிய மரபில் தமிழ்ப்பாட்டு மரபோடு நெருக்கமுடைய பாட்டு மரபின் சாயல் மிக்கவை. 15, 16ஆம் நூற்றாண்டில் எழுந்த எழுத்தச்சனுடைய அத்யாத்ம ராமாயணம் சற்று விலகி மணிப்பிரவாள நெறியோடு மிகுந்த தொடர்புடையது. எழுத்தச்சனுக்குத் தமிழில் பயிற்சி உண்டு . அவருடைய கவிதையையும் கம்பன் கவிதையையும் ஒப்பிட்ட பத்மநாபன் தம்பி இரண்டிற்குமிடையே உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை எடுத்து ஆராய்ந்துள்ளார்.

எழுத்தச்சன் கம்பனைக் கற்றவர் என்பதற்கு ஒரு ஒற்றுமைப்பகுதியைக் காட்டலாம்.

"கண்டனன் கற்பினுக்கு அணியைக் கண்களால்
தெண்திரை அயல்கடல் இலங்கைத் தென்னகர்
அண்டர் நாயக இனி துறத்தி ஐயமும்
பண்டுள துயரும் என்று அனுமன் பன்னுவான்."

எழுத்தச்சன்

" புனர தஹரீஸ்வரன் தன்னெயும்வந்திச்சு பூர்ண்ணாமோதம் பறஞ்ஞான சனாத்மஜன், கனிவினொரு கண்டேஹம் தேவியெத்தத்ர கர்ப்பூரேந்திராலயே ஸங்கடமென்னியே "

மீண்டும் இராம வணங்கி அஞ்சனை மகனாகிய அநுமன் மகிழ்ச்சியோடு சொன்னான். கனிவினொடு நான் தேவியை இராவணன் மனையில்...

"இங்கு கண்டனன் கற்பினுக் கணியை" என்ற கம்பனின் சாயல் "கனிவினொடு கண்டேன் அஹம் தேவியே" என்ற எழுத்தச்சன் அடிகளில் நிழலிடுகிறது. சீதையைக் கற்பினுக்கணி எனக் கம்பன் பரியாய மொழிகளில் சொல்ல எழுத்தச்சன் தேவி என்று மட்டும் கூறுகிறான். தென்திரை அலைகடல் இலங்கைத் தென்னகர் என்பதைக் கர்ப்பூரேந்திரனின் ஆலயத்தில் என எழுத்தச்சன் அமைக்கிறார். இப்படி இவற்றிற்கிடையே உள்ள சொல்லையும் பொருளையும் ஒற்றுமை வேற்றுமைப்பட இலக்கியச் சுவைஞர்கள் ஆராய்ந்து சொல்லவேண்டும்.

கேரளத் தோல்பாவைக்கூத்தில் கம்பராமாயணம் .

கேரளத்தில் பாலக்காடு மாவட்டத்தில் கம்பராமாயணம் தோல்பாவைக்கூத்தாகப் சுமார் முந்நூறு ஆண்டுக்கும் மேலாக நடந்துவருகிறது.புத்தூர், மாத்தூர், கூத்தனூர், புதுஸ்ஸேரி , கையிலாயாடு, கூனத்தர போன்ற இடங்களில் இக்கலையை வளர்த்துவரும் புலவர் குடும்பங்கள் இருக்கின்றன. அண்மைக்காலம் வரை கிருஷ்ணன் குட்டிப் புலவர் என்பவரே இதை நடத்தி வந்தார். அவர் மறைவிற்குப் பின் அவர் குடும்பத்தைச் சேர்ந்த இராமச்சந்திரப்புலவர் போன்றவர்கள் இதை நடத்தி வருகிறார்கள். இவர்கள் முன்னோரான சின்னத்தம்பிப்புலவரே இதை உருவாக்கியவர் என்று சொல்கிறார்கள். பிராமணர் அவையில், பிராமணரல்லாதார் இராமாயணம் கேட்க அனுமதிக்கப்படாததைக் கண்ட இவர் அதற்கு மாற்றாக இதை அமைத்ததாக ஒரு கருத்து வழங்கி வருகிறது. இவர் மரபினர் வெள்ளாச் செட்டி பரம்பரையினராவர். நாயர் சாதியினரும் இக்கூத்து நிகழ்ச்சியை நடத்துபவர்களாகக் காணப்படுகின்றனர். இக்கூத்து பத்ரகாளி கோவிலில் நடத்தப்படுகிறது. இராமாயணத்தை 21 பகுதிகளாகப் பிரித்து நிகழ்த்துகிறார்கள். இதற்குரிய பனுவல் ஆடல் பற்று என அழைக்கப்படுகிறது. இது பாடலும் வசனமுமாக அமையும். பாடற் பகுதி கம்பராமாயணத்தில் உள்ள 12116 பாடல்களில் 2500 பாடல்கள் (2200?) பாடல்களை அடிப்படையாகக் கொண்டது. இவை எழுதிய ஏட்டுச் சுவடிகள் இக்குடும்பத்தாரிடம் காணப்படுகின்றன. அதற்கு உரை போன்ற நடையில் அமைகிறது. இது வாய்மொழியாகப் புலவர் திறனுக்கேற்ற மாற்றங்களுடன் வேறு கவிதைகள் சுலோகங்கள் போன்றவற்றுடன் வழங்கி வருகிறது. (இவற்றில் தாயுமானவர் வள்ளலார் பாடல்கள் போன்றவை எடுத்து ஆளப்பட்டிருப்பதை காணலாம்.)

இக்கூத்துக்குரிய 130 வகைப்பாவைகளை இவர்களே செய்து கொள்கிறார்கள். இவர்கள் ஆடும் அரங்கு கூத்து மாடம் என அழைக்கப்படுகிறது. பாலக்காடு மாவட்டத்தில் 63 கூத்து மாடங்கள் இருந்தன. இதை நடத்துபவர் மாடப்புலவர் என அழைக்கப்படுவர். இக்கூத்து நடத்தும் முறை பற்றிய மரபுகள் விளக்கமாக

உள்ளன. அவற்றை கே.எல்.கிருஷ்ணன் குட்டிப்புலவர் மலையாள எழுத்தில் வெளியிட்டுள்ள தோல்பாவைக்கூத்து முதல் தொகுதி பாலகாண்டம் 1897 என்ற நூலின் முன்னுரையில் காணலாம். இவரே அயோத்தியா காண்டத்தைத் தமிழ் எழுத்தில் தில்லி சங்கீத நாடக அகாதமி வழி 1983 இல் வெளியிட்டுள்ளார்.

இங்கே தோல்பாவைக்கூத்துக்குரிய அடிப்படைப்பனுவலாக அமையும் கம்பராமாயணத்தில் இயல்புகளை மட்டும் பேசலாம். மேலே சொன்னபடி இவர்கள் தேர்ந்து கொண்ட 2500 பாடல்களில் சில கம்பராமாயண அச்சுப்பிரதியில் இல்லை. பாடவேறுபாடுகளும் காணப்படுகின்றன. இவர்கள் கையில் உள்ள அனைத்துப் பாடல்களும் வெளியிடப்பெற்றால் ஆய்வாளர்க்குப் பயனுடையதாக இருக்கும்.

கம்பராமாயணத்தில் பாலகாண்டம் 23 படலம் கொண்டு அமைந்துள்ளது. ஆனால் வெளிவந்திருக்கிற பாலகாண்டம் தோல்பாவைக்கூத்தில் கீழ்க்கண்ட பதினொரு படலங்களே உள்ளன. 1. திருவவதாரப் படலம் 2. கையடைப் படலம், 3. தாடகை வதைப் படலம் 4. வேள்விப்படலம் 5. அகலிகைப்படலம் , 6. மிதிலைக் காட்சிப்படலம் 7. குலமுறை கிளத்துப்படலம் 8. கார்முகப்படலம், 9. எழுச்சிப்படலம் 10. கடிமணப்படலம் 11.பரசுராமப்படலம், விடுபட்ட ஏனைய 12 படலங்களும் வருணனைப் பகுதிகளாக உள்ளன என்பதைக் குறிப்பிட வேண்டும். மாதிரிக்காக பார்த்த மிதிலைக் காட்சிப்படலத்தில் 17 பாடல்களே பாவைக்கூத்தில் உள்ளன. ஆனால் கம்பனில் 157 பாடல்கள் உண்டு. பாலகாண்டம் கம்பனில் 1312 செய்யுட்கள். இதில் பால காண்டம் 181 பாடல்களுடன் காணப்படுகிறது.

கம்பராமாயணத்தைப் பின்பற்றினாலும் கூத்தாசிரியர் வேண்டிய வேறுபாடுகளை ஆங்காங்கே செய்து கொள்ளுகிறார். இராமனும் சீதையும் பார்த்துக் கொண்ட சூழல் கம்பனில் சொல்லப்படும் விதம் வேறு. தோல் பாவைக்கூத்தில் சொல்லப்படும் விதம் வேறு. வழிநடந்து சென்றபோது சாளரம் வழி சீதை கண்டதாகக் கம்பர் சொல்கிறார். இதை நாடகப் பாங்காக ஆக்க வேண்டிய கட்டாயம் தோல் பாவைக்கூத்துக்காரருக்கு. அவர் சொல்கிறார்.

“வாராய் ராம, ராகவா, இந்த நீர்த்துறையிலிறங்கி பாதமுகக்ஷாளனங்ளெயும் செய்து அப்பால் போவாம் ராகவ. ”

அதோ பாராய் தேவர்களே பாருங்கள் பாருங்கள் ஸ்ரீராமஸ்வாமியானவரும் ஸீதாதேவியும் அன்யோன்யமாக தர்சனம் செய்யும் அவஸ்தை எப்படி ஸம்பவித்த தென்றால்.

ஸ்வாமியானவர் முகக்ஷாளனம் செய்யும் காலத்தில் சலனமில்லாத ஜலாசயத்தில் அந்த முகசாயயானது பிரதிபலித்து. அதை ஸீதாதேவியானவருடய

கண்ணெதிரிலுண்டான தர்ப்பணத்தில் பிரதிபலிக்க அவரும் ஜன்னல் மார்க்கமாக வெளியில் பார்க்க அவருடைய திருமுகம் ஜலாசயத்தில் காண ஸ்வாமியானவர் ஊர்த்த திருஷ்டியாய் பார்க்க.

" எண்ணரு நலத்தினா ளினய ணின்றுழி
கண்ணொடு கண்ணிணை கவ்வி யொன்றயொன்
றுண்ணவும் நிலைபெறா துணர்வு மொன்றி
அண்ணலும் நோக்கினா ளவளும் நோக்கினாள்"

(கம்பன். மி. கா. படலம்)

அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்

"எண்ணி சங்கல்பிக்க பிரயாசமேறின ஸௌந்தர்ய ஸௌசீலாதிகளான குணாகுணங்களையுடயவளெ ஸீதாதேவி. அந்த ஸீதாதேவி இப்ப்ரகாரேண தனது திருமுகம் வெளியில் போட்டு அதோமுகியாய் ஸ்வாமியும் ஊர்த்த திருஷ்டியாய் பார்க்க அவர் இருவர்களுக்கும் உண்டான (கண்ணொடு..) கண்களான நேத்ரயேந்த்ரியங்கள் இருபேர்களுக்கும் உண்டான நாலு கண்களும் ஒன்றுக்கொன்றிணயாக் கவ்வி அனுபவித்து (உண்ணவும் நிலை.) அவர்கள் பரஸ்பரமாக நேத்ரேந்திரியங்களினால் புஜித்து அவர்களின் ஸ்திரமான புத்திஸமநிலயில் இருந்து தவறி தேவியின் மனோபுத்தி ஸ்வாமியானவரிடத்தில் சென்றுபட்டும் ஸ்வாமியானவருடைய மனோபுத்தி ஸீதாவேியில் சென்று பட்டம் ஐக்யம் பிராபிக்க. (அண்ணலும் ...) அண்ணலான ஸ்வாமியானவரும் தேவியெய் பார்த்தார். தேவியானவரும் ஸ்வாமியாவரை பார்த்தாள். இப்படி இரண்டுபேர்களும் ஒரே விகாரமான மனஸ்தியில்பட்டு ப்ரதம தர்ஸனம் செய்தார் தேவர்களே." என அற்புதமாக கம்பன் பாடல்களின் கருத்தைக் கொண்டு பாவைகூத்தில் வர்ணணை செய்திருப்பது நம்மை பிரமிக்கச் செய்கிறது.

இன்னும் வேண்டிய இடங்களில் கருத்துவிளக்கத்திற்காக பகவத் கீதை நீதி வாக்கியங்கள், ஔவையார் பாடல்கள் போன்றவற்றை ஆள்கிறார். கடவுள் வாழ்த்து முதலிய தொடக்கப்பகுதியில் அருணகிரியார், தாயுமானவர், வள்ளலார் போன்றோர் பாடல்களும் உள்ளன.

அண்மைக்கால முயற்சிகள்

கேரளத்திற்கு கம்பனோடுள்ள உறவில் இடையில் தொய்வு ஏற்பட்டாலும் அண்மைக் காலத்தில் கம்பராமாயணத்தின் பல பாகங்களை எஸ்.கே.நாயர் செய்யுளாக ஆக்கித் தந்துள்ளார். அதைச் சென்னைப் பல்கலைக்கழகம்

வெளியிட்டுள்ளது. அது இன்னும் முற்றுப்பெறவேண்டும். உரைநடை வடிவில் மலையாளத்தில் ஆக்கும் முயற்சிகள் முன்பே நடந்துள்ளன. அவற்றிலுள்ள குறைகளைக் கண்டு பொறுக்காது தொண்ணூறைத்தாண்டிய திரு. கே. ஸ்ரீதரன் நாயர் கம்பன் அறநிலை என்ற அமைப்பை நிறுவி கம்பராமாயணத்தை மலையாளத்தில் ஒலிபெயர்த்து உரை எழுதி வெளியிடும் பெருமுயற்சியில் இறங்கியுள்ளார். இந்தத் தள்ளாத வயதிலும் அவருக்குக் கம்பன்பாலுள்ள ஈடுபாட்டைக் கண்டு நாம் வியக்காமல் இருக்க முடியாது. தன் முயற்சிக்கு முன்னோட்டமாக அவர் கம்பராமாயணத்தை உரைநடை வடிவில் அண்மையில் கம்பராமாயணம் கத்ய சங்கிரகம் (2005) என்ற பெயரில் மலையாளத்தில் வெளியிட்டுள்ளார். அதில் கம்பன் பாடல்களையும் இடையிடையே சேர்த்து விளக்கியுள்ள முறை பாராட்டிற்குரியது. இவருடைய முயற்சி முழுமை பெற வேண்டும் என்பது இலக்கிய ஆர்வலர்கள் அவா. இவருடைய துணைவராக இருக்கும் திரு. பலவேசம் அவர்கள் கம்பனுடைய ஏரெழுபதை சில ஆண்டுகட்கு முன் மலையாளத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டுள்ளதும் பாராட்டிற்குரியதாகும். இத்தகைய பணிகள் தொடரவேண்டும்.

கன்னட நாட்டிலும் கம்பன் கவிதை கற்கப்பட்டதாகத் தெ.பொ.மீ.தமிழும் பிற பண்பாடும் என்ற கட்டுரையில் குறிப்பிடுகிறார். தெலுங்கில் இது பற்றிய செய்தி இல்லை என்கிறார். எனினும் இம்மொழிகளிலுள்ள தொடக்க கால இராமாயணங்களில் கம்பன் தாக்கம் உண்டா என ஒப்பாய்வு செய்தால் விடை கிடைக்கக் கூடும். இரு மொழி அறிஞர்கள் இதில் முயலவேண்டும். ●

❊❊❊❊❊❊

நூலடைவு

1. இராமகதப்பாட்டு தொகுதி 1, பி.கே. நாராயணபிள்ளை, பதிப்பு, கேரளப்பல்கலைக்கழகம், 1970

2. கிருஷ்ணன் குட்டிப்புலவர் கே. எல். அயோத்தியா காண்டம், மத்திய சங்கீத நாடக அகாதமி, தில்லி 1983

3. தோல்பாவைக்கூத்து, முதல் தொகுதி , பாலகாண்டம், கூனத்தர, 1897

4. தெ. பொ. மீ. தமிழும் பிறபண்பாடும், என்.சி.பி.எச்.சென்னை 1973

5. நாச்சிமுத்து கி.மலையாளத்தில் திருக்குறள், வள்ளுவம், 11, நவம்பர் 2000

6. திருவள்ளுவரும் நாராயண குருவும் , ஆய்வுக்கோவை. தொகுதி 32, பகுதி 2.பக் 991-995 தஞ்சாவூர்

7. மேலங்கத்து நாராயணன் குட்டி, சங்க சாகித்திய சரித்திரம், கேரள மொழி நிறுவனம் , 2003 மதிப்புரை மலையாளத்தில் மலையாள சாகித்தியம், தொகுதி 27 பகுதி 1-2 பக்.51-52 தமிழ் மதிப்புரை மலையாளத்தில்.

8. சங்கஇலக்கியவரலாறு சில வேறுபட்ட பார்வைகள், செந்தமிழ், தொகுதி 98 பகுதி 9 செப் 2004 பக் 306-313

9. தமிழ் மலையாள ஒப்பாய்வு களங்கள் , ஆய்வுக்கோவை. தொகுதி 35 பகுதி 2, இக் கால இலக்கிய தொகுதி பக்.162-166 சென்னை 2004

10. சங்க இலக்கியத்தின் பூகோளப்பின்னணி, சங்க இலக்கிய ஆய்வுகளின் செய்தனவும் செய்ய வேண்டுவனவும் , கேரளப்பல்கலைக்கழகத் தமிழ்த்துறை வெளியீடு , 2004 பக், 195-220

11. பாரதியின் கேரளச்சித்திரம், மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக் கழக கருத்தரங்கு அச்சில்

12. லீலா திலகம் கூறும் இலக்கியக் கொள்கைள், தமிழ் கொள்கைகள் இரா.சந்திர சேகரன் முதலியோர். பதிப்பு பாரதியார். பல்கலைக்கழகம். 2004 பக் 1-25

13. கேரளத்தின் தமிழ்க் கொடை, கருத்தரங்கக் கட்டுரை

14. பத்மநாபன் தம்பி ப.கம்பன் எழுத்தச்சன் இராமாயணங்கள் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் , சென்னை ,1993

15. பலவேசம், ஏரெழுபது மலையாள மொழிப்பெயர்ப்பு, திருவனந்தபுரம்

16. புதுசேரி இராமச்சந்திரன், பெருமாள் திருமொழி, மலையாள மொழிப் பெயர்ப்பு, கரண்ட்புக்ஸ் , 2001 .

17. புருஷோத்தமன் நாயர் எம், எம். திருநிழல் மாலை பதிப்பு , கோழிக்கோடு 1981

18. மீனாட்சிநாதன் ச.கம்பராமாயணம் - இராமசரிதம் ஒப்பாய்வு, திருவனந்தபுரம், 2002

19. ஸ்ரீ தரன் நாயர் .கே, கம்பராமாயணம் கத்யசங்கிரகம். கரண்டஸ் புக்ஸ், கோட்டயம், 2005

20. Padmanabhan Thampi. P. Ramayanas of Kampan and Ezhuthachan, Thuckalay 1996, 28.11.2005 (Print 29-30.12.2005)

வாலி வதம் - புதிய பார்வை

- திரு.ஜி .கோபலன் I.R.S

இராம காதையிலே கிட்கிந்தா காண்டத்தில் வரும் வாலி வதைப் படலத்தை படித்த பிறகு நமக்கு ஏற்படும் எண்ணம் என்னவென்றால் - வாலிவதத்திலே இராமன் நடந்து கொண்டது சரியா? அல்லது தவறா? என்பதுதான். ஏனென்றால் இராமன் "நடையின் நின்று உயர் நாயகன்" என்று கம்பனால் சொல்லப்பட்டவன். மேலும் அவன் "அறம் நாறும் மேனியைக் கொண்டவன்".

"சங்கு சக்கரக்குறியுள்ள தடக்கையில் காலில்
எங்கும் இத்தனை இலக்கணம் யாவருக்கும் இல்லையாம்
செங்கண் விற்க்கரத்து இராமனே இத்திரு நெடுமாலாம்"

என்று போற்றப்பட்டவன்.

மேலும் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக சீரிய, சிறப்பான தமிழ்ப்பணி ஆற்றிக் கொண்டிருக்கும், கம்பன் கழகங்களிலே நடைபெறும் நிகழ்ச்சிகளிலே குறைந்தது ஒரு முறையாவது அல்லது பலமுறை "வாலி வதம் சரியே என்றும் அல்ல அல்ல அது தவறு என்றும்". ஒரு தலைப்பைக் கொடுத்து விவாதம் நடத்தாமல் இருந்து இருக்கவே முடியாது என்று யாரும் மறுத்துவிட முடியாது. இராமன் நடந்து கொண்டது தவறுதான் என்றும் அறிஞர் பெருமக்கள் மேடைகளிலே பேசியிருக்கின்றனர். சில நடுவர்கள் அதைத் தவறு என்றும் மற்றும் சிலர் அது சரி என்றும் தீர்ப்பையும் தந்து இருக்கின்றார்கள். மூதறிஞர் ராஜாஜி அவர்களின் பார்வையிலே இந்த நிகழ்ச்சியைப் பற்றிக் கூறும்போது "இராமன் என்கின்ற வெள்ளைத் துணியிலே விழுந்த கரும் புள்ளி" என்று சொல்லி இருக்கின்றார்."

இன்றை வரைக்கும் இதுதான் தீர்ப்பு என்று அறுதியிட்டு உறுதியாகக் கூறுவதை - அனைவராலும் ஒப்புக் கொள்ளும் அளவிற்கு - எந்த ஒரு அமைப்பும் வரவில்லை அல்லது நாம் அதை உருவாக்கவில்லை என்பது நிதர்சனமான உண்மை.

கவிஞன் தான் படைத்த காப்பியத்தின் நாயகன் இது போன்ற ஓர் விமர்சனத்தை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று தெரியாமல் படைத்திருக்க வாய்ப்பே இல்லை. ஒரு வேளை கம்பனுக்கே இராமன் நடந்து கொண்டது சரியா அல்லது தவறா என்கின்ற நிலையிலேயே இந்த நிகழ்ச்சியை விவாதத்திற்குகென்றே வைத்து விட்டுச் சென்றிருக்கின்றானா? என்று கூட எண்ணத் தோன்றும்.

கிட்கிந்தா காண்டத்தை ஒருவேளை கம்பன் - படைக்காமல் இருந்தாலும்

கூட, காப்பியம் எந்த ஒரு தங்கு தடையின்றி அதன் முடிவான இராவணவதத்தில் முற்றுப்பெறும். ஏனென்றால் அது ஏற்கெனவே முடிவு செய்யப்பட்ட ஒன்று. இன்னொரு கருத்தும் அறிஞர் பெருமக்கள் கூறுவார்கள். இராம காதை எழுதி கம்பனுக்கு எவ்வளவு புகழ் கிடைத்ததோ - அதே அளவு அல்லது அதை விட மேலாக - கிட்கிந்தா காண்டம் ஒன்றை மட்டும் அல்லது வாலி வதைப் படலத்தை மட்டும் எழுதியிருந்தாலும் கிடைத்திருக்கும். அந்த அளவிற்கு சிறப்பான அற்புதமான பாடல்களைக் கொண்டது இந்தப் பகுதி.

இந்த நிகழ்ச்சியை ஒரு விவாதத்திற்குத்தான் கம்பன் படைத்திருப்பானா என்று ஆராய்ந்து பார்த்தோமேயானால் - அது இல்லை என்பது தான் தெரியவரும். விவாதத்திற்கு கென்றே சில பாடல்களை கம்பன் தெரிந்தே தன் காப்பியத்தில் படைத்திருக்கின்றான். உதாரணத்திற்கு ஒருபாடல். அயோத்தியா காண்டத்திலே குகப்படலம் - பரதனும் குகனும் சந்திக்கின்ற நிகழ்ச்சி.

" வந்து எதிரே தொழுதானை
வணங்கினான் மலர் இருந்த
அந்தணனும் தனை வணங்கும்
அவனும் அவன் அடி வீழ்ந்தான்
தந்தையினும் களி கூறத்
தழுவினான் தகவுடையோர்
சிந்தையினும் சென்னியினும்
வீற்று இருக்கும் சீர்த்தியான்"

யார் காலில் யார் முதலில் வீழ்ந்து வணங்கினான் - குகன் பரதன் அடியில் வீழ்ந்து வணங்கினான் அல்லது பரதன் அப்படிச் செய்தானா என்பது இன்றைக்கு வரைக்கும் சர்ச்சைக்குரிய விவாதமாகத்தான் இருக்கின்றது. காரணம் கம்பன் கையாண்ட தொடர்தான் "அவனும் அவனடி வீழ்ந்தான்" என்பதுதான் இருவரில் யார் பெரியவன் அரச குலத்திலே வந்த பரதனா?அல்லது வேடர்குலத்திலே வந்த வேந்தனா? என்று வரும் தலை முறையினர் பேசவேண்டும் என்கின்ற எண்ணத்தில் உருவானது தான் இந்தப்பாடல்; இருவரும் பெரியவர்கள் - இருவரும் சமமானவர்கள். யார் யாருக்கும் குறைந்தவர் கிடையாது. பண்பிலே சிறந்தவர்கள் - ஆழ்வார்களாக பாவிக்கப்படுபவர்கள்.

இப்படி எழுதிய கவிஞனுக்கு வாலிவதைப் படலத்தை பற்றிய தன் சொந்தக் கருத்தை எங்காவது சொல்லியிருக்கின்றானா -இராமன் செய்தது சரியென்றும் அல்லது தவறு என்றும் இதற்கு மேலே ஒரு படி சென்று ஒரு வினாவினை தொடுக்கலாம். அது என்னவென்றால் வாலி வதம் ஒரு மங்கல நிகழ்ச்சியா? அல்லது அமங்கல

நிகழ்ச்சியா? இந்த வினாவிற்கு விடை கிடைத்தால் வாலி வதம் என்பதைப் புரிந்து கொள்ள ஒரு வாய்ப்பு உண்டு. கவிஞன் ஏதாவது - எங்கேயாவது - இதைப்பற்றி கூறி இருக்கின்றானா என்கின்ற தேடலின் முடிவுதான் இந்த கட்டுரை.

கல்லாத கலைகள் ஒன்றும் இல்லாதவன் இந்தக் கவிஞன் "நாத் தொய்வில்லா நன்னூற் புலவன்" என்று சிலம்பின் ஆசிரியர் உரையால் ஏத்தலாம் - இந்தக்கவிஞனை. "நீண்ட தமிழால் உலகை அளந்தவன்" என்றும் தென் சொல் கடந்தான் வடசொல் கலைக்கு எல்லை தேர்ந்தான் என்றும் கவிஞனைச் சொல்லலாம்.

இவ்வளவு ஆற்றல் பெற்ற கவிஞன் வாலி வதத்தைப்பற்றி தன் கருத்தைச் சொல்லாமல்விட்டு இருப்பானோ என்று ஆய்விற்கு எடுத்துக் கொண்டால், விடைகிடைத்து விடும். ஒரு இடத்திலே ஓர் சொல்லிலே தன் கருத்தை மறைத்து வைத்திருக்கின்றான் அது என்ன சொல் எங்கே இருக்கின்றது என்பதை பார்ப்பதற்கு முன்பு சிலவற்றை படித்தவிட்டுச் சென்றால்தான் அந்த ஒரு சொல்லை சரியாக புரிந்து கொள்ளமுடியும் .

கம்பனுக்கு தாவர இயல் பற்றி முழுவதும் தெரியும். அதற்கு சான்றுகள் காப்பியத்திலே நிறைய இருக்கின்றது. உதாரணத்திற்கு இரண்டு பாடல்களைப் பார்க்கலாம். முதலாவது இராமன் அயோத்தியை விட்டு கானகம் சொல்லும் போது யார் யார் எல்லாம் - எவை எவை எல்லாம் அழுதன என்று பட்டியல் இடுகின்றான்.

"ஆவும் அழுத அதன் கன்று அழுத அன்று அலர்ந்த
பூவும் அழுத புனல் புள் அழுத கள் ஒழுகும்
காவும் அழுத களிறு அழுத கால் வயப் போர்
மாவும் அழுத அம் மன்னவனை மானவே"

மேலே வரும் பாடலிலே வருகின்ற "அன்று அலர்ந்த பூவும் அழுத" என்கின்ற பதங்கள் மிக அற்புதமானவை. அன்றைக்கு மலர்ந்த பூக்கள் - இராமன் பிரிவை -நினைத்து அழுதனவாம், காரணம்- தாவரங்களும் - அதிலே பூக்கும் பூக்களுக்கும் உயிர் உண்டு என்றும் - நடக்கும் நிகழ்ச்சிகளை புரிந்துக் கொள்ள முடியும் என்பதனையும், உணர்வுகளை வெளிப்படுத்த முடியும் என்பதனையும் உணர்ந்து, அறிவு அமைந்தவனான கம்பன் கூறுகின்றான். மற்றொரு இடம் - பாலகாண்டம் அரசியல் படலத்திலே - தயரதன் ஆட்சி மேன்மையைப் பற்றி சொல்லுகின்ற இடம்.

"வயிரவான் பூணணி மடங்கல் மொயம்பினான்
உயிரெலாம் தன்னுயிர் ஒப்ப ஓம்பலால்
செயிரிலா உலகினில் சென்று நின்று வாழ்
உயிர் எல்லாம் உறைவதோர் உடம்பு ஆயினான் "

எந்த எந்த உயிர்களை தன் உயிர் போல எண்ணி ஓம்பினான் என்பதை இதைவிட அற்புதமாக எந்த ஒரு கவிஞனும் இது வரை கூறியது கிடையாது ஒரு இடத்திலே இருந்து மற்ற இடத்திற்கு சென்று வாழ் உயிர்களையும், ஒரே இடத்திலே நின்று உயிர் வாழும் தாவரங்கள், மரம், செடி, கொடி உயிர்கள் அனைத்தையும் தன் உயிர் போன்று பாவித்தான். தாவரங்களுக்கு உயிர் உண்டு என்கின்ற நுண்ணிய கருத்தை 1200 ஆண்டுகளுக்கு முன்பாகச் சொன்னவன் நம் கவிச்சக்ரவர்த்தி . தாவரங்களை சொன்னவன் அதோடு நிறுத்திக் கொள்ளவில்லை.தாவரங்களின் பயிர்களைப் பற்றியும் தம் காப்பியத்தில் கூறுகின்றான். எந்தப் பயிர்கள் எந்த எந்த சமயத்தில் உபயோகப் படுத்தினார்கள் நம் முன்னோர்கள் என்பதையும் சொன்னவன். உதாரணத்திற்கு இரண்டு பயிர்களை எவ்வாறு கையாண்டு இருக்கிறான் என்பதைப் பார்ப்போம். முதலிலே "எள்" என்கின்ற பயிர் எங்கு எப்போது சொல்லப்படுகிறது. பொதுவாக "எள்" எனப்படும் பயிர் அமங்கல நிகழ்ச்சிகளிலே அதிகம் பயன்படுத்தப்படும். உதாரணத்திற்கு இரண்டு பாடல்கள் ஒன்று - கும்பனும் வீடணனும் போர்க்களத்திலே சந்திக்கின்ற போது. சீதையைக் கவர்ந்துவந்தது தவறு என்று தருமத்தை தன்தனையனுக்கு உரைத்தான் கும்பன். அறிந்த இராமன் கும்பனை உடனே கொன்று விடக் கூடாது என்று முடிவு செய்து, வீடணனை அவனிடத்திலே அனுப்புகின்றான், தன் பக்கம் அவனை வரச் சொல்லி. அதர்மத்தின் பக்கம் அவன் இருக்கின்றான் ஏதோ ஒரு காரணத்திற்காக என்னைப் புரிந்து கொண்டு இந்த இருவரும் சந்திக்கின்ற காட்சியிலே கம்பன் கைத்திறன் ஆச்சரியப்படும் அளவிற்கு இருக்கும் என்பது அறிஞர்களின் கூற்று. இறுதியாக கும்பன் மறுக்கின்றான் அதே சமயம் அவன் தம்பிக்கு - வீடணனுக்கு - சொல்லுகின்றான் - நீ இங்கு இருக்க வேண்டாம். - நீ இராமனிடத்திலே போய் சேர்ந்து நிரந்தரமான அவனுடைய ஆசி பெற்று வாழ்வாயாக என்று கூறுகின்றான். இப்படிச் சொல்லுகின்ற போது மற்றொரு காரணத்தையும் சொல்லுகின்றான். இதயத்தை ஈரமாக்கி விடும் அந்தச் செய்தி என்னவென்றால்

"ஐய! நீ அயோத்தி வேந்தர்க்கு
அடைக்கலம் ஆகி ஆங்கே
உய்கிலை என்னில் மற்று இவ்
அரக்கராய் உள்ளோர் எல்லாம்

எய்கணை மாரியாலே இறந்து
பாழ் முழுதும் பட்டால்
கையினால் எள் நீர் நல்கிக் கடன்
கழிப்பாரைக் காட்டாய்"

வீடணனே - ஏன்தெரியுமா? உன்னை இராமனிடத்திலே அடைக்கலமாக போ என்று சொல்லுகின்றேன் - கேள் - இந்த அரக்கர் குலம் அனைவரும் இராமனது கணையினாலே முழுவதும் அழியப் போகின்றது என்பதை நான் அறிவேன். தம்பியர் இன்றி நம் தனையன் - இராவணன் தரை மேல் மாண்டுகிடப்பான். அவனுக்கு எள் நீர் இறைத்து ஈமக் கடன் செய்வதற்கு நீ ஒருவன் மட்டுமாவது எஞ்சி இருக்கவேண்டும். அதனால் நீ அவனிடத்திலே அடைக்கலமாகச் செல் என்கின்றான். இந்தப்பாடலைக் காண்கின்ற போது கம்பன் 'எள்' என்பதை அமங்கல நிகழ்ச்சிக்கு பயன்படுத்துகின்றான் என்பது தெரிய வரும்.

மற்றொரு இடம் - இராவணன் மாண்டதைக் கண்டு மண்டோதரி புலம்புகின்ற காட்சி. காப்பிய எதிர் நாயகன் வீழ்ந்து கிடக்கின்றான். தரை மீது மண்டோதரி வீழ்ந்து புலம்புகிறாள் சொல்லுவாள்.

"வெள் எருக்கம் சடை முடியான்
வெற்பெடுத்த திருமேனி மேலும் கீழும்
எள் இருக்கும் இடம் இன்றி உயிர்
இருக்கும் இடம் நாடி இழைத்தவாறே
கள் இருக்கும் மலர்க்கூந்தல் சானகியை மனச்
சிறையில் கவர்ந்த காதல்
உள்ளிருக்கும் எனநினைத்து உடல் புகுத்து
தடவியதோ ஒருவன் வாளி"

மண்டோதரி புலம்பலிலே 'எள்' என்றதைச் சொல்லுகின்றாள். இதுவும் அமங்கல நிகழ்ச்சி. அப்படியென்றால் மங்கல நிகழ்ச்சிக்கு ஏதாவது பயிர் உண்டா? அப்படியானால் அது எந்தப் பயிர்? அந்தப் பயிர்தான் உழுந்து (உளுந்து) இராமனின் திருமணத்திற்கு தசரதன் சுற்றமும் சூழ பெருந்திரளாக மிதிலை நோக்கி புறப்படுகின்ற காட்சி. கட்டுக் கடங்காத கூட்டம்.

"உழுந்து இடம் இல்லை உலகம் எங்கணும்
அழுந்திய உயிர்க்கு எல்லாம் அருட் கொம்பாயினான்
எழுந்திலன் எழுந்து இடைபெயறும் சேனையின்
கொழுந்து போய் கொடி மதின் மிதிலை கூடிற்றே"

தயரதன் இன்னும் அரியணைவிட்டு எழவில்லையாம். ஆனால் அதற்கு முன்பாக பெருந்திராளாக சென்ற கூட்டத்தின் முதல ஆள் மிதிலையின் மதில் சுவற்றைத் தொட்டுவிட்டார்கள். அத்தனை பெருந்திரள்; உழுந்தை அந்த கூட்டத்தில் இடையிலே போட்டால் அதுதரை சென்று சேராது என்கின்ற அளவிற்கு பெருங்கூட்டம் என்று சொல்லுவான். வழக்கத்திலே சாதாரணமாக நாம் சொல்லுவது எள்போட்டால் எள் எடுக்க முடியாத அளவு கூட்டம் என்றுதான். ஆனால் கம்பன் அதை மாற்றுகின்றான். எள் என்பது அமங்கல நிகழ்ச்சிக்கு பயன்படுத்துவதால் உழுந்து என்கின்ற ஒருபயிரை மங்கலநிகழ்ச்சிக்கு சொல்லுகின்ற இடத்திலே பயன்படுத்துகின்றான்.

அடுத்த பாடல் - அது எங்கே? எப்போது?அதுதான் நம் ஆரம்ப வினாவிற்கு விடைதரப் போகும் இடம்.

"வாலி என்கின்ற வரம்புஇலா ஆற்றலானை
சிறியன சிந்தியா தவனை
பொய்யுரையாத புண்ணியனை
நாலு வேதத்தையும் வேலியாக நின்றவனை
சிந்தையாலும் செய்கையாலும் ஒரு தீவினை செய்திலாதானை
சுழலும் வேலையைக் கடைந்த தோளினானை
சாய்க்க முடியாதவனை - வீழ்த்த முடியாதவனை
சாய்த்தான் இராமன். வீழ்ந்தான் வாலி"

வீழ்ந்த மைந்தன் - வலியினால் தளர்கின்றான் காரணம் வீழ்த்தியது இராமபாணம் - இந்த இடத்திலே கம்பனது கைவண்ணத்திலே ஓர் அற்புதமான - அதிசயமான பாடல் கவிச் சக்கரவர்த்தி என்பதற்கு முத்திரை குத்தப்பட்ட பாடல்களில் ஒன்று

"எழுந்து வான் முகடு இடித்து
உகப்படுப்பல் என்று உறுக்கும்
உழுந்து பேரு முன் திசை திரிந்து
ஒருப்பல என்று உறுக்கும்
விழுந்து பாரினை வேரொடும்
பறிப்பல் என்று ஒரும்
அழுந்தும் இச்சரம் எய்தவன்
ஆர் கொல்? என்று அயிர்க்கும்"

சாய்ந்து வீழ்ந்த வாலி எழுந்து வானத்தின் மேல் முகட்டினை இடித்து

சிதைத்து வீழச் செய்வேன் என்று கூறி மேல் எழுவான். ஓர் உழுந்து நிலை பெயர்ந்து உருளும் நேரத்திற்கு முன்னரே எல்லாத் திசைகளையும் சுற்றித்திரிந்து அனைத்தையும் முறித்து அழிப்பேன் என்று சினம் கொண்டான். கீழே பாய்ந்து இப்பூமியை வேரோடு பெயர்த்தெடுப்பேன் என்று நினைத்தான். தன்மார்பில் ஆழ்ந்து தைத்துள்ள இந்த அம்பினை தொடுத்தவன் யார் என்று ஐயுறுவான்.

இத்துணை வலியைத் துன்பத்தை சந்திக்கின்ற வாலியைச் சொல்ல வந்த கம்பன் உழுந்து என்கின்ற ஒரு சொல் போட்டதனால் கம்பனது பார்வையிலே இது ஒரு மங்கல நிகழ்ச்சியாகத்தான் பார்த்திருக்கின்றான் - காரணம் மறைந்து இருந்து அம்பு எய்தினாலும் வாலி அழிக்கப்பட வேண்டியவன். குறுக்கு வழியிலே ருமையை கவர்ந்தவனை குறுக்கு வழியிலேயே சாய்ப்பது சரி என்றும் அதர்மத்தை அழிக்கக் கடமைப்பட்டு, அவதாரம் எடுத்த இராமன் அவனை வீழ்த்தினான்.

இந்த பாடலிலே மாந்தர்களுக்கு ஒரு மாபெரும் உண்மையைக் கம்பன் சொல்லுகின்றான். இந்த உலகம் பஞ்ச பூதங்களினால் ஆனது. அதன் கட்டுப்பாட்டிற்குள் இயங்கிக் கொண்டு இருக்கின்றது. கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களும் இந்த உண்மையை - இயற்கையை நம்புவார்கள். இந்த இயற்கைதான் தெய்வம் - தெய்வம் தான் இயற்கை. அந்த இயற்கையின் ஆற்றலை தங்கள் அறிவுத்திறனால் ஆராயலாம். புரிந்து கொள்ளவும் முயற்சிக்கலாம். அதில் வெற்றியும் பெற்று விடலாம். அதோடு நிறுத்திக்கொள்ள வேண்டும். ஆனால் அதனோடு மோத வேண்டாம் என்று இந்தப்புவியிலே யார் நினைத்தாலும் அழிந்து போவான் - அழிக்கப்படுவான். கம்பனது காப்பியத்திலே மூன்று பாடல்களில் இந்த உண்மையை மறைவாகச் சொல்லுகின்றான். ஒன்று மேலே சொன்னப் பாடல். ஆணவத்தின் சிகரத்தில் நின்று வாலி பேசுகிறான். எழுந்து வானத்தின் முகட்டை இடித்து சிதைந்து விழச்செய்வேன் என்றான். ஆனால் அவனே சிதைந்து போனான். இன்னொரு பாடல் கும்பனை எழுப்புகின்றர்கள் போருக்கு தயாராவதற்கு - உறங்குகின்ற கும்பனை எழுவதை சொல்கின்ற பாடல்.

"விண்ணினை இடறும் மோலி விசும்பினை
நிறைக்கும் மேனி
கண்ணெனும் அவை இரண்டும்
கடல்களின் பெரிய வாகும்
எண்ணினும் பெரியானான இலங்கையர்
வேந்தன் பின்னோன்
மண்ணினை அளந்து நின்ற மால் என
வளர்ந்து நின்றான்"

எழும்போது அவனது கீரிடம், விண் முகட்டை மோதுகின்றது-தேகம் விசும்பினை மறைக்கின்றது. இயற்கையோடு மோதுகின்றோம் என்று தெரியாமலேயே வாழ்ந்தவன் தெரிந்தே சாகின்றான். இயற்கையோடு மோதுவது விபரீதம்!

இதற்கு நேர் மாறான மற்றொரு பாடல். அனுமன் துதிப்பாடல்களிலே, இந்த ஒரு பாடலும் இடம் பெற்றிருக்கும் மிக அற்புதமான பாடல். இராமகாதையில் நாயகனுக்கும், நாயகிக்கும் கிட்டாத பெருமை அனுமனுடைய விஸ்வருப தரிசனம். சுந்தரகாண்டத்தில் சிறுவனை போல் சீதையினிடத்தே சென்ற போது - இந்த உருவத்திலே எப்படி நீ கடலைத் தாண்டி - இந்த இடத்திற்கு வந்தாய் என்று கேட்கும்போது - அனுமன் தன் விஸ்வரூபத்தை அவளுக்குக் காண்பிக்கின்ற இடத்திலே வரும் பாடல்

"சுட்டினன் நின்றனன் தொழுத கையினன்
விட்டு உயர் தோளினன் விசும்பின் மேக்குஉயர்
எட்ட அருநெடு முகடு எய்தி நீளுமேல்
முட்டும் என்று உருவொடும் வளைந்த மூர்த்தியான் "

தன் உருவத்தை உயர உயரக் கொண்டு செல்லுகின்றான் அனுமன் ஒரு கட்டத்திலே நெடு முகடு இடிக்கும் எனத் தெரிந்தவுடனே அனைத்தையும் - உருவம் உள்ளிட்ட அனைத்தையும் வளைத்தான்; வாழ்கின்றான் என்றும் சிரஞ்சீவியாக; அந்த அனுமன் நம்மை காப்பானாக.

மேலே குறிப்பிட்ட பாடல்களை நுணுகி ஆராய்ந்து பார்க்கும் பொழுது தங்கள் பலத்தால் பஞ்சபூதங்களையும் தன்வசம் கொண்டு வந்து விடலாம் என்று நினைத்த வாலியும், கும்பகருணனும், இராமனால் வதை செய்யப்படுகிறார்கள். ஆனால் பஞ்ச பூதங்களை ஆட்கொள்ள எண்ணாமல் அவற்றின் செயல்களுக்கு மதிப்பு அளித்த அனுமன் சிரஞ்சீவியாக வாழ்கிறான் என்பதைப்பார்க்கும் பொழுது வாலி வதம் கம்பன் கண்ணோட்டத்தில் சரியானது என்று எண்ணத் தோன்றுகிறது.

நான் என்ற ஆணவத்தாலே நிமிர்ந்து நின்ற வாலியை - பஞ்ச பூதங்களின் நாயகனாகிய - பரம்பொருள் - அவனது ஆவணத்தை அழித்து விடு பேற்றை அளித்தான் என்று சிந்தித்துப் பார்த்தோமேயானால் வாலி வதையின் உண்மை நிலை நமக்குப் புலப்படும்.

***

இலக்குவனுக்கு இணை....!

- அமரர் கம்பன் அடிப்பொடி

பெரும்பாத்திரங்களையும், துணைப்பாத்திரங்களையும், சிறுபாத்திரங்களையும் படைத்து ஆட்டுவிப்பதில் பெரும் வெற்றி பெற்றவன் கம்பன். அவன் காப்பியத்தில் இலக்குவன் ஓர் அற்புத சிருஷ்டி.

இலக்குவன் ஒரு பெரும்பாத்திரமா அல்லது சிறுபாத்திரமா அல்லது இரண்டிலும் அடங்காத துணைப்பாத்திரமா? இதை சுட்டு முன் பாத்திரங்களின் இலக்கணத்தைச் சிறிது பார்ப்போம்.

பெரும்பாத்திரங்களின் தன்மை என்ன? ஒரு மண்டபத்திற்குத் தூண்கள் எப்படியோ அப்படித்தான் காப்பியத்திற்குப் பெரும்பாத்திரங்கள். எந்தத் தூண் அகற்றப்பட்டாலும் மண்டபம் நிலைகுலைந்து விடும் இல்லையா? அங்ஙனமே காவியக் கட்டுக் கோப்புக்குப் பெரும் பாத்திரங்கள் இன்றியமையாதவை. எந்த ஒரு பாத்திரத்தை நாம் நீக்கிவிட்டால் காப்பியம் முடங்கிவிடுமோ அந்தப் பாத்திரம் பெரும்பாலும் கதையின் பெரும் பகுதியில் தோன்றக் கூடும். ஏகதேசம் சில இடங்களில் மட்டும் தோன்றிவிட்டு மறைந்தும் போகலாம்.

சிறுபாத்திரமோ இந்த நிலைக்கு முற்றிலும் மாறுபட்டது. ஒன்றிரண்டு நிகழ்ச்சிகளில் தோன்றித் தன் பணியை நிறைவேற்றுவதுடன் அமைந்துவிடும். அப்புறம் அந்தக் கதைக்கு அது யாரோதான் அன்றியும், ஒரு மண்டபத்தில் காணப்படும் சிற்பம், தோரணங்கள், ரஸக்குண்டுகள் போல சிறுபாத்திரங்கள் கதைக்கு ஓரளவு அணி செய்வனவே.

ஆயினும் அவை இல்லாமல் போனால் காவியக்கட்டுக் கோப்பு மூளியாகிவிடாது. கதை பாதிக்கப்படமாட்டாது என்றாலும் சிறு பாத்திரங்கள் இன்றியமையாதவை அல்ல என்றும் கூறிவிடமுடியாது.

எப்படிப்பார்த்தாலும் இலக்குவன் இந்த இரு வகையிலும் அடங்கான். கதையின் தொடக்க முதல் இறுதிவரை இலக்குவன் நீக்கமற நிறைந்திருக்கிறான். எனவே இலக்குவனைச் சிறுபாத்திரம் என்பது பொருந்தாது. பெரும் பாத்திரம் ஆவானா என்றால் இலக்குவன் எவ்வகையிலும் கதை நடத்தும் ஒரு பாத்திரமாகக் காட்சி கொடுக்கவில்லை. ஆனால் பல பெரும்பாத்திரங்களும் இயங்கிக் கதையை நடத்த இலக்குவன் செய்யும் உதவி அற்பசொற்பமல்ல. இலக்குவன் துணை இன்றேல் கதை ஊட்டமின்றி மெலிந்து போய்விடும். அந்தக் கணக்கில் பார்த்தால் இலக்குவன் பெரும் பாத்திரங்கட்கெல்லாம் உயிர் என நிற்கிறான். இன்றியமையாப் பாத்திரமாகவும் தோற்றமளிக்கிறான். என்றாலும் கதையின் தொடக்கத்திற்கும் முடிவுக்கும் அவன் காரணமாக அமையாமையால் அவனைப் பெரும்பாத்திரம் என்பது ஒவ்வாது. எனவே இலக்குவனைத் துணைப் பாத்திரம் என்பதே முறையாகும்.

துணைப்பாத்திரங்களின் நிலையோ ஓர் அதிசயமான நிலையாகும். பெரும் பாத்திரங்களையும், சிறுபாத்திரங்களையும் படைத்து இயங்குவதைவிடப் பல மடங்கு சிரமமாகும் துணைப் பாத்திரங்களைப் படைத்து ஆட்டுவிப்பது. அதில் கம்பனின் சாதனை ஓர் அற்புத வெற்றியாகும். பெரும் பாத்திரங்களைப் போலத் துணைப்பாத்திரங்கள் தானே இயங்குவன அல்ல. ஆனால் பெரும்பாத்திரங்கள் எத்துணைதான் தானாகவே இயங்கினும் இலக்குவனைப் போன்ற துணைப்பாத்திரங்கள் இன்றேல் கதை சூம்பி இளைத்துவிடும்; பண்பு குறைந்துவிடும்; விறுவிறுப்பு அற்று இளைத்தும் போய்விடும்.

இலக்குவனைத் துணைப் பாத்திரம் என்பதில் பிறிதொரு சிறப்பும் இருக்கிறது. காப்பியத் தலைவனாகிய இராமனுக்குக் காலமெல்லாம் உற்ற துணையாயிருந்தவன் இலக்குவன். உயிரையும் கொடுக்கும் ஒப்பற்ற துணைப் பாத்திரம் என்பது மிகவும் பொருத்தம் இல்லையா?

இனி இலக்குவன் பண்பினைச் சிறிது பார்ப்போம். கூட்டொருவரையும் வேண்டாக் கொற்றவனாம் இராமனே,

“இலக்குவ!” உலகம் ஓர் ஏழும்-ஏழும் நீ கலக்குவென் என்பது கருதினால் அது விலக்குவது அரிது”

என்று இலக்குவனைப் பாராட்டுவானாகில், அவன் ஆற்றலைப்பற்றி நாம் என்ன சொல்லக் கிடக்கிறது?

இலக்குவன் என்னும் துணைப் பாத்திரம் எந்தெந்த வகையில் எல்லாம் காப்பியத் தலைவனுக்குத் துணையாக விளங்கு கிறான் என்று பார்த்தால் இத்துணைப் பேராற்றல் உள்ள இலக்குவன் கல்வி, அறிவு, ஒழுக்கம், அடக்கம், தியாகம் முதலியவற்றாலும் எத்துணை விழுமியவனாக விளங்குகிறான் என்பது புலப்படும். இத்தகைய ஒரு சிறந்த துணைப்பாத்திரத்தைப் படைத்த கவிதைத் தச்சனாகிய கம்பனின் ஒப்பற்ற திறனை நாமும் கூட நன்குணரலாம்.

தம்பியாய்த் தோன்றிய இலக்குவன் இராமனுக்கு இளமைப் பருவத்தில் இணை பிரியாத் தோழனாகவும் விளங்குகிறான். காலை மாலைக் கடன் கழிக்கும் போதும், உலவும் காலமும், குளிக்கும் பொழுதும், கலைபயில் நேரமும், உண்ணும் காலையும், உறங்கும் சமயமும் கூட ஒருவரை ஒருவர் பிரியாத இணையாய் வாழ்கின்றனர் இராம-இலக்குவர்.

ராமன் காட்டுக்குச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்ட பொழுது, தனக்கு எவ்வித நிர்பந்தமும் இல்லாதிருந்தும், ராமன் எவ்வளவோ தடுத்தும் கூட, உடன் செல்லத் துணிகிறான் இலக்குவன்.

"நீர் உள எனில், உள மீனும்-நீலமும்;
பார் உள எனில், உள யாவும்; பார்ப்புறின்,
நார்உள தனு உளாய்! நானும், சீதையும்,
ஆர் உளர் எனில் உளோம்? அருளுவாய்!"

என்பது முதலாக இலக்குவன் பேசும் பேச்சு, இராமனைப் பிரிதல் என்பது இலக்குவனுக்கு எண்ணவும் முடியாத ஒன்றென்பதை எவ்வளவு நயம்படக் காட்டுகின்றது பார்த்தீர்களா?

வேறு வழியின்றி இராமனும் இசைய, இலக்குவன் சீதா ராமரைப் பின்பற்றிக் கானகமடைகிறான். அங்கெல்லாம் இலக்குவன், தான் இராமனுடைய தம்பி அல்லது தோழன் என்று ஒரு சிறிதும் எண்ணினானில்லை. தன்னை ஒரு வேலைக்காரனாகவே கருதிப் பணி புரிகிறான். அதைத் தன் வாய்மொழியாலும் நன்கு புலப்படுத்துகிறான் நமக்கு.

" தன்னுடைய உரிமைச் செல்வம் தம்பிக்குத் தகவின் நல்கி
நல்நெடும் கானம் சேர்ந்தான் நாமமும் இராமன் என்பான்
இந்நெடும் சிலைவலானுக்கு ஏவல்செய் அடியன் யானே!"

என்று அனுமனிடம் ராமனை யாரென உரைக்கும் போது தன்னைப்பற்றிக் கூறுவது இலக்குவன் மனப்பக்குவத்தை எவ்வளவு தெளிவாக உணர்த்துகிறது, பார்த்தீர்களா?

இங்ஙனம் அடியவன் நிலையில் திரியாது ஆண்டு பதினான்கும் அருமையாய்ப் பணி செய்கிறான் இலக்குவன். இவன் இராமனுக்கு ஒப்பற்ற மெய்க்காவலன் ஆக விளங்கியமையைக் குகன் கூறக் கேட்போம்.

" அல்லை ஆண்டு அமைந்த மேனி
அழகனும் அவளும் துஞ்ச
வில்லைஊன்றிய கையொடும்
வெய்துயிர்ப்போடும் வீரன்;
கல்லை ஆண்டு உயர்ந்த தோளாய்!
கண்கள் நீர் சொரிய கங்குல்
எல்லை காண்பளவும் நின்றான்;
இமைப்பிலன் நயனம்."

மேலும் சித்திர கூடத்திற்கு வந்தபிறகு இராமனும் சீதையும் வெய்யில், மழை முதலியவற்றால் துன்புறுவதால் வசிப்பதற்கு ஏற்ப இரு பன்னக சாலைகளை

அமைக்கிறான் இலக்குவன். மாலை மயங்கி அந்தி கனிகிறது. சாலைக்கு வருகிறான் ராமன். கண்டதும் ஒரே வியப்பு! அப்படி அருமையாக அமைந்திருக்கிறது சாலை. அரச குமாரனான என் தம்பியா இப்படி வனப்புறச் சாலை அமைத்தவன்? என்றெழுந்த ஆச்சரியத்துடன் இலக்குவனைப் பார்த்து,

"என்று கற்றனை நீ இதுபோல் என்றான் துன்று தாமரைக்கண் பனி சோர்கின்றான்."

இராமன் வனத்துள் வைகிய காலமெல்லாம் இலக்குவன் உடன் உறைந்து ஏவல் செய் அடியவனாய் இருந்தான் என்றால் அவனைக் கேவலம் ஒரு வேலைக்காரனாகவோ, அன்றி மெய்காவலனாகவோ நாம் எண்ணிவிடலாமா? அப்படி நம்மை எண்ணும்படி கம்பன்தான் விட்டுவிடுவானா? அப்புறம் கம்பனின் படைப்புத் திறனுக்குத்தான் என்ன பெருமை இருக்கும்?

அமைச்சனாக, தூதுவனாக பால் நினைந்தூட்டும் பரிவுடைத் தாயாக, போர்வீரனாக, சேனைத் தலைவனாக, இராமன்தன் பிரதிநிதியாக எல்லாம் அரும்பணியாற்றுகிறான் இலக்குவன். வருபொருள் உரைக்கும் மதிமந்திரியாக அவன் காட்சி தரும் இடம் ஒன்றைப் பார்ப்போம்;

"*அடுத்தவும் எண்ணிச் செய்த லன்றோ அண்ணலே! அமைதி*" என எடுத்துச் சொல்லி மாயமானைத் தானே பிடித்துச் வருகிறேன் என்றுரைக்கிறான் இலக்குவன். சீதையின் சிணுக்கம் கண்டு ராமன் தானே மானைப் பிடித்து வருகிறேன் என்று புறப்படும் பொழுதும்,

" *முன்னமும் மகவாய் வந்த மூவரில் ஒருவன் போனான்*
அன்ன மாரீசன் என்றே அயிர்த்தனென் இதனை; ஐய!
இன்னமும் காண்டிய! வாழி! ஏகு;" என இருகை கூப்பிப்
பொன்அனாள் புக்க சாலை காத்தனன் புறத்தில் நின்றே"

மாரீசன் இந்த மாயமான் என்பதையும் இதனால் வரப்போகும் துயரத்தையும் செவ்விதின் உணர்த்தியுடன் அன்பின் பெருக்கால் "வாழி" என்று தேவையற்ற இடத்தில் வாழ்த்துக் கூறுவதால் தன்னுள்ளத்தைக் கவ்விக் கொண்டிருக்கும் அச்சத்தையும் மெள்ள வெளிப்படுத்துகிறான். ராமன் மாயமானை பிடிக்கும் பொருட்டு அதன்பின் சென்றதும் சீதை இருக்கும் பன்னக சாலையைக் காவல் செய்யும் பணியில் ஈடுபட்டுவிடுகிறான். ஒருபானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் பார்ப்பது போல அமைச்சுத் தொழிலுக்கு எவ்வளவு அருகதையுள்ளவன் இலக்குவன் என்பதைப் பார்த்தோம்.

இராமனுக்குப் பிரதிநிதியாக விளங்கும் இடங்கள் பல. இராமனுக்குப் பதிலாக, இராமன் பக்கத்திலிருக்கும் பொழுதே துணைப்பாத்திரமான இலக்குவனைப் பேசவைத்து சங்கடமான சூழ்நிலைகளை எல்லாம் சமாளித்துவிடுகிறான் கம்பன். இவற்றையெல்லாம் உய்த்து உணரும் பொழுதுதான் கவிதா சன்னதம் பெருகி நிற்கும் கம்பனுடைய மேதாவிலாசம் நமக்கும் கூட நன்கு புலப்படுகிறது. அவற்றில் ஒன்றைப் பார்ப்போம்;-

வாலி, மரணத் தருவாயில் இராமனை நோக்கி, "வீரனே! கொடிய வேடனைப் போல மறைந்திருந்து அம்பு எய்தல் முறையோ" என்று கேட்ட பொழுது இலக்குவன் இடைப்புகுந்து முன்பு நின் தம்பி சரணடைய உன்னைக் கொன்று அவனுக்கு அச்சம் தீர்ப்பேன் என்று வாக்குக் கொடுத்தனன் இராமன். கண்முன் ராமனைக் கண்டால் நீயும் உன் ஆவிமீது வைத்த ஆசையில் அடைக்கலம் என்று அண்ணலடி வீழ்வாய்! அப்புறம் நிலைமை தர்மசங்கடமாகிவிடும் என்பது கருதியே அண்ணல் மறைந்திருந்து அம்பு எய்தனன்" என்று தருக்கரீதியில் பதில் உரைத்துச் சங்கடமான நிலையிலிருந்து ராமனைப் தப்புவிக்கிறான் இலக்குவன்.

இப்படிப் பிரதிநிதியாக இருந்து, பேசுவதுடனல்லாமல் முடிசூட்டும் பணியையும் செய்கிறான் இலக்குவன்.

ராமனோ "பதினான்காண்டுகள்" வனத்திடையே வாழ்வேன் என உறுதி பூண்டொழுகுபவன். ஆனதால் குரக்கினம் வாழ் இடமே எனினும் கிட்கிந்தை நல்லதொரு நகரந்தான் என்பது கருதி அதனுட் செல்லவும் இராமன் திருமனம் ஒருப்படவில்லை. அதனாலேதான் கிட்கிந்தையில் சுக்கிரீவனுக்கும், இலங்கையில் வீடணனுக்கும் இலக்குவனே ராமனின் பிரதிநிதியாக இருந்து முடிசூட்டு விழாக்களை நடத்துகிறான்.

இராமன் தூதுவர் என்றால் நமக்கெல்லாம் அனுமனையும், அங்கதனையும் பற்றிய நினைப்பே வரும். ஆனால் இலக்குவனே இராமனின் முதல் தூதுவன் என்பதை நம்மில் பலர் மறந்துவிடுகிறோம்.

சுக்கிரீவன் தான் கொடுத்த வாக்கையும், பெற்ற உதவியையும் மறந்து, புதிதாக வந்தடைந்த செல்வச் செருக்காலும், அரசமோகத்தாலும், களியாட்டில் மயங்கிக் கிடக்கிறான். அப்படிக் கிடப்பவனுக்கு அறிவுறுத்தி, படைகளுடன் வருகிறானா மாட்டானா என்பதைத் தெரிந்து வரும்படி இலக்குவனையே தூது அனுப்புகிறான் ராமன்.

காற்றென கூற்றென வருகிறான் இலக்குவன். தாரை, அனுமன் முதலியோர் சினப்பொறி பறக்க வரும் இலக்குவன் எத்துணைதான் கோபமுடையவனானாலும்

வீரியம் பேணிக்காரியத்தைக் கெடுத்துவிடுபவனல்லன். சினமடங்கி, சுக்கிரீவனை அன்புடன் தழுவிக்கொண்டு செய்ய வேண்டியதை சிந்தை கொளச் செய்கிறான். சுக்கிரீவன் இலக்குவனைப் பணிந்து அரசர்க்கே உரிய அரியாசனத்தில் அமர வேண்டுகிறான். இலக்குவனோ;

"கல் அணை மனத்தினை உடைக்கை கேசியால்
எல் அணை மணிமுடி துறந்த எம்பிரான்
புல்லணை வைக யான் பொன்செய் பூத்தொடர்
மெல்லணை வைகவும் வேண்டுமே!"

என்று விடையிறுக்கிறான். இலக்குவன் அந்தக் கரடுமுரடான தரையிலே அமர்ந்து விடுகிறான். இதில் காணப்படுகிற கிண்டலும், ஆத்திரமும் சுக்கிரீவனுக்கு மட்டுமா, எல்லோருக்குமோ மனத்தை உருக்க கண்கள் எல்லாம் அருவி பொழியத் தொடங்கி விடுகின்றன. பரிவு மிக்க சிந்தையுடன் இலக்குவனைப்பார்த்து நீராடி விருந்து கொள்ள வேண்டுகின்றனர். அவன் பதில் அனைவோர் உள்ளத்தையும் ஆட்டிவிடுகிறது. பதிலைக் கேளுங்கள்;

"இந்த விருந்தெல்லாம் எமக்கு இப்பொழுது வேண்டாதவை. அன்னை ஜானகி இருக்குமிடத்தைக் காண உதவினால் அதுதான் தேவாமிர்தம் தந்ததாகும். அன்றியும் ஒன்றுளது. இராமன் உண்டு மிஞ்சிய இலை காய், கிழங்குகளே எனக்குரிய உணவு, மேலும் நான் உடனே திரும்ப வேண்டும்; நான் சென்றுதான் இராமன் உண்டிக்கு ஆவன செய்துவிட வேண்டும். இனி ஒரு விநாடி தாமதம் செய்தாலும் தகாது." என்றுரைத்து உடனே புறப்பட்டு விடுகிறான். அவன் மட்டுமா திரும்புகிறான். கிட்கிந்தை முழுவதுமே அவனைப் பின் தொடர்கிறது. வெட்டிக் கொண்டு வா என்றால் கட்டிக் கொண்டு வரக்கூடியவன் அல்லவா இலக்குவன்.

ராமன் உயிருக்கோ அன்றிப் புகழுக்கோ ஊறு வரும் என்று தெரிந்தால் உடனே தன் உயிரையும் கொடுக்கத் துணிபவன் இலக்குவன். இதைப்பல இடங்களில் காணலாம். கவந்தனால் அண்ணன் உயிருக்கு ஆபத்துவரும் என்று கருதிய அக்கணமே *"செரு வெல்ல மாட்டான், மாண்டான் "*என்றபின் *மேவும் வசை உண்டோ?* என்று மனத்துட் கொண்டு கவந்தனுக்கு இரையாக முந்தும் "இலக்குவனுக்கு நிகரு முண்டோ? என்று நாம் வியப்படைவோம்.

இனி இராமன் புகழுக்கு இழுக்கு என்று உணர்ந்ததும் இலக்குவன் செய்த முடிவொன்றைக் காண்போம்.

வரிசையாக பெற்று வரும் தோல்வியால் இராவணன் மனம் உடைந்து, மான உணர்வும் பேராத்திரமும், பெருஞ்சினமும் பொங்க போர்களம் நோக்கி

வருகிறான். இன்று எப்படியும் வீடணனைத் தீர்த்துக் கட்டிவிடுவது என்று திட்டமிட்டு வருகிறான். தன்னுடைய பெருந்தவப் பயனால் பெற்ற, பிழையாத, வேலொன்றை வீடணன் மேல் குறிவைத்தும் விட்டான். அழிந்தான் வீடணன் என்று அமரர்களும் அகம் குலைந்து அரற்றினர்.

வீடணன் அழிந்தால் ராமனுடைய வீரமே அழிந்தது; அவன் புகழே பொன்றிவிடும்; தீராப் பெரும்பழி வந்து சீராமனைச் சூழ்ந்து கொண்டுவிடும். இதை உணர்ந்தவன் இலக்குவன். வேலின் ஆற்றலையும் தெரிந்தவன் எண்ணுகிறான். எண்ணத்தின் முன் செயலில் இறங்கியும் விடுகிறான்; தோறபன்; எனினும் புகழ் நிற்கும்;

"தருமம் தொடரும்;
ஆர்ப்ப நல்லவர்,
அடைக்கலம் புகுந்தவன்
அழியப் பார்ப்பதென்?"

நெடும்பழி வந்து தொடர்வதன் முன்னம் ஏற்பென் என் தனி மார்பில் என்று இலக்குவன் எதிர்ந்தான். அடைக்கலத்தையும் அண்ணன் புகழையும் காத்து வேலுக்குப் பலி ஆகிறான் இலக்குவன்.

இத்கைய துணைப் பாத்திரந்தான் இலக்குவன். கம்பன் படைத்த இந்த இலக்குவனுக்கு இணையாக துணைப் பாத்திரத்தை வேறெங்கே நாம் காண முடியும்? இலக்குவனுக்கு இணையாக ஈடு இலக்குவன்தான், இல்லையா?

முன்னம் சூளுறவு

- திரு. கி.பக்ஷிராஜன்

" அறம் தலை நிறுத்தி வேதம் அருள் சுரந்தமைந்த நீதித்
திறம் தெரிந்துலகம் பேணச் செந்நெறி செலுத்தித் தீயோர்
இறந்துக நூறித்தக்கோர் இடர்துடைத்தேக ஈண்டுப்
பிறந்தனன் தன்பொற்பாதம் ஏத்துவார் பிறப்பறுப்பான்"

என்று அநுமன் வாயிலாக இராமாவதாரத்தைக் கூறினார் கம்பர். அவரது இராமாயணத்துக்கு அவர் வைத்த பெயர் இராமாவதாரம் என்பதே.

" நடையினின்றுயர் நாயகன் தோற்றத்தின்
இடைநிகழ்ந்த இராமாவதாரப் பேர்த்
தொடைநிரம்பிய தோமறுமாக்கதை
சடையன் வெண்ணெய்நல் லூர்வயின் தந்ததே"

என்பது கம்பரது அவையடக்கம்.

நாயகனான அப்பரம்பொருளின் நிலை, ஐந்து என்று கூறப்பெறும்.

" விண் மீதிருப்பாய் மலைமேல் நிற்பாய் கடல் சேர்ப்பாய்
மண் மீதுழல்வாய் இவற்றுள் எங்கும் மறைந்துறைவாய்"

சித்தசித்தொடீசனென்று செப்புகின்ற மூவகைத் தத்துவத்தின் முடிவுகண்ட சது மறைப் புரோகிதர் என்றார் நம்மாழ்வார். விண்மீதிருப்பாய் என்பது 'பரத்வம்'. அவன் பரமபதத்தே இருக்கும்நிலை; மலைமேல் நிற்பாய் என்பது அர்ச்சாவதாரம். அதாவது உலகோர் "அவரவர் தாம்தாம் அறிந்தவாறேத்தி இவரிவர் எம் பெருமான் என்று", அவனுக்கு உருவமைத்து வணங்கும் நிலை; 'கடல் சேர்ப்பாய்' என்பது வியூகம். இது "ஒன்றும் தேவும் உலகும் உயிரும் மற்றும் யாதும் இல்லா அன்று, நான்முகன் தன்னொடு தேவருலகோடுயிர் படைக்க" 'பஹுஸ்யாம்' (பலவாகிறேன்) என்று சங்கல்பித்து உலகு படைக்க யோகு புணர்ந்து பாற்கடலில் பள்ளிகொள்ளும் நிலை; மண் மீதுழல்வாம் என்பது 'விபவம்'. இது உலகுய்யவும் அறம் நிலைக்கவும் தனது மேல்நிலையினின்றும் தன்னைத் தாழவிட்டு உயிர்களில் ஒன்றாக வந்து பிறக்கை. இது அவதாரம் எனப்படும். கீழிறங்குகை எனப் பொருள்படும்; 'இவற்றுள் எங்கும் மறைந்துறைவாய்' என்பது "அந்தர்யாமித்துவம்." பரந்ததண் பரவையுள் நீர்தொறும், நில விசும்பு ஒழிவறக் கரந்த சில்லிடந்தொறும் இடம் திகழ் பொருள் தொறும் கரந்து எங்கும் மறைந்து பரந்துள தன்மை. இவ்வைந்து நிலைகளையுமே 'அம்பஸ்ய பாரே புவனஸ்யமத்யே' என தைத்திரீய உபநிடதம் பேசியது.

இவ்வண்ணம் அவதாரம் செய்யும்போது இறைவன் எந்த வடிவில் அவதரிக்கிறனோ அந்த நிலையிலேயே இயங்குகிறான். தயரதன் மகனாக இராமன் தோன்றினான். மனிதனாகப் பிறந்த இராமன் மற்றைய மனிதரைப் போலவே இவ்வுலக இன்ப துன்பங்களை அநுபவிக்கிறான். "நாட்டில் பிறந்து படாதனபட்டு மனிசர்க்காய் நாட்டை நலியும் அரக்கரை நாடித் தடிந்திட்டு நாட்டையளித்துய்யச் செய்து நடந்தமை" என்றார் நம்மாழ்வார். மனித வாழ்க்கையில் நிகழும் இன்பதுன்ப நிகழ்ச்சிகள் யாவும் இராமனுக்கு நிகழ்கின்றன. இளமை விளையாட்டு, கண்டதும் காதல், கைக்கிளை, திருமணம், முடிசூட்டெதிர்பார்த்தல், அது இழப்பு, வனவாசம், மனைவி பறிபோதல், பிரிவுத்துயர், அலைவுதிரிவு, நட்பு, போர், மனைவியின் நற்பெயரில் ஆத்திரம், மீண்டும் மகிழ்ச்சி, முடிசூட்டு இவையனைத்தும் ஒரு சக்கரவர்த்தி குமரனுக்கு நிகழக்கூடியவை. இவையனைத்தையும் அநுபவிக்கிறான். இவற்றில் ஒரு மனிதன் அடையும் மெய்ப்பாடுகளை இராமனிடமும் காண்கிறோம். இப்படித் தன்பரத்வ நிலையினின்றும் கீழிறங்கித் தோன்றும் நிலைகளில் அவனது பரத்வ உணர்வு அற்றே போகின்றதா அல்லது அவ்வுணர்வோடுதான் அவனது அவதாரங்கள் நிகழ்கின்றனவா. அவன் கேவலம் அந்த அவதார இயல்புகளிலேயே இயங்குகின்றானா அல்லது தன் பரத்துவத்தை உணர்ந்தே செயல்படுகிறனா என்ற ஐயம் அவனது அவதார சரிதம் படிப்போர்க்கு எழுதல் இயல்பே. "செவ்வழி உணர்வு தோன்றச் செப்ப "ப் பெற்ற கம்பரது இராமாயணத்திலே பரமன் தன்னை எவ்வாறு காட்டிக் கொள்கிறான் என்று நோக்குவாம்.

வேதங்களையும், இதிகாச புராணங்களையும், எல்லாவற்றுக்கும் மேலாக வைணவ ஆழ்வார்கள் அருளிய திவ்யப்ரபந்தங்களையும், சமயநூல்களின் நுணுக்கங்களையும், நன்கறிந்தவர் கம்பர் என்பது அவரது காவியத்தை ஊன்றிக் கற்போர் உணர்வர்.

முன்சொன்ன பரமனின் ஐந்து நிலைகளில் வியூகம் எனப்பட்ட நிலைதான் அவன் தேவர்கள் கூப்பீடு கேட்கும் நிலை என்று கூறும் நூல்கள். எனவே இராவணனால் இடர்மிகவுற்ற தேவர்கள் முதலில் 'கடுவமர் களனை'க் கிட்ட அவன் 'யாமினி அடுவதில்' என உரைத்து அவர்களோடு செல்ல, அனைவரும் நான்முகனை அண்டித் தம் குறைபாட்டைக் கூற முடிவில் "கருமுகில் என வளர் கருணையங் கடல் பொருதிடர் தணிப்பின் உண்டு" எனத் தீர்மானிக்கின்றனர். அவர்கள் பரம்பொருளான நாராயணனையே வேண்டுகின்றார்கள். என்றாலும் அவனது பரத்வநிலையில் அல்ல எண்ணி வேண்டுவது. நூல்களில் கூறியபடி அவனது வியூக நிலையில்தான் அவனை எண்ணி வேண்டுகிறார்கள்.

" *திரைகெழு பயோததி துயிலும் தெய்வ வான்*
மரகத மலையினை வழுத்தி கெஞ்சினால்
கர கமலங் குவித்திருந்த காலையில்"

என்று கம்பர் அவர்கள் தியானம் செய்தது அவனது வியூகநிலையே எனக் காட்டுவர்.

இவர்கள் வழுத்திய நிலை வியூகமாயினும், உணரும் பரம்பொருள் தன் பரத்வ நிலையிலே யாதலின் அந்நிலையிலேயே அவர்கள்முன் தோன்றுகிறான்.

" *கருமுகில் தாமரைக் காடு பூத்துநீ*
டிருசுடர் இருபுறத்தேந்தி ஏடவிழ்
திருவொடும் பொலிய வோர் செம்பொற் குன்றின்மேல்
வருவபோல் கலுழன்மேல் வந்து தோன்றினான்."

அங்ஙனம் தோன்றிய பரமன் கருடன் மேலிருந்தே அவர்கள் குறை என்னவெனக் கேட்டு அவர்களுக்கு அபயமளித்திருக்கலாம். அப்படிச் செய்யவில்லை. அவர்கள் இருக்குமிடம் வந்து கழலுன் தோளினின்றும் கீழிறங்கி நின்று வினவியிருக்கலாம். அப்படியும் செய்யவில்லை. சென்னிவான் மண்டபத்துச் சேர்கிறான். மண்டபத்துள் நின்று வினவவில்லை. நேரே அங்கிருந்த பொன்னரி ஆசனத்துக்குச் சென்று அதன்மீது அமர்ந்து தேவர்கள் குறையீட்டைக் கேட்கிறான்.

வைணவ நூற்கோட்பாடுகளிலே பரமன் தனது அரியாசனத்தில் இருந்து (அமர்ந்து) ஒரு சங்கல்பம் (முடிவு, தீர்மானம்) செய்தானென்றால் அதை அவன் வேண்டுமென்றாலும் மாற்ற முடியாது. அந்த சங்கல்பம் நிறைவேறியே தீரும். இவ்வுண்மையை நாம் வைணவப்ரபந்தங்களிலும் ஆசிரியர்தம் உரைகளிலும் காண்கிறோம்.

ஆண்டாள் அருளிய திருப்பாவையில் "மாரிமலை முழைஞ்சில்" எனவரும் பாசுரத்தின் பின்னைய நான்கு அடிகளில் இவ்வுண்மை பொதிந்து கிடக்கின்றது. வியாக்கியான சக்ரவர்த்தி பெரியவாச்சான்பிள்ளை தம் வியாக்யானத்தில் இவ்வுண்மையை விளக்கக் கூறுவார். உரையாசிரியருக்கு முன்வந்த கம்பரும் ஆண்டாள் பாசுரத்தில் பொதிந்து கிடந்த உண்மையை உணர்ந்திருப்பார் என்று தெரிகிறது. இனி பாசுரத்தையும் வியாக்கியானத்தையும் பார்ப்போம்.

" *போதருமாபோலே நீ பூவைப் பூவண்ணா உன்*
கோயினின் றிங்ஙனமே போந்தளிக் கோப்புடைய
சீரியசிங்கா சனத்துஇருந் தியான்வந்த
காரிய மாராய்ந்தருள்."

என்பன பாசுரத்தின் பின்னைய நான்கடிகள். கண்ணனைப் பள்ளியறை வாசலில் நின்று துயிலெழுப்புகிறார்கள் கன்னியர். அவர் முன் கண்ணன் எழுந்து வந்து கதவைத் திறந்து நிலையிலேயே நின்று "என்ன வேண்டும்?" என வினவுகிறானாம். கன்னியர் 'இது போதாது நீ அங்கிருந்து இங்கு உறக்கம் நீங்கி எழுந்து வரும் சிம்மத்தின் கதியிலே நடந்து வரவேண்டும்'. அந்நடையழகை நாங்கள் கண்டு ரஸிக்க வேண்டும் என்றார்களாம். அவன் அங்ஙனமே வந்து அவர்கள் முன் சென்று 'சரி நீங்கள் விரும்பியபடி நடந்து வந்தாயிற்று. என்ன வேண்டும்'. எனக்கேட்டானாம். கன்னியர் "கண்ணா, உன்னை நாங்கள் நன்றாக அறிவோம். 'நீ ஏலாப் பொய்கள் உரைப்பவனல்லாவா? "கருமலர்க் கூந்தல் ஒருத்தி தன்பால் மருவி மனம் வைத்து மற்றொருத்திக்குரைத்து ஒரு பேதைக்கு பொய் குறித்து புரிகுழல் மங்கை ஒருத்தி தன்னைப் புணர்தி. அவளுக்கும் மெய்யனில்லை. மருதிறுத்தாய் உன்றன் வளர்த்தியேடே வளர்கின்றதாலுன்றன் மாயைதானே' என்பதல்லவா உன் சொல் செயல்களின் பெருமை! ஆகவே இப்படி நின்றுகேட்டால் நாங்கள் கூறமாட்டோம் என்று கூற; கண்ணன் அப்படியானால் நாம் எம்முறையில் கேட்க வேண்டும் சொல்லுங்கள் என்றானாம். கன்னியர் 'கண்ணா! அதோ இருக்கிறது பார் அரியாசனம். அது அத்யாக்ஷாஸனம். நீதி மேடை. அதில்போய், நிற்கக்கூடாது. அதில் அமர்ந்து எங்கள் குறை கேட்டு வரமளித்தாயானால் அந்த வரத்தை உன்னாலும் மீற முடியாது. உன் அவதார சேஷ்டிதங்களாலும் அம்முடிவை மாற்ற முடியாது. ஆகவே அந்தக் கோப்புடைய, சீரிய சிங்காசனத்து இருந்து யாம் வந்த காரியம் ஆராய்ந்தருள்' என்ன, கண்ணன் அவ்வாறே செய்தானாம்.

இறைவன் அத்யக்ஷாஸனமான அரியாசனத்தே அமர்ந்து ஒரு முடிவான சங்கல்பம் எடுத்துக்கொண்டால் அதை அவனும் மீறக்கூடாது. மீறவும் முடியாது என்பது சித்தாந்தம்.

தேவர் குறை கேட்கும் பரம்பொருளான நாராயணன் இத்தகைய முடிவையே எடுக்கிறான். அம்முடிவு மாற்ற முடியாதது. மாற்றக் கூடாதது. அவன்தன் அவதாரநிலையில் எக்காரணம் பற்றியேனும் மாற்ற விரும்பினாலும் மாற்ற முடியாதது. இந்த உண்மையைக் கம்பர் அமைத்துக் காட்டும் முறை அறிஞர்களை வியப்பில் ஆழ்த்தக் கூடியது.

"எங்கள் நீள்வரங்களால் அரக்கராயுளோர்
பொங்குமு வுலகையும் புடைத் தழித்தனர்
செங்கணாயக இனித் தீர்த்தி யல்லையேல்
நுங்குவர் உலகை ஓர் நொடியின் என்றார்."

என்பது தேவர் முறையீடு.

இதற்குப் பரமன் அரியாசனத்தில் அமர்ந்து எடுத்த முடிவு.

"வருந்தல்! வஞ்சகர் தம் தலை அறுத்து இடர்
தணிப்பன் தாரணிக்கு" என்பது

இம்முடிவில் "வஞ்சகர் தம் தலை அறுத்து இடர் தணிப்பன்" என்பதை நினைவில் வைப்போம். இதுதான் இறைவன் இராவணனைக் குறித்து எடுத்த முதல் சபதம். இச்சபதம் அரியாசனத்தில் இருந்து எடுக்கப்பட்டது. எனவே அவனாலும் மாற்ற முடியாதது.

பரமன் அவதாரம் செய்கிறான். கூடவே அவன் ஆணைப்படி அவனது வளையும், திகிரியும் பாயலும் அவதரிக்கின்றன. இவ்வவதார நிலைகளினால் அவ்வவ்வதாரத்தின் மூலநிலை எவ்வகையிலும் மாறுபடுதல் இல்லை. குறைவதும் இல்லை. அவை அப்படியேதான் உள்ளன என்பது நூன் முடிவு. ஈண்டு அவை பிறந்தாலும் அவற்றின் ஆதிநிலையான பரமனின் திருக்கைகளிலே ஏறி வீற்றிருந்து செயலாற்றும் நிலையும் அவனது பாயலாகவும் ஆசனமாகவும் குடையாகவும் உள்ள நிலையும் சற்றும் மாறவில்லை.

இத்தகைய நிலைகளில் அவை தாம் இன்னின்னவற்றின் அவதாரம் என உணர்ந்தே இயங்குகின்றனவா? அல்லது அதை மறந்து அவதார நிலைக்குரிய குணங்களோடு மட்டும் செயல்படுகின்றனவா என்பதுமல்லவா நம்முள்எழும் ஐயம்!

இனி, பரமனின் நிலையைப் பார்ப்போம். சீதைக்கு உதவ வந்த சடாயு குற்றுயிராய் வீழ்ந்து கிடக்கிறான். இராமன் வருகிறான். நடந்தது கேட்ட இராமன் தேவர்களைக் கோபித்து உலகையே அழிக்க முனைகிறான். சடாயு, வயது முதிர்ந்த ஒரு தந்தை, படபடப்பினால் தவறாகப் பிறரைச் சீறும் மகனைக் கண்டிப்பது போன்று "பெண்ணைத் தனியாக விட்டுச் சென்ற உங்கள் தவறாலல்லவா இது விளைந்தது, 'உம்பிழை என்பதல்லால் உலகம்செய் பிழையுமுண்டோ?" என வினவலும் இராமனது சீற்றம் ஆறுகிறது; இதுவரை அவதார நிலையிலேயே அரசகுமாரனாக இருந்த இராமன் சடாயு உரையிழந்து உயிர் பிரியும் நிலையடைவதை உணர்கிறான். அவ்வுயிர் நற்கதியடையத்தன் பரத்துவ நிலைமை மேற்கொண்டு அவ்வுயிர் பரமபதமடைய சங்கல்பிக்கிறான். உயிர்விடும் சடாயு பரத்வ நிலையிலுள்ள இராமன் திருவடிகளை நோக்குகிறான்; உளத்தால் வணங்குகிறான். உயிர் பிரிகிறது. 'போக்கிலா உலகம் புக்கான்' என்கிறார் கம்பர். "நசபுனர் ஆவர்த்ததே நசபுனர் ஆவர்த்ததே" என்று மறை கூறும் பரமபதம் கிட்டுகிறது. கம்பர் வெளிப்பட இராமன் பரத்துவ நிலையடைந்தான் என்னக் கூறவில்லை. ஆனால், அந்தத் திருவடிகளை சேவித்தால் போக்கிலா உலகம் கையதுவோ அத்திரு திருவடிகளை சேவித்தான் என்பதன் மூலம் உணர்த்துகிறார்.

"சேதங்கொள் மலரு ளோனும் தேவரும் என்ப தென்னே
வேதங்கள் காண்கி லாமை வெளிநின்றே மறையும் வீரன்
பாதங்கள் கண்ணில் பார்த்தான் படிவங்கொள் நெடிய பஞ்ச
பூதங்கள் விளியும் நாளும் போக்கிலா உலகம் புக்கான்."

என்பது கம்பர் வாக்கு.

முனிவர்களிடம் அபயம் அளிக்கும்போது கூறிய

"சூரறுத்தவனும் சுடர் நேமியும்
ஊர் அறுத்த ஒருவனும் ஓம்பினும்
ஆரறத்தினொடன்றி நின்றாரவர்
வேரறுப்பன் வெருவன்மின்"

என்றபோதும் தன்னைப் பரனாகத்தான் இராமன் பாவிக்கிறான். அவதார நிலை பரத்துவ நிலைனின்றும் சற்றுக் கீழிறங்கிய நிலை என்று சுட்டுவது போலக் காண்கிறது.

அநுமனது வாக்கு வன்மையைப் பாராட்டுங்கால், "யார்கொல் இச்சொல்லின் செல்வன் வில்லாதோர் இளைய வீர விரிஞ்சனோ விடைவல் லானோ?" என்னுமிடத்தே தன் பரத்துவ உணர்வோடு முக்குண அடிப்படையில் தான் எடுத்த மூன்று நிலைகளில் முற்குண (சத்வகுண)த்தவரே முதலோர் என்றபடி தன் நிலைதான் விஷ்ணு என்று உணர்வும் சேர்ந்து கொள்கின்றமையின் விஷ்ணுவை விடுத்து, "விரிஞ்சனோ விடைவல் லானோ" என்று பிற இருவரைச் சுட்டிக் காட்டுகிறான் எனத்தோன்றுகிறது. பலவிடங்களில் அவன் தன் பரத்வ நிலையை மறைத்து மனித இயல்பிலேயே இயங்கி மானிட இன்பதுன்பங்களைத் துய்ப்பவனாகவே காணப்படினும் தான் பரம்பொருள் என்ற உணர்வுடன்தான் பேசுகின்றானோ என ஐயுறும் நிலையில், மேலே கண்டபடி பல இடங்கள் உள்ளன.

இதே போல், இலக்குவனும் தான் ஆதிசேஷன் அவதாரம் என்ற உண்மையை மறைத்தேதான் இயங்குகிறான். எனினும் அவன் அவ்வுணர்வோடு செயற்படவும் காண்கிறோம். ஆனால், பிறர் உணராவண்ணம் செயற்படுகிறான். இராவணன் ஒரு சத்திப்படையை எறிய இலக்குவன் ஒய்ந்து விழுகிறான். இராவணன் அவனை இலங்கைக்கு எடுத்துச் செல்ல உன்னி அவனைத்தூக்க முயல்கிறான். இராவணன் எண்ணத்தைத் தெரிந்த இலக்குவன் தான் எதன் அவதாரம் என்ற நிலையை மனத்தில் பாவிக்கவே இராவணனால் அவனை அசைக்கவும் இயலவில்லை. அவன் தளர்ந்து நிற்க மாருதி சடுதியில் பாய்ந்தெடுத்து "மகவுகொண்டு செல் மந்தியின்" மறைகிறான். ஆனால் இலக்குவன் இங்கு ஒன்றும் பேசவில்லை.

தன் பரத்துவத்தை உணர்ந்து ஆனால் பகிரங்க மாக்காமல், அவ்வுணர்வோடு தன் தமையன் பரத்வத்தைப் பகிரங்கமாக்காமல் அவனுக்கு தன் பரத்வத்தை நினைவூட்டுகிறான். இராமனும் தான் உணர்ந்து செயல்படுவதாகவே இலக்குவனுக்கு மறைமுகமாகக் கூறித் திருப்தி செய்கிறான். இம்மறைமுகமான ஆனால் மிக ரசமான நிகழ்ச்சியை அங்கதன் தூதுப்படலத்திலே அமைத்துள்ளார் கம்பர்.

தூதுவன் ஒருவன் தன்னை விரைவில் தூண்டி "மாதினை விடுதியோ" எனக் கேட்டு "மறுக்கு மாகில் காதுதல் கடன்" என்று தான் கருதுவதாக அரக்கர்கோனிடமும் குரக்கினத்திறைவனிடமும் கூறுகிறான் இராமன். முதலாமவன், 'அழகிற்றேயாகும்' என்றான். பின்னவன் "கொற்றவர்க் குற்றது" என்கிறான். இராமன் தம்பியை நோக்கித் திருமுகம் திருப்பலும் 'இரக்கமதிழுக்கம்' என்ற இளையவன் "இனி நாம் அம்பு துரக்குவதல்லால் வேறு சொல்லுண்டோ" என்று தொடங்குகிறான்.

தொடங்கும்போதே இலக்குவனுக்குத் தனது ஆதி நிலை உணர்வு வந்துவிடுகிறது. முன் தேவர்கள் பிரார்த்தித்தபோது நிகழ்ச்சிகளை நினைவுகூர்கிறான். இராமன் தன் பரத்வநிலையை மறந்து பேசுவதாகப்படுகிறது அவனுக்கு. அண்ணன் தன் பரத்வத்தை மறக்காமல் செயல்பட வேண்டுமே, ஐயோ மறந்து செயல்பட்டால் விபரீதமல்லவா விளையும், தன் வாக்கைத் தானே நழுவவிட்டதாக ஏற்பட்டுவிடுமே என்றும் அஞ்சுகிறான். அவதார நிலையிலேயே இயங்கித் தன் பரத்வத்தை அடியோடு மறந்து, தன் பரநிலைக்கே பழிவரும்படி அண்ணன் செயல்பட்டுவிடக்கூடாதே என்று பதறுகிறான். அப்படி என்ன இராமன் செய்து விட்டான் என்று கேட்கிறீர்களா?

அவதார ராமன் மாதினை விடுதியோ எனக் கேட்டு மறுக்குமாகில் காதுதல் கடன் என எண்ணுகிறான். இது அவனுடைய பரத்வ நிலைக்குச் சேராது என்று படுகிறது. தன் ஆதிநிலை உணர்ந்த இலக்குவனுக்கு, "ஏன் சேராது?" என்று வினவுகிறீர்கள்.

"பரத்வ நிலையில் காப்பிட்ட முடிவு 'வஞ்சகர்தம் தலைஅறுத்து இடர்தணிப்பன் தாரணிக்கு' என்பது." இப்போது அவதாரநிலையில் 'மாதினை விடுதியோ' என்று தூதனுப்பினால், ஒருகால் இராவணன் மாதினைக் கொணர்ந்து விட்டுவிட்டால் பின் போர் நிகழாது மறுக்குமாகிலல்லவா காதுதல் கடன் என்று அண்ணன் கருதுகிறான். ஒருவேளை, அப்படி நிகழ்ந்துவிட்டால் பரனான நிலையில் அவன் கூறிய சூளுரை என்னாவது? வஞ்சகர் தம் தலையறுத்தல்லவா இடர் தணிக்கப்பட வேண்டும். அந்தச் சூளுரை நிறைவேறியே ஆகவேண்டும். ஒருவேளை, அண்ணன் அவதார நிலையிலே தன்னை இழந்து பரத்வ உணர்வை விட்டு அப்பரநிலையிலே இட்ட சபதத்தையும் மறந்துவிட்டானோ" என்று ஐயுறுகின்றான் இலக்குவன். ஆனால், பலர்க்கு முன்னிலையில் தன் ஆதிநிலை உணர்வை எப்படிக் காட்டுவது?

அண்ணனது பரத்வ நிலையைப் பகிரங்கமாக்குவதா என்று எண்ணிக் கூசுகிறான் எனினும், உணர்த்தியே தீர வேண்டும் என்றும் தீர்மானிக்கிறான். ஒரு நவீன முறையைக் கையாள்கிறான்.

பரமாத்மாவுக்கும் ஜீவாத்மாவுக்கும் இடையே உள்ள உறவு ஒன்பது வகைத்து என்பர் வைணவ பரமாசாரியர்கள். அதனையே நூல்களும் கூறும், 'நவவித ஸம்பந்தம்' என்று. அவையாவன. தந்தை-மகன்; தாய்-குழந்தை; நண்பன்; குரு-சீடன்; உடையான் - உடைமை அரசன்-குடிமகன்; அறியப்படுபொருள்-அறிபவன்; ஆண்டான் - அடிமை; நாயகன்-நாயகி ஒன்பன. உன்னோடு என்பது வகை உறவுடைய ஆன்மா என்று கூறவில்லை இலக்குவன். உன்னிடம் என்பது அபராதம் இழைத்தவன் இராவணன் என்று சுட்டி, நவவித ஸம்பந்தத்தை உணர்த்தி, அவனது பரத்வ நிலையை நினைவுபடுத்துகிறான். அவ்வொன்பது அபசாரங்களும் வெளிப்பார்வைக்கு உட்பொருளற்றதாகத் தோன்றினாலும் அவன் அவற்றின்மூலம் தன் பரத்வ நிலை உணரும் மூலம் கூறுகிறான்.

"தேவியைச் சிறையில் வைத்தான்
தேவரை இடுக்கண் செய்தான்
பூசுரர்க் கலக்கணீந் தான்
மன்னுயிர் புடைத்துத் தின்றான்
ஆசையின் அளவில் எல்லா
உலகமும் தானே ஆள்வான்
வாசவன் திருவும் கொண்டான்
வழியலா வழிமேல் சென்றான்."

இவ்வேழையும் விடக் கொடியது எட்டாவது.

" வாழியாய் உன்னை அன்று வரம்பறு துயரின் வைகச்
சூழ்விலா மாயம் செய்துன் தேவியைப் பிரிவு சூழ்ந்தான்."

இவ்வெட்டையும் அவன் மன்னித்தாலும் மன்னித்துவிடலாம். ஆனால் அவனும் பொறுக்கரிதான அபசாரம் பாகவதாபசாரம்.

" ஏழைபால் இரங்கித் தான்தன் ஒருதனி இகல் மேல் சென்ற
ஊழிகாண்கிற்கும் வாணால் உந்தையை உயிர்பண்டுண்டான்"

என்று அவ்வபசாரத்தை முத்தாய்ப்பிலே வைத்துக் கூறுகிறான் இலக்குவன். இவற்றிலே யாவும் சாதாரணமாக வேறு ஒரு தொனிப்பொருள் உளதென அங்கு எவரும் கருத இடமில்லை. பாகவதாபசாரம் தான் "அஸஹ்யாபசாரம்."

பொறுக்கொணாக் குற்றம் என்பது பரன் ஒருவனே உணர்ந்துகொள்ளக்கூடிய தாகையால் இவ்வகை எதிர்த்தட்டைக் கூறி ஸம்பந்தத்தையும் பாகவதாபசாரத்தை முடிவில் வைத்து அவன் விசேஷ குணத்தையும் கூட்டிப் பரத்வ உணர்வை உணரச் செய்து, அதன்பின் அவன் இப்போது செய்யப்போகும் செயலால் அவன் பரத்வநிலையோடு முரண்படும் அபாயமும், அவன் வாக்குத் தவறக் கூடிய வாய்ப்பும் நிகழலாம் என்பதையும் மறைமுகமாகக் காட்டுகிறான் தம்பி.

" *அன்னவன் தனக்கு மாதைவிடுக என்றருளுவாயேல்*
என்னுடைநாமம் நிற்கும் அளவெலாம் இலங்கை மூதூர்
மன்னவன் நீயே என்று வந்தடைந்தார்க்கு வாயால்
சொன்ன சொல் என்னாம் முன்னம் சூளுறவென்னாம்
தோன்றால்"

அண்ணா! நீ விடும் தூதின் பயனாக இராவணன் என் அன்னை சீதையை உன்பால் கொணர்ந்து விட்டுவிட்டால் நீ போரிடமாட்டாய். இராவணனை மன்னித்து விடுவாய். உன் பொறுமையையும், நீ 'பிறர்க்கு நல்கக் கற்றவன்' என்பதையும் "வானமே அனையதோர் கருணை மாண்பலால் ஊனமே வேறிலாதவன்" என்பதையும் நன்கறிந்தவன் நான். ஆகவே, இராவணன் இலங்கையரசனாகவே தான் இருப்பான். அப்படி நிகழ்ந்துவிட்டால் சின்னாள் முன் கடலின் அக்கரையில் "எந்தையே இராகவ சரணம்" என்று வந்தானே வீடணன், அவனுக்கு அபயம் மட்டுமா அளித்தாய்? "தாழ்கடல் இலங்கைச் செல்வம் நின்னதே தந்தேன்" என்று வானளவும் கேட்கும் வகையில் உரக்கக் கூவி வாக்களித்தாயே, அதுவும் உலகில் உன் நாமம் நிற்கும் அளவெல்லாம் இலங்கையரசு அவனது என்றாயே அண்ணா. அவ்வளவோ, என்னை அவனுக்குப் பட்டாபிஷேகமும் செய்யச் சொன்னாயே, அந்த வாக்கு என்னாவது? காற்றோடு போகவா? அதை எப்படியோ நீ சமாளித்தாலும் சமாளிக்கலாம் ஒருவேளை. ஆனால் ! .... என்று சற்றே தயங்குகிறான் அண்ணாவின் பரத்வ உண்மையைப் பகிரங்கமாக்கவா என்று.

"ஆனால் என்ன இன்னும் லக்ஷ்மணா?" என்று வினவுகிறான் இராமன். லக்ஷ்மணனுக்கு இன்னும் தயக்கம்தான். ஆனால் உணர்த்தவும் வேண்டும். எனவே அண்ணன் மட்டும் தன் பரத்வ உணர்வில் புரிந்துகொள்ளக்கூடிய, ஆனால் பிறருக்கு உட்பொதி பொருள் ஒன்றிருப்பதாகப் படக்கூடாத விதத்தில் "முன்னம் சூளுறவென்னாம்?" என்று கேட்கிறான், அந்த முன்னம் என்பதிலுள்ள னகரமெய்யில் சற்று அழுத்தமும் நிறுத்தலும் தந்து.

இராமன் சட்டென்று உணர்ந்து கொள்கிறான். பிறருக்கு இந்த இரண்டு கேள்விகளிலும் ஏதோ புதைபொருள் உள்ளதாகப்பட ஏதுவில்லை. இராமன் எத்தனையோ சூளுறவுகள் செய்திருக்கிறான். இப்போது தூது விடுவதற்குப் பாதகமாக ஒரு சூளுறவு இருக்குமென்று அங்கு கூடியிருந்தவர் நினைக்க இடமில்லை. தம்பியின் சாதுர்யத்தை இராமன் மெச்சிக்கொள்கிறான் தன்னுள்ளே. தம்பி அதோடு விடவில்லை. செய்வன திருந்தச்செய்துவிடவேண்டாமா. மேலும் கூறுகிறான் "அறந்தரு தவத்தை ஆயும் அறிவினால் அறத்தை முற்றும், மறந்தனை எனினும் மற்றிவ்விலங்கையின் வளமை நோக்கி, இறந்திது போதல் தீதென்று இரங்கினை எனினும் எண்ணில், சிறந்தது போரே" என்று.

அண்ணா ! நீ இப்போது கொண்டுள்ளநிலைக்கு இவ்வழகிய இலங்கை நகர் அழிவதா என்றும் கருணைகாட்டலே நலம் என்றும் நினைப்பது அறவழிப்பட்டனவே என்றாலும் தீர யோசித்தால் போர் செய்வதே சிறப்புடைத்து என்று உன் அவதார நிலைக்கேற்ற குணங்களை வெளியிடுவதைக் காட்டிலும் உன் பரத்வநிலையில் எடுத்த சூளுறவை நிறைவேற்ற வேண்டியது உன் கடமையாகும். அந்தச் சூளுறவு அத்யக்ஷாசனத்தில் நீ இருந்து எடுக்கப்பட்டதாதலின் மாற்ற முடியாதது என்பனவற்றையும் உள்ளுறை பொருளாகத் திணித்து "முன்னம் சூளுறவு என்னாம்?" என்று கேட்கும் கேள்வியிலேயே "அண்ணா! அச்சூளுறவுக்கு மாறாக நடக்கலாமா நடக்கத்தான் முடியுமா?" என்ற சவாலும் அடங்கியிருக்கும் விதமாகக் கேட்கிறான்.

தம்பியின் கூரிய ஆய்வையும், அவனது இங்கிதமான பழிப்பையும், அண்ணன் பெரிய தவறைச் செய்துவிடக்கூடாதே என்பதில் அவனுக்குள்ள ஆர்வத்தையும், இவ்வளவுக்கும் மேலாகப் பிறர் எப்படி தங்களைப்பற்றி நினைத்திருந்தாலும், தங்களிடம் நடந்து கொண்டாலும், தங்கள் பரத்வநிலையைத் தாங்கள் பகிரங்கமாக்குதல் கூடாதென்பதில் தம்பிகுள்ள விழிப்புணர்வையும், அதன் காரணமாகத் தன் பரத்வத்தை உணர்த்த அவன் கையாண்ட சமத்காரமான வழியையும் மிக மிக ரசித்துப் போற்றிய இராமன் அவனை மெச்சி ஒரு பொருள் பொதிந்த முறுவல் செய்கிறான். "சேவகன் முறுவல் செய்தான்" என்றார் கம்பர். பின் தம்பியின் பயம் அவசியமில்லாதது என்று அவன் உணரும்படியும் பிறர் வேறு உட்பொருள் இருக்குமோ என்று ஐயுறமுடியாதபடியும் பதிலிறுக்கிறான் இராமன்.

"அயர்த்திலன்! முடிவும் அஃதே" என்று. தம்பி! சூளுறவை நான் மறக்கவில்லை. சூளுறவு தவறாதே என்று நினைவூட்டினாய். அவசியமில்லை. முடிவும் சூளுரைப்படிதான் இருக்கும்" என உணர்த்துகிறான். "பயப்படாதே, லக்ஷ்மணா! நீ

வீடணன் தலையில் சூட்டிய முடி இறங்காது அங்கேயே இருக்கும்'' என்று வெளிப்படையாகக் கூறாமல் சுட்டுகிறான் இராமன்.

பின் ஏன் இந்தத் தூதெல்லாம் என லக்ஷ்மணன் தன் உள்ளத்தே எண்ணுவனே என்று எதிர்பார்த்து இராமன் "லக்ஷ்மணா ராஜதர்மம் என்று ஒன்றுள்ளதல்லவா? 'கொற்றவர்க்குற்றது' என்று சுக்கிரீவ மகாராஜா சொன்னது உன் காதில் விழுந்ததா, இல்லையா? அந்த ராஜதர்மத்தை நாம் விடலாமா'' என்று கூறும் போதே நாம் என்பதை அழுத்துகிறான் இராமன். பிறருக்கு தசரதபுத்திரராகிய நாம், வசிஷ்ட சிஷ்யராகிய 'நாம்' என்று பொருள் படும்படியும், லக்ஷ்மணனுக்கு அறம் தலைநிறுத்த வந்த நாம் என்று பொருள்படும்படியும் அறிஞர் ஆய்ந்த நயத்துறை நீதி நூலின் நாம் துறந்தமைதல் நன்றோ. "புயத்துறை வலியரேனும் தூதொடும் பொருந்தி வாழ்தல் சயத்துறை அறனும் அஃதே என்றிவை சமையச்சொன்னான்'' என்கிறார் கம்பர். சமையச் சொன்னான் - அங்குள்ளார் அனைவர்க்கும் தம்பிக்கும் பொருந்துமாறு சொன்னான். லக்ஷ்மணன் புரிந்து கொள்கிறான். "ஆம் ராஜதர்மமும் தலைநிறுத்தப்பட வேண்டியதுதானே. அதற்குரிய நாடகமும் ஆடித்தானே ஆகவேண்டும்?'' என்று அமைகிறான். அங்கதன் தூதனுப்பப் பெறுகிறான்.

"அயர்த்திலன்! முடிவும் அஃதே'' என்பதற்கு வேறு வகையாகப் பொருள் கோடல், சிக்கலில்தான் முடியும். முன் வியூகத்திலே வழுத்தப்பெற்றுத் தன் பரத்துவநிலையிலே இராமன் அரியாசனத்தில் இருந்து காப்பிட்ட சூளுறவுதான், முன்னம் சூளுறவு. முனிவர்களிடை உரைத்த சூளுறவு இடைநிகழ்வேயன்றி முன்னம் சூளுறவாகாது. முன்னம் என்பதை வெறும் காலம் காட்டும் முறையில் பொருள்கோடல் சிறக்காது. முன்னம் எதுகையில் முத்தாய்ப்பாக வந்துள்ளதை நோக்க வேண்டும்.

பரமன் பரத்வ உணர்வோடு இயங்குகிறான் என்றால் அவனது அணுக்கத் தொண்டர்களான கருடன், ஆழி, சங்கம் முதலியோர் மறைவில் அவனை விடாமலே தான் இருந்து வந்திருக்கின்றனர். இலக்குவன் நாகபாசத்தால் கட்டுண்டு கிடத்தல் கண்டு மயங்கிய அவதார ராமன் பட்ட துயர் காணச் சகியாதவனாய் கருடன் தானாக வந்து உதவுகிறான்.

சக்கரம் என்ற திருவாழியாழ்வானை, "எப்பொழுதும் கைகழலா நேமியான்'' என்றார் நம்மாழ்வார். அவன் எம்பெருமான் கையினின்று சுழலும் நேரம் பரமன் உளமார ஒருவனை முடிக்க வேண்டும் என்று தீர்மானிக்கிற நேரம்தான். அதே கணத்தில் பெருமான் கைவிட்டுக் கழன்று அவர் சங்கல்பத்தை முடித்து மீண்டும் அவர் திருக்கையிலே வந்து அமர்வதுவே அவனது இயல்பு. இவ்வுண்மையை "மெய்ந்நின்று கமழ் துளவ விரையேறு திருமுடியன் கைந் நின்ற சக்கரத்தன்

கருதுமிடம் பொருது" (திருவாய். 10.6.8.) என்ற நம்மாழ்வார் பாசுரம் காட்டும். 'கருதுமிடம்' பொருதுகைந்நின்று சக்கரத்தன் என்று அன்வயம். திருவாழி யாழ்வானின் இவ்வியல்பைக் கம்பர் மறக்கவில்லை.

இராவணவதம் பிரம்மாத்திரத்தாலானது என்றல்லவா நாம் சாதாரணமாக நம்புகிறோம். பிரவசனம் செய்வோரும் அப்படியே கூறித்தானே நம்மை நம்ப வைக்கிறார்கள. கம்பர் என்ன கூறுகிறார் பாருங்கள்.

" *அக்கணத்தின் அயன்படை ஆண்தகை*
சக்கரப்படை யோடும் தழீஇச் சென்று
புக்கதக் கொடி யோன் உரம் பூமியும்
திக்கனைத்தும் விசும்பும் திரிந்தவே. "

அக்கணத்து - எக்கணத்து? சரி! பத்துத்தலை இருபதுகை இவை அற்று அற்று வீழத்தொடுத்துச் சித்திரவில் விளையாட்டு விளையாடிப் பொழுதுபோக்கியது போதும். இனி இவனை முடிப்போம் எனக்கருதி, அவதாரநிலையில் தான் செய்யும்போருக்கு ஒப்ப சாதாரண ஆயுதங்கள், அம்புகள் இவனை ஒன்றும் செய்யாது. நான்முகன் படையை இவன்மேல் எய்வேன் என்று தீர்மானித்து அப்படையை நாணில்பூட்டி இழுத்து விடும் அக்கணத்து. கருதுமிடம் பொரும் ஆழிப்படை பரமன் கையினின்று கழன்றது. அயன்படைக்கு முன் சென்றது. ஆழீப்படையுடன் அயன்படை சென்றது. இராவணன் மார்பில் ஆழிப்படை புக அயன்படையும் புகுகின்றது. ஆழிப்படை மறைவிலே செயலாற்றியது. உலகர் காண இராமன் அயன்படையை எய்தான். உலகர் அயன் படைதான் இராவணன் உயிரைப் பருகிற்று எனக் கருதினர். பரமனின் பரத்துவ நிலையிலேதான் இராவணன் முடிவு சங்கல்பமாயிற்று. அந்தச் சூளுறவின் அங்கமாகத்தானே அவதாரம். அதனால் அவதார இராமன், இராவணனை முடிக்க அம்பெய்யக் கருதிய கணத்தே சக்கரப்படை செயல்படுகின்றது. பரத்வநிலை அவன் செய்த சங்கல்பத்தை நிறைவேற்றுகிறது.

கம்பர் கண்ட இராம கதையின்படி அவதாரம் செய்த பரமன் தன் பரத்வத்தை உணர்ந்தே செயல்பட்டான் என்பதையும் அங்கங்கே அவ்விதம் செயல்பட்டமையைப் பிறர் அறியாமல் மறைத்து இயங்கினான் என்பதையும், ஆனால் தன் ஆதி நிலை உணர்ந்த இலக்குவனிடம் பேசும்போது அங்ஙனம் மறைத்தல் இல்லை என்பதையும், அவனது அரியாசனத்திலிருந்து செய்யப்பட்ட சங்கல்பம் அவனாலும் மாற்ற முடியாதது என்பதையும், அத்தகைய சங்கல்ப நிகழ்வில் அவனது படைகளும் மறைந்து நின்றுதவிச் செயலாற்றுகின்றன என்பதையும், மற்றும் பல சமய உண்மைகளையும் காண்கிறோம்.

பரமன் ஆறு குணங்களை உடையவன் என்றும் அவன் சிருஷ்டி செய்ய எண்ணும்போது இரண்டிரண்டு குணங்களைச் சிறப்பாகக் கொண்டு மூன்று மூர்த்திகளாகிறான் என்றும் சுருதிகள் கூறும். அவன் அவதாரம் செய்யும் போது எவ்விதம் செயல்படுகிறான் என்பதை கூரத்தாழ்வான் என்ற ஆச்சாரியர் தமது வரதாரஜஸ்தவத்திலே

" இந்த நிலை உலகை எலாம் தோற்றிடநீ எணுங்கால்
இதன் பின்போ இச்சையினால் பொழிலேழாய் இயைந்த
உந்தன் விளையாடிடமாம் உலகுகளில் வரத!
உம்பன் என மனிதன் என விலங்கெனவே நீயும்
அந்தமிலா விபவமென அவதரித்தாய் அவ்வவ்
வவதாரநிலைகளிலே அவ்வ வற்றோடுழன்றாய்
இந்நிலை தம்மில்உன தெல்லையிலா நலங்கள்
யாவும் மறைத் தவ்வுயிரின் இயல்பில் இலங்குறுவாய். "

எனப் பொருள்பட அருளியிருப்பது நோக்கத்தக்கது.

கம்பரது பரந்த கல்வியையும், மறைகளிலும் இதிகாச புராணங்களிலும் அவர் வைத்துள்ள பெருமதிப்பையும், சமய உண்மைகளில் அவரது ஈடுபாட்டையும், மரியாதையையும், அவரது சமய உணர்வையும், ஆழ்வார்களின் திவ்யப்ரபந்தங்களிலுள்ள நுண்ணிய ஆழ்ந்த பொருள்களில் அவருக்கிருந்த ஞானத்தையும், அவரது இராமாயணத்திலே காண்கிறோம். அவ்வுண்மைகளை சூத்திரங்கள் போல அங்கங்கே பொதிந்து வைத்து நம்மை வியக்கச் செய்யும் அவரது கவிதைநயம் கற்றறிந்தாரைப் பரவசப்படுத்தும் என்பதில் ஐயமுண்டோ?

*****

கன்னிப் போர்

- அமரர் பி.ஸ்ரீ

இலைகளில்லாமல் உலர்ந்துபோன மூங்கில்களும், உடல் பிளந்து போய் நிற்பதுபோல நிற்கும் வைரம் பாய்ந்த கள்ளி மரங்களும் தாம் காணப்படுகின்றன, அந்தக் காட்டிலே. நிலமோ. ஈரப்பசை முழுவதையும் உறிஞ்சி விட்டுச் சூரியன் உமிழ்ந்த சக்கைப் போலக் காண்கிறது. அந்த வெப்பத்தை வருணிக்க நாவும் கூசுகிறதாம். 'வெந்து போவோமே!' யென்று 'ஏக வெங்கனல் அரசிருந்த' அதாவது, அக்னிதேவனே ஏக போக ஆட்சி நடத்துகிறானென்று சொல்லும்படியிருந்த அந்தப் பாலைவனத்திலே அடி வைக்கிறார்கள். விசுவாமித்திர இராம லட்சுமணர் மூவரும்.

அயோத்தியைக் கடந்து, சரயு நதியைத் தாண்டி, அன்று இரவு ஒரு சோலையிலே தங்கி, மறுநாள் நடுப்பகலில் பாலைவனத்தையடைந்ததும், இராமன் முனிவரை நோக்கி, 'சக்கரவர்த்தியின் இராஜ்ஜியத்தில், ஒரு பகுதி இப்படி அழிந்து போனதெற்கு காரணமென்ன?' என்று ஆச்சரியத்தோடு கேட்டான். அதற்கு உத்தரமாக விசுவாமித்திரர் ஒரு கொடிய இராட்சஸியின் கதையைச் சொன்னார். சொல்லி,

"சூடக அர(வு) உறழ் சூலக் கையினள்,
காடுறை வாழ்க்கையள், கண்ணிற் காண்பரேல்
ஆடவர் பெண்மையை அவாவும் தோளினாய்!
தாடகை யென்ப(து) அச் சழக்கி நாமமே"

- என்று பேர்வழியை வருணித்து அந்தப் பெயரையும் குறிப்பிட்டார்.

விஷப்பாம்பைக் கங்கணமாக அணிந்திருப்பதே, அரக்கியின் விஷம் போன்ற நெஞ்சுக்கும் சங்கற்பத்திற்கும் ஓர் அறிகுறி. அவள் கையும் பாம்பு போலிருக்கிறதாம். அந்தக் கையிலுள்ள பயங்கரமான சூலாயுதமும் பாம்பு போல் ஒடுங்கி, நீண்ட உடலும் விரித்த படம் போன்ற தலையும் உடையது. தான் பாழாக்கிய அந்த பிரதேசத்திலேதான் அந்த குற்றவாளி வசிக்கிறாளென்றும் முனிவர் தெரிவிக்கிறார். இராமனைப் பார்த்துக் கொண்டே பேசிக்கொண்டிருந்தவர், அந்தப் பயங்கரியின் வரலாறு சொல்லிப் பெயரையும் சொல்லுவதற்கு முன்னமே, இராமனுடைய திவ்ய சௌந்தரியத்தில் ஈடுபட்டு, கண்ணில் காண்பரேல் ஆடவர் பெண்மையை அவாவும் தோளினாய்! என்று அவனை ஆசைதீர அழைக்கிறார். புருஷோத்தமனான இராமனுடைய பேரழகு விசுவாமித்திரரின் கண்ணையும் கருத்தையும் அடிக்கடி வசீகரித்தவிடுகிறதென்று ஊகிக்கலாம். இராம சௌந்தரியம் தசரதனை வசீகரித்தது போல். இந்த ஞானத் தந்தையையும் வசீகரிக்கிறது. 'காதலித்த உருவாகி அறம் வளர்க்கும்' தெய்வீக அழகல்லவா?

'தாடகை ஒருத்தியே இப்படி நாட்டின் வளத்தையும் வனப்பையும் அழித்தாளா?' என்று அந்த அழகனுள்ளத்திலே ஒரு சந்தேகம் தோன்றக் கூடுமல்லவா? அந்தச் சந்தேகத்தையும் எதிர்பார்த்தவர்போல் பேசினார் முனிவர்:

"உளப்பெரும் பிணப்பற உலோபமீ ஒன்றுமே
அளப்பருங் குணங்களை அழிக்கு மாறுபோல்,
கிளப்பருங் கொடுமைய அரக்கி, கேடிலா
வளப்பெரு மருதவைப்(பு) அழித்து மாற்றினாள்"

ஒருவனுக்கு எத்தனை நற்குணங்கள் இருந்த போதிலும் இராட்சஸ குணமான உலோபம் ஒன்றே போதுமாம், அந்த நற்குணங்களையெல்லாம் கெடுத்து உள்ளதை வறண்டொழிந்த பாலைவனமாக்குவதற்கு. அப்படி அந்த இராட்சஸி ஒருத்தியே விசாலமான வயற்காடுகளையும் அவற்றின் வளங்களையும் அழித்துவிட்டாள் என்கிறார். எவ்வளவு பொருத்தமான - உலகியல் அறிவு பொதிந்த - உபமானம்!

இலங்கையரசனான இராவணன் கட்டளையினாலேயே அவள் தம்முடைய யாகத்தைக் கெடுக்கிறாளென்று குறிப்பிட்டுத் தீமைகளுக்குக்கெல்லாம் மூலகாரணமான இராட்சஸ ஏகாதிபத்தியத்தையும் பேச்சோடு பேச்சாய் ஞாபகப்படுத்தித் தாடகையின் செய்தியை முடித்தார்.

"முன்னுல(கு) அழித்து, முறைநின்ற உயிரெல்லாம்
தன்னுண வெனக்கருது தன்மையினள்; மைந்த!
என்இனி உணர்த்துவ(து)? இனிச்சிறிது நாளில்
மன்னுயிர் அனைத்தையும் வயிற்றில்இடும்! என்றான்."

'மைந்தனே! நல்லொழுக்கத்திலே நிலைநின்ற உயிர்களைத் தனக்கு உரிய உணவாகக் கருதும் இயல்புடையவள் அவள். அந்த உயிர்களையெல்லாம் இன்னும் சில நாட்களில்! அந்த இராட்சஸி தன் வயிற்றுக்குள்ளே தள்ளிவிடுவாள்! என்றார். ஜீவகாருண்யத்திற்காகவே அவளைக் கொல்ல வேண்டுமென்பது குறிப்பு.

'அது கேட்ட இராமன், பூக்கள் சூட்டிய தன் முடியை அசைத்துக்கொண்டு, இப்படிப்பட்ட தொழிலைச் செய்கிறவள் எங்கேயிருக்கிறாள்? ' என்று வினவினான்.

"கைவரை யெனத்தகைய காளையுரை கேளா
ஐவரை அகத்திடை அடைத்தமுனி, ஐயா!
இவ்வரை இருப்பதவள் என்பதனின் முன் (பு) ஓர்
மைவரை நெருப்பெரிய வந்ததென வந்தாள்."

இராமனுக்கு விசுவாமித்திரர் அருகேயிருந்த ஒரு மலையைச் சுட்டி காட்டி, இந்த மலைதான் அவள் இருப்பது! என்று சொன்னார். அப்படிச் சொல்லி முடிப்பதற்கு முன்பே, ஒரு கரிய மலை தங்களுக்கு எதிரே நடந்து வருவது போலத் தோன்றியதாம் அம்மூவருக்கும். பிறகு அது 'எரிமலைதானோ?' என்று பிரமிக்கும்படி நெருப்பைக் கக்கிக்கொண்டு வந்தது! ஆம், அந்த 'மாமிச பர்வதம்' தான் தாடகை!

அப்படிக் கரியமலை போன்ற உடலோடும், செம்பட்டை மயிரோடும், கோபாக்கினியோடும் வந்தாள், அம்மூவரையும் கண்களில் நெருப்புப் பொறிகள் பறக்கப் புருவம் நுனி துடிக்க விழித்துப் பார்த்தாள். என்ன கோரமான வாயும் பல்லும்! என்ன விழி! என்ன விழிப்பு!

"இறைக்கடை துடித்தபுரு வத்தள், எயி(று) என்னும்
பிறக்கடை பிறக்கிட மடித்தபில வாயள்,
மறக்கடை அரக்கி, வட வைக்கனல் இரண்டாய்
நிறைக்கடல் முளைத்தென நெருப்பெழ விழித்தாள்."

கோரப் பற்கள் பிறைச்சந்திரர்களைப்போல கடைவாயில் வெளியே தெரியும்படி மடித்துக் கொண்டிருந்தாள். அந்தக் குகை போன்ற வாயை. கரிய கடலிலே வடவாமுகாக்கினி இரு கூறாகித் தோன்றி ஜொலித்து எரிவது போல் சிவந்து விளங்கின கண்கள், அந்த முகத்திலே! பாவத்தின் சிகரமே அப்படி வந்து நின்றதாம்.

பாடிப்பாடிப் பாருங்கள். இதன் வல்லோசை எவ்வளவு நன்றாகப் படம் பிடித்துக் காட்டுகிறது. தாடகையின் வலிய கொடிய தோற்றத்தையும் குணஞ்செயல்களையும் என்று.

வருகையும் பார்வையுமே இப்படியென்றால், இந்த அரக்கியின் ஆரவாரத்தையும் அட்டகாசத்தையும் என்னவென்று சொல்வது.

"ஆர்த்(து) அவரை நோக்கி நகைசெய்(து) எவரும் அஞ்சக்
கூர்த்தநுதி முத்தலை அயிற்கொடிய கூற்றைப்
பார்த்(து) எயிறு தின்று, பகுவாய்முறை திறந்(து) ஓர்
வார்த்தை உரை செய்தனள் இடிக்கும் மழை அன்னாள்!"

"கடக்கரும் வலத்(து) எனது காவல்இது; யாவும்
கெடக்கரு அறுத்தனன்! இனிச்சுவை கிடக்கும்
விடக்(கு) அரி(து) எனக்கருதியோ? விதிகொடு உந்தப்
படக்கருதியோ? பகர்மின் வந்தபரி(சு) என்றாள்."

தாடகை ஆரவாரஞ் செய்துகொண்டு இம்மூவரையும் நோக்கி ஒரு சிரிப்புச்

சிரித்தாளாம். அந்தச் சிரிப்பிலே தான் என்ன இகழ்ச்சி! பிறகு, சூலாயுதம் என்னும் அந்தக் கொடிய யமனை ஒரு பார்வை பார்த்தாளாம், 'அவர்களுடைய உயிரை உனக்கு விருந்தாக்குவேன்!' என்று அதை உத்ஸாகப்படுத்தவது போலே, அப்பால் பற்களைக் கடித்து, வாயைக் குகைபோல் திறந்து, இடிக்குரலில் பேசத் தொடங்கினாள்.

தாடகையின் பேச்சென்றால், எப்படியிருக்குமோ? என்று நினைக்கிறோம். கேளுங்கள். இது 'என் இராஜ்ஜியமாயிற்றே!' என்கிறாள். இந்த இராஜ்ஜியத்தைத்தான் எவ்வளவு அழகாய்க் காவல் செய்கிறாள். இந்த அரசி! 'யாவும் கெடக்கரு அறுத்தனன்!' என்று பெருமை பாராட்டுகிறாள். கருவும் இல்லாதபடி உயிர்களை அழித்த இந்த 'மகராசி'யின் மாட்சியே மாட்சி! அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்! 'சுவையுள்ள' மாமிசம் இனிமேல் எனக்கு இங்கே கிடைக்காது என்பது உங்களுக்கு எப்படித் தெரிந்ததோ? எனக்கு உணவு தர வேணுமென்று உடம்பை அருமையாக வளர்த்துக் கொண்டு வந்திருக்கிறீர்களே! உங்கள் கருணையே கருணை! உங்கள் தியாகமே தியாகம்! 'அன்றி, விதியே - ஆம், என் அதிர்ஷ்டமும் உங்கள் துரதிர்ஷ்டமுமாகிய விதியின்-பிடர் பிடித்துத் தள்ள வந்தீர்களோ? சொல்லுங்கள் என்று பயமுறுத்துகிறாள். பாவலைவன ராணி.

இப்படியெல்லாம் உறுமிக் காலால் நிலத்தை உதைத்துக்கொண்டு, 'சூலத்தை இவர்கள் மார்பிலே எறிவே' னென்று தீர்மானித்துவிட்டாள். அவளைக் கொல்ல வேண்டுமென்ற விசுவாமித்திரர் கருத்தை இராமன் அறிந்திருந்தும், அம்பு தொடுத்தானில்லை. தங்கள் உயிருக்கே ஆபத்தான செயலை அவள் செய்யத் தொடங்கியிருந்தும், தற்காப்பைக் குறித்தும் யோசித்தானில்லை. 'பெண்ணென மனத்திடை பெருந்தகை நினைந்தான்.'

இராமன் கருத்தை விசுவாமித்திரரும் ஊகித்தறிந்து, 'தாடகையையும் பெண்ணென்று எண்ணுவதோ?' என்ற கருத்து அமைய,

> *"தீதென்(று) உள்ளவை யாவையும் செய்(து)எமைக்*
> *கோதென்(று) உண்டிலள்; இத்தனையே குறை!*
> *யாதென்(று) எண்ணுவ(து) இக்கொடி யாளையும்?*
> *மாதென்(று) எண்ணுவதோ? மணிப் பூணினாய்!"*

தீதென்று உள்ள எல்லாவற்றையும் செய்து உயிர்களையெல்லாம் வதைக்கிறவளென்று முனிவரும் சொன்னார். 'உயிர்க்குலத்தைக் கரு வறுத்து வருகிறேன்!' என்று தாடகையும் பெருமையாகச் சொல்லிக்கொண்டாள். எனினும். இராமன் உள்ளத்தில் இவ்விஷயமாய் ஒரு சந்தேகம் தோன்றக் கூடுமேயென்று விசுவாமித்திரர் எண்ணினாராம். 'ஜீவஹிம்ஸையையே தொழிலாகக் கொண்டவள்

இந்த முனிவரைத் தின்னாமல் விட்டுவிட்டாளே!' என்று நினைக்கலாமல்லவா? அந்த சந்தேகத்தை எதிர்பார்த்துத்தான் 'எமைக்கோதென்று உண்டிலள்: இத்தனையே குறை! என்று சொன்னார் முனிவர். தவமும் யாகமும் செய்து வற்றிப் போய் எலும்பும் தோலுமாயிருக்கிறாரல்லவா?' எனவே 'இந்த உடம்பு சாரமற்ற சக்கை!' இதனால்தான் இவரைப் போன்ற முனிசிரேஷ்டர்கள் பிழைத்திருக்கிறார்களாம். இப்படிப்பட்ட பேர்வழியைப் பூதம், பேய், துஷ்டமிருகம் முதலிய வர்க்கங்களில் எந்த வகுப்பிலே சேர்த்து எண்ணுவது?' என்பது தெரியவில்லை. வேறு எந்த இனத்தில் சேர்த்தாலும், தாய்க்குலமாகிய பெண் குலத்தில் மட்டும் சேர்ப்பது தகாது, தகாது என்கிறார் விசுவாமித்திரர்.

பிறகு யமனைக்காட்டிலும் தாடகை கொடியவள் என்றார் முனிவர்.

"சாற்றுநாள் அற்ற(து) என்று தருமம் பார்த்(து)
ஏற்றும் விண்ணென்ப(து) அன்றி, இவளைப்போல்
நாற்றம் கேட்டலும் தின்ன நயப்பதோர்
கூற்றும் உண்டுகொல்? கூற்(று) உறழ் வேலினாய்!"

யமனைக் கொடியவனென்று உலகம் சொல்லுகிறதல்லவா? அவனே ஆயுள் முடிந்தவர்களைப் பார்த்துத்தானே கொண்டு போகிறான். ஆகவே, அவன் தருமம் பார்க்கிறவன்; தருமராஜா, இந்தப் புதிய யமனுக்கோ அப்படிப்பட்ட கவலையே கிடையாது. ஆயுளையும் பார்க்க மாட்டாள்; அறத்தையும் பார்க்கமாட்டாள். வாசனையை மோப்பம் பிடித்து அறிந்துகொண்டாலே போதும். இல்லை; 'நாற்றம் கேட்டலும்' தின்ன விரும்புகிறாளாம். 'நரவாசனை வீசுகிறது!' என்று யாராவது சொல்லக் கேட்டாலும் போதுமாம். உடனே ருசி பார்க்கக் கிளம்பிவிடுகிறாள்! என்கிறார் விசுவாமித்திரர்.

கடைசியாக முனிவர், தாம் தருமம் பார்த்தே பேசுவதாகக் கூறினார்:

"'ஈறில் நல்லறம் பார்த்திசைத்தேன்; இவட்
சீறி நின்றிது செப்புகின் றேனலேன்;
ஆறி நின்ற(து) அருளன்(று); அரக்கியைக்
கோறி' யென்றெதிர் அந்தணன் கூறினான்"

'தருமம் என்னும் சட்டப் புத்தகத்தைப் பார்த்துத்தான் இவளுக்கு மரண தண்டனை விதிக்கிறேன்' என்றார்.

'என்னுடைய மனநிலை ஒரு நீதியின் மனநிலைதான்; எனக்கு இவள்மேல் கோபம் கிடையாது' என்கிறார். 'இதைக் குறித்துப் பொறுமையோடு பின்னால் பார்த்துக்கொள்வோமென்று நீ நினைத்தால், அது அருளாகாது! என்றும் இராமனுக்கு

எச்சரிக்கை செய்துவிடுகிறார். 'ஆறி நின்றது அருளன்று' என்று கூறுவதைக் கவனியுங்கள். ஏன்? 'இனிமேல் அரக்கி செய்யும் கொலைகளுக்கெல்லாம் நீ பொறுப்பாளி! என்கிறார். 'தாடகையைக் கொல்லவேணும்; தயங்காமல் இதுதான் அருள்! அதுவே இவளுக்கும் அருள் செய்வதாகும். ஏனென்றால், இவள் பாவச் சுமையை ஒழிப்பதற்கு வேறு கிடையாது' என்கிறார் விசுவாமித்திரர். இப்படிச் சொல்லும் முனிவரை, உயிர்களுக்கு அருள் பூண்டொழுகும் அந்தணனென்று பாராட்டுகிறான் கவிஞன்.

இந்த வாதத்திற்கு இராமன் என்ன பதில் சொல்லுகிறான்? 'மெய்ய! நின் உரை வேத மெனக் கொடு செய்கை யன்றோ, அறம் செயுமாறென்றான்!, மெய்யைக் குறித்தும் அருளைக் குறித்தும் எத்தனையோ சோதனைகளைச் செய்து பார்த்த நிபுணர் விசுவாமித்திரர். எனவே, 'உம்முடைய வார்த்தையை வேதமென்று கொண்டு செய்வதுதான் அறம் செய்யும்முறை என்று ஒப்புக்கொள்ளுகிறான் இராமன்.

இப்படி ஒப்புக்கொண்டு பளிச்சென்று தாடகைமேல் அம்பு போடவில்லையாம். அவள் தான் போர் தொடங்குகிறாள், அவன் கருத்தை ஊகித்துக்கொண்டு.

"கங்கைத் தீம்புனல் நாடன் கருத்தையும்
மங்கைத் தீஅனை யாளும் மனக்கொளாச்
செங்கைச் சூலவெந் தீயினைத் தீயதன்
வெங்கண் தீயொடு மேற்செல வீசினாள்"

பெண் வடிவம் கொண்ட தீயென்கிறான், தாடகையைக் கவிஞன். இவள் கண்ணிலும் தீ; கையிலும் அழலும் சூலமாகிய தீ. தானும் தீயைப் போல் அழன்றுகொண்டே, சூலாயுதமென்ற தீயைக் கண்களில் வீசும் கோபத்தீயோடு இராமன் மேலே செல்லும்படி வீசினாள்.

இப்போதுதான் இராமன் அம்பைத் தொடுக்கிறானாம். ஆனால், அவளைக் கொல்வதற்காக அல்ல; தற்காப்பிற்காகத்தான்.

"மாலும் அக்கணம் வாளியைத் தொட்டதும்,
கோல விற்கால் குனித்ததும் கண்டிலர்;
கால னைப்பற்றித் துக்கடி யாள்விட்ட
சூலம் இற்றன துண்டங்கள் கண்டனர்"

இராமன் பாணத்தைத் தொட்டதையும், வில்லை வளைத்ததையும் ஒருவரும் பார்க்க வில்லையாம். அவ்வளவு விரைவாக அந்தச் செயல்கள் நிகழ்ந்தன. தாடகை வீசின சூலம் அறுபட்டதும், அந்தத் துண்டுகளைத்தான் பார்த்தார்களாம்.

சூலத்தை யிழந்த தாடகை கற்களை யெடுத்து வீசினாள்.

"அல்லின் மாரி அனைய நிறத்தவள்,
சொல்லு மாத்திரை யிற்கடல் தூர்ப்பன
கல்லின் மாரியைக் கைவகுத் தாள்; அதை
வில்லின் மாரியின் வீரன் விலக்கினான்"

தாடகை கற்களை மழையாகப் பொழிந்தாளாம். அந்தக் கல்மழை இராமன் வில் மழையாகிய அம்புகளால் தடுத்துவிட்டான். இனிமேல் இவளால் முனிசிரேஷ்டருக்கு ஆபத்து விளையக்கூடுமென்று தெரிந்து.

" சொல்லொக்கும் கடிய வேகச்
சுடுசரம், கரிய செம்மல்
அல்லொக்கும் நிறத்தி னாள்மேல்
விடுதலும், வயிரக் குன்றக்
கல்லொக்கும் நெஞ்சில் தங்கா(து)
அப்புறம் சுழன்று, கல்லாப்
புல்லர்க்கு நல்லோர் சொன்ன
பொருளெனப் போயிற் றன்றே!"

கல்லாத கீழ்மக்களுக்கு நல்லவர்கள் சொன்ன பொருள் போலே போய்விட்டதாம் இராமபாணமும், தாடகை நெஞ்சிலே தங்காமல். தான் பாழாக்கிய பாலைவனத்தைக்காட்டிலும் பாழ்பட்டிருந்த அந்த நெஞ்சை 'வயிரக்குன்றக் கல் ஒதுக்கும் நெஞ்சு' என்று வருணிக்கிறான். அந்த வனத்திலே அவள் தங்கியிருந்த கல்மலையைக்காட்டிலும் எவ்வளவோ கடினமாயிருந்ததாம், அந்தப் பாவி நெஞ்சு.

இராம பாணத்தையோ சொல் ஒக்கும் கடிய வேகச் சுடுசரம் என்று வருணிக்கிறான். யாருடைய சொல்? விசுவாமித்திரைப் போன்ற மகரிஷிகளின் சாபச் சொல்லா? கம்பனைப் போன்ற மகாகவிகளின் - நெருப்பைக் கக்கும் - சொல்தானா?

தாடகை அலறிக்கொண்டே மடிந்து விழுந்தாள். இந்தப் போரைக் 'காகுத்தன் கன்னிப்போர் என்கிறான் கவிஞன். இராவணன் பாட்டி, வலிமையிலும் கொடுமையிலும் ஒருங்கே முற்ற மூத்து முதிர்ந்திருந்தாள். அந்த இராட்சஸ சக்கரவர்த்தியின் விநாச காலத்தைக் காட்டும் உற்பாதமாக அவனது வெற்றிக்கொடி அற்று விழுந்தது போலிருந்ததாம் அந்த வீழ்ச்சி.

வில்லை முரித்துச் சீதையை மணஞ்செய்து கொள்ளப்போகும் கைவண்ணம் இப்படிப் பட்டதென்று இந்தக் கன்னிப் போர் முன் கூட்டியே ஒருவாறு அறிவிக்கிறது.

***

இளவலின் இங்கிதம்

- அமரர் நீதியாசகர் மு.மு. இஸ்மாயீல்

இங்கிதம் என்ற தமிழ்ச் சொல் ஓர் அற்புதமான சொல். ஒன்றைக் குறிப்பாக உணர்த்துவதையும் இங்கிதமென்று சொல்லலாம். Good manners என்று இன்று நாம் ஆங்கிலத்தில் குறிப்பிடுகிற சமுதாயப் புற ஒழுக்கங்களையும் இங்கிதம் என்ற சொல் குறிக்கும். ஒரே பொருளையோ கருத்தையோ சொல்பவர்களுக்கு அதை யாரிடம் சொல்கிறார்களோ அவர்களுக்கு இடையே உள்ள வயது, அறிவு, உறவுமுறை, சமுதாய அந்தஸ்து, ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட தார தம்மியங்களைக் கருத்தில் கொண்டு வெவ்வேறு விதமாகச் சொல்லலாம். ஒரே சேதியை ஒரு தனயன் தன் தந்தைக்கு உணர்த்தும் முறைக்கும் தன் நண்பனுக்கு உணர்த்தும் முறைக்கும் வேறுபாடு இருக்கும். தந்தையோ தன்னைப் பெற்றெடுத்தவர். வயதில் பெரியவர்; அனுபவம் நிறைந்தவர்; தன் மேல் ஆதிக்கம் செலுத்துவதற்கு உரியவர். ஆனால் நண்பர்களுக்கிடையிலேயோ பெரும்பாலும் வயதிலும், அறிவிலும் அனுபவத்திலும் இணைப்பாட்டிலும் சமநிலையே இருக்கும். இந்தத் தார தம்மியத்திற்கு இணக்கமாகவே அவர்கள் சொல்கிற முறையும் அமைந்திருக்கும். அதைத் தான் இங்கிதம் என்று சொல்கிறோம். இத்தகைய அற்புதமான பண்பினைக் கம்பன் தன் காப்பியத்தில் பல இடங்களில் வெகு நுணுக்கமாக எடுத்துக் காட்டுகிறார்.

இராமனும் இலக்குவனும் ருசியமுக பர்வதத்தை நோக்கிச் செல்கிறார்கள். அவர்களின் எதிரில் வந்த அனுமன் "கவ்வையின்றாக, நுங்கள் வரவு!" என்று வரவேற்கிறான். அப்படி வரவேற்ற அனுமனை "வெவ்வழி நீங்கியோய்! நீ யார்?" என்று இராமன் கேட்கிறான். அனுமன் தன்னைப் பற்றி கூறி அறிமுகம் செய்து கொண்டு, தான் சுக்கீரிவனுக்கு ஏவல் செய்வோன் என்றும் அவர்களுடைய வருகையைக் கண்டு சுக்ரீவன் ஏவ, விவரம் தெரிய வந்ததாகவும் சொல்கிறான். " அந்த சுக்கிரீவன் எங்கே இருக்கிறான். அவனைக்காணும் விருப்பத்தோடுதான் நாங்களும் வந்தோம். அவனைக் காட்டு" என்று இராமன் கூறுகிறான். வாலியினால் வருத்தப்பட்டவன் சுக்கிரீவன் என்பதை எடுத்துக்கூறிய அனுமன், தங்களுக்கு அடைக்கலம் அளிக்கவேண்டுமென்றும் இராமனை இறைஞ்சுகிறான். அப்படி இறைஞ்சிவிட்டு "யார் என விளம்புகேன் நான், எங்குலத் தலைவருக்கு உம்மை! வீர! நீர் பணித்தீர்!" என்று கேட்கிறான். இதில் கம்பன் ஓர் அற்புதமான இங்கிதத்தைக் காட்டுகிறான். இராமன் அனுமனைக் கேட்டதோ 'நீ யார்?' என்று. அனுமனோ இராமஇலக்குவரைப் பார்த்து "நீங்கள் யார்?" என்று கேட்கவில்லை. அதற்கு மாறாக, "எங்கள் குலத் தலைவனான சுக்ரீவனுக்கு உங்களை யார் என்று நான் சொல்வது? என்று எனக்குக் கட்டளை இடுங்கள்" என்று கேட்கிறான். சக்கரவர்த்தித் திருமகனாகிய இராமன் வனத்திலே முதன் முதலாகக் காண்கிற அனுமனை நோக்கி "நீ யார்?" என்று கேட்பது பொருத்தமே. ஆனால் இராம இலக்குவர்

தோற்றத்தையும் அவர்கள் வனத்தில் நடந்து வரும் பொழுது மயில் முதலிய பறவைகளும், கற்களும் மலர்களும் மேகமும் அவர்களைக் கண்டதால் உற்ற நிலைமையைக் கண்டவனும் அவர்கள் பால் அளவு இல் காதல் தோன்ற என்புநெக்கு உருகப் பெற்றவனும் அவர்களிடத்து அடைக்கலம் தேடியவனுமான அனுமன், அவர்களைப் பார்த்து, "நீங்கள் யார்" என்று கேட்பது இங்கித மற்ற கேள்வியாகும். இந்த நுணுக்கத்தைத்தான் கவிச் சக்கரவர்த்தி மிக அற்புதமாக இங்கே எடுத்துக் காட்டுகிறான்.

இதே இங்கிதம் இதைவிட மிகச் சிறப்பாக இலக்குவனிடம் காணப்படுகிறது. பெண்ணைக் கோறல் வீரத்துக்கு இழுக்காகும் என்பது இந்நாட்டு மக்கள் – குறிப்பாகத் தமிழர்கள் தொன்று தொட்டே கொண்டிருந்த உயர்ந்த கருத்தாகும். இந்தக் கருத்தினை மிக அழுத்தமாக கம்பன் எடுத்துக் காட்டுகிறான். இந்திரஜித்து இறந்த பிறகு இராவணன் அளவு கடந்த சோகத்தில் மூழ்கி புலம்பத் தொடங்குகிறான். இத்துயர் நமக்குச் சீதையால் உண்டானது என்று சொல்லி 'அவளை வாளால் கொன்று தொலைத்திடுவேன்' என்று கூறி, சீதை இருக்குமிடத்தை நோக்கி ஓடுகிறான். அவன் அப்படி செய்யப் போவதை விலக்கி மகோதரன் அவனுக்கு அறிவுரை கூறுகிறான். சீதையினை கொல்வதனால் 'நீர் உளதனையும், வானப்பரப்பு உளதனையும், நீண்டபார் உளதனையும் பேராப் பெரும்பழி பிடித்தி போலாம்" என்கிறான். "எவ்வளவு தான் வலிமையுடையவர் என்று அளவிட்டு கூற முடியாத காலகேயருடைய சிரத்துடனே திசை யானைகளின் வெண்தந்தங்கள் சிந்தும்படி வீசிய உன்னுடைய வெற்றி வீரவாளை ஒரு மாதின் மேல் செலுத்தியபோது அந்த வாள் தானே நாணத்தினால் இறுவதல்லாமல் அம்மாதின் ஆவியைப் போக்குமோ? என்று கேட்கிறான். "அப்படி மங்கையை, குலத்துளாளை, தவத்தியை, முனிந்து சங்கை ஒன்று இன்றிக் கொன்றால் உன்னால் தோல்வி அடைந்த பிரம்மனும் திருமாலும் சிவனும் உன்னைப் பார்த்துச் 'சிறியன் என்று செங்கையும் கொட்டிச் சிரிப்பார்களே"என்று எடுத்துக்காட்டுகிறான். ஒரு பெண்ணைக் கொல்வது, "நிலத்தியல்பு அன்று; மேலோர் தர்மமேல் அதுவுமன்று; வலத்து இயல்பு அன்று; மாயாப் பழியே ஆகும்" என்று எடுத்துக் காட்டுகிறான். இவ்வளவையும் மகோதரன் சொன்ன பிறகு தான், இராவணன் சீதையை வெட்டப் போதலைத் தவிர்க்கிறான். அரக்கர்களிடையே, இந்த தர்மம் இவ்வளவு அழுத்தமாகவும், ஆழமாகவும் இருக்குமானால் மனிதர்களிடையே குறிப்பாக அரச வம்சத்தினரிடையே எப்படி இருந்திருக்க வேண்டுமென்பதை ஊகித்துக் கொள்ளலாம்.

விசுவாமித்திர முனியோடு சென்று கொண்டிருந்த இராம இலக்குவர் முன்னால் தாடகை ஆரவாரத்துடன் வந்து, 'வேல் கொண்டு எறிவேன்' எனச் சினந்து நிற்கிறாள். அவளை இராமன் கொல்ல வேண்டுமென்பது முனிவனுடைய கருத்தாக இருந்த

போதிலும் அவளைக் கொல்ல இராமன் அம்பை எய்யவில்லை. அவர்களுடைய உயிர்க்கே ஊறு விளைவிக்கும் தொழிலில் அவள் இறங்கிய போதிலும் "பெண் என மனத்திடை பெருந்தகை நினைந்தான்" என்று கம்பன் கூறுகிறான். இதில் காணக்கூடிய நுணுக்கம் ஒன்று இருக்கிறது. "தாடகையைக் கொல்." என்று அது வரை விசுவாமித்திர முனிவர் இராமனிடம் சொல்லவில்லையாதலால், ' அவள் பெண் ஆகையால் அவளைக் கொல்வது தகாது என்று இராமன் கூறியதாகவும் கம்பன் கூறவில்லை. தாடகையை இராமன் கொல்லவேண்டுமென்பது முனிவருடைய கருத்தாக இருந்தது என்றுதான் கம்பன் கூறுகிறான். அதற்கு ஏற்கனவே இராமன் "அவளைப் பெண் என மனத்திடை நினைத்தான்" என்று கம்பன் கூறுகிறான். இவ்வாறு இராமன் நினைத்ததை முனிவர் அறிந்து கொள்கிறான். அவளுடைய கொடுஞ் செயல்களையெல்லாம் எடுத்துக்கூறி "இக்கொடியாளையும் மாது என்று எண்ணுவதோ." என்று இராமனைக் கேட்கிறான். முடிவாக,

"ஈறுஇல் நல்அறம் பார்த்து இசைத்தேன்; இவள்
சீறி நின்று இது செப்புகின்றேன் அலேன்;
ஆறி நின்றது அருள் அன்று; அரக்கியைக்
கோறி' என்று, எதிர் அந்தணர் கூறினான்."

"இந்தத் தாடகை மேல் உள்ள கோபத்தினால் அவளைக் கொல்லுமாறு நான் சொல்லவில்லை; அழிவில்லாக் நல்லறத்தை நன்றாகச் சிந்தித்துப் பார்த்தே இவளைக் கொல்லுமாறு சொல்கிறேன்; மேலும் தீமையைப் பொறுப்பது அருளுமன்று" என்று விசுவாமித்திர முனிவன் இராமனுக்கு உணர்த்துகிறான். இங்கே இராமனுக்கு ஒரு தர்ம சங்கடம் ஏற்படுகிறது. பெண்ணைக் கொல்வது அறமாகாது. ஆனால், அறங்களையெல்லாம் உணர்ந்த விசுவாமித்திர முனிவன், இந்தத் தாடகையைக் கொல்லாமல், இருப்பதா? "நல் தந்தை நீ, தனித் தாயும் நீ, இவற்கு" என்று யாரைப் பார்த்துக் கூறி தசரதன் இராம - இலக்குவரை ஒப்படைத்தானோ, அந்த விசுவாமித்திரன் சொல்கிறான். என்பதால் தாடகையைக் கொல்வதா? என்பதுதான் இராமனுக்கு ஏற்பட்ட தர்மசங்கடம். இராமன் உடனே ஒரு முடிவுக்கு வருகிறான். தாடகையைக் கொல்வது அறமன்று எனினும் விசுவாமித்திரன் சொல்லை வேதமாகக் கொண்டு அதன்படி நடப்பதுதான் அறம் செய்யும் நெறி என்ற முடிவுக்கு வந்து அந்த முடிவின்படியே தாடகையைக் கொல்கிறான்.

பஞ்சவடியிருந்த இராமனைக் சூர்ப்பணகை காமுறுகிறள். அழகிய உருக்கொண்டு இராமனிடம் வந்து தன் ஆசையை வெளிப் படுத்துகிறாள். அப்போது அங்கு வந்த சீதையைக் கண்ட சூர்ப்பணகை அவள் அழகைப் பார்த்து அதிசயித்து

அவள் இராமனுடன் இருக்கும் வரையில் இராமன் தன்னை விரும்பமாட்டான் என்று எண்ணிச் சீதையை வெருட்டுகிறாள். அதைக் கண்ட இராமன் சூர்ப்பணகையை வெருட்கிறான். அவள் மனம் நைந்து ஏங்கிக் காமத் தீச்சுட உயிர் உளைகிறாள். கடைசியாக சீதையைத் தூக்கிச் செல்வதற்கு அவளைத் தொடர்கிறாள். அதைக்கண்ட இலக்குவன் நில் `அடீஇ' என அவளை நெருங்கினான். ஆனால், அவளைப் "பெண் என நினைத்தான் ஆகையால், வில் எடாது வாள் உருவி "சீதையைத் தூக்கிக் கொண்டு விண்வழிச் செல்வேன்" என்று, உறுத்து எழுவாளை "மூக்கும், காதும் முலைக்கண்களும், முறையால், போக்குகிறான்." இங்கு நோக்கத் தக்கது என்னவென்றால் சீதையைத் தூக்கிக் கொண்டு "விண்படர்வேன்" என்று சூர்ப்பணகையை இலக்குவன் கொன்றிருப்பானேயானால். அது நியாய மற்றதென்றே முறையற்றதென்றோ கூடச்சொல்லமுடியாது. ஆனால், அவள் பெண் என்ற காரணத்தினால், இலக்குவன் வில்லை எடுத்து அவள் மேல் அம்பை எய்து அவள் உயிரைப் போக்காமல் வாளை எடுத்து அவளை அங்கபங்கம் மாத்திரம் செய்கிறான்.

சடாயு உயிர் நீத்த பிறகு இராமனும் இலக்குவனும் சீதையைத் தேடிக் கொண்டு தெற்கு நோக்கிச் செல்கிறார்கள். அப்படிச் சென்று கொண்டிருக்கும் பொழுது அவர்கள் ஒரு சோலையை அடைந்து ஒரு பளிக்கறையில் தங்குகிறார்கள். அப்போது இராமன், "நீர் கொணர்க" என்று சொல்லி இலக்குவனை அனுப்புகிறான். நெடுங்கானில், நீர்தேடி இலக்குவன் செல்கிறான். எங்குத் தேடியும் நீரைக் கண்டானில்லை. அப்போது, அயோமுகி என்னும் அரக்கி அவனைக் கண்டு காமுற்று அவனெதிரில் வருகிறாள். அவளை ஓர் அரக்கி என்று உணர்கிறான். இப்படி அவன் உணர்ந்ததை கவிச்சக்கரவர்த்தி கம்பன் அற்புதமாகச் சொல்கிறான். அதாவது "பண்டு நாசி இழந்து பதைக்கும் மிக்க வலிமை உடைய சூர்ப்பணகையோடு தாடகையையும் ஒத்த குலத்தை உடையளான இவள் துஷ்டர்களாகிய இராக்கதர் கூட்டத்தில் பிறந்த ஒரு பெண்ணாவாள் என்று உணர்ந்தான்" கம்பன் கூறிகிறான்.

"பண்டையில் நாசி இழந்து பதைக்கும்
திண்திறலா ளொடு தாடகைச் சேராள்;
கண்டகர் ஆய அரக்கர், கணத்து ஓர்
ஒண்தொடி ஆம், இவள்'என்பது உணர்ந்தான்."

அயோமுகி ஓர் அரக்கி என்பதை இலக்குவன் உணர்ந்தான் என்று சொல்லவந்த விடத்து தாடகையையும் சூர்ப்பணகையையும் சேர்த்துச் சொல்லும் கம்பனுடைய மதிநலம் எண்ணியெண்ணி வியக்கத் தக்கது, அந்த நயத்தை, மேலும் கற்கும்போது

தான், பூரணமாக உணர முடியும். அந்த அயோமுகியைப் பார்த்து, "நீ யார்" என்று இலக்குவன் கேட்கிறார். அவன் மாட்டுப் பிறந்த ஆசையின் காரணமாக வந்தாள் என்றும் தான் அயோமுகி என்றும் பதிலிறுக்கிறான். அதனைக் கேட்ட இலக்குவன் கோபமடைகிறான்.

"மாறு இலவார் கணை, இவ்உரை, வாயில்
கூறிடின், நின்உடல் கூறிடும் என்றான்."
(ஆரணிய காண்டம் - அயோமுகிப் படலம் - 53)

அயோமுகி மீண்டும் இலக்குவனை வேண்ட அவன் அவளை அச்சுறுத்துகிறான்,

" ....நின் இரு காததொடும் நாசி
துமிப்பதன் முன்பு அகல்."
(ஆரணிய காண்டம் - அயோமுகிப் படலம் - 56)

என்கிறான். அவள் அப்பொழுதும் பயப்படாமல் தன்னுடைய ஆசையை நிறைவேற்றிக் கொள்வதற்காக இலக்குவனைத் தூக்கிக் கொண்டு ஆகாய மார்க்கமாக விரைந்த செல்கிறாள். அப்படித் தூக்கிச் சென்ற அயோமுகியை இலக்குவன் அவளுடைய மூக்கு முதலிய உறுப்புகளைப்பிடித்து அறுக்கிறான். உடனே அயோமுகி அலற ஆரம்பிக்கிறாள். இதற்கிடையே, நீர் கொண்டுவரச்சென்ற இலக்குவன் நெடுநேரமாகியும் திரும்பி வராதது கண்ட இராமன், அவனுக்கு என்ன நேர்ந்ததோ என்று எண்ணிப் பலவாறு புலம்பி அவன் இல்லாவிட்டால் தான் உயிர் வாழ்வது இல்லை என்று முடிவு செய்து தற்கொலை செய்து கொள்ள முடிவுசெய்கிறான். அப்போது தான் அயோமுகியின் அலறலைக் கேட்கிறான். அரக்கி என்று துணிகிறான். அங்கியின் நெடும்படை வாங்கி அந்த இரவிலே இலக்குவனைத் தேடத் தொடங்குகிறான். எதிரில் வருகிற இலக்குவன் "வருந்தாதே" என்று சொல்லி இராமனை அணுக, இராமன் மகிழ்ச்சி அடைகிறான். இராமன் வினவ, நடந்ததைச் இலக்குவன் சொல்கிறான். அப்போது இராமன் இலக்குவனை ஒரு கேள்வி கேட்கிறான். 'போர் செய்யும் வல்லமை உடைய அரக்கியைப் போரில் வென்று மீண்டேன்' என்று நீ கூறினாய். இழிதொழிலையுடைய அவ்வரக்கி தகாத சொற்களைச் சொன்னதனாலுண்டாகிய கோபத்தினால் நீ அவளை ஏன் கொல்லவில்லை? சொல்" என்று கேட்கிறான்.

"வான்தொழில் வீர! போர் வலி அரக்கியை
வென்று போர் மீண்டனென் என விளம்பினாய்;
புன் தொழில் அனையவள், புரிந்த சீற்றத்தால்
கொன்றிலை போலுமால் கூறுவாய் " என்றான்.
(ஆரணிய காண்டம் - அயோமுகிப் படலம் - 89)

என்பது கம்பன் பாட்டு. அதற்கு பதிலிறுக்கிறான் இளவல். இலக்குவன் துளைகள் பொருந்திய மூக்கையும் செவிகளையும் தனங்களையும், நான் அறுத்தெரிந்த பொழுதில் அவள் கூக்குரலிட்டுக் கதறினாள் என்று சொல்லி நின்று இராமனை இரண்டு கைகளையும் கூப்பி வணங்கிறான். இதனைத்தான்,

"துளைபடு மூக்கோடு செவிதுமுத்து உக
தளைவயின் நகிலொடு தடித்து நீக்கிய
அளவையில், பூசலிட்டு அரற்றினாள்; என
இளையவள் விளம்பி நின்று இருகை கூப்பினான்"

(ஆரணிய காண்டம் - அயோமுகிப் படலம் - 90)

இந்தப் பாட்டின் நயம் வியந்து வியந்து பாராட்டற்குரியது. இராமனுடைய கேள்விக்கு இலக்குவன் அளித்த விடை முழுமையாக இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. "நான் அவளுடைய மூக்கையும் காதுகளையும் தனங்களையும் துணித்தபோதே அவள் அலற ஆரம்பித்துவிட்டாள்; ஆகையால் அவளைக் கொல்லாமல் விட்டுவிட்டேன்." என்பதன்று இலக்குவன் அளித்த விடை. ஏனெனில், அவளைக் கொல்வதற்குக் காரணம். முதலில் அவளை "என் அம்பினால் உன் உயிரைப் போக்குவேன்." என்று அச்சுறுத்தினான். பின்னால் "உன் காதும் மூக்கும் அறுப்பதற்கு முன் நீ அகன்று போ" என்று சொன்னான். ஆனால் செயல்படவேண்டிய அவசியம் ஏற்பட்டபோதோ, பின்னதை மட்டுமே செய்தான். அப்போது கவிஞன், "பெண் என நினைத்தான்" என்று வெளிப்படையாகவே சொல்லி இலக்குவன் வில்லை எடுக்கவில்லை என்று சொன்னான். அயோமுகிபெண் என்பதற்காக அவளைக் கொல்லவில்லை என்று இலக்குவன் சொல்லியிருப்பானேயானால், இது இங்கிதமற்ற செயலாகும். தாடகையென்ற பெண்ணைக் கொன்ற இராமனிடம் "அயோமுகி பெண் என்பதற்காக அவளை நான் கொல்லவில்லை." என்று இலக்குவன் கூறியிருப்பானேயானால், அண்ணனாகிய இராமன் தாடகையைக் கொன்றதன் மூலம் அறத்தினின்று தவறிவிட்டான் என்று அவனுக்கு கற்பிப்பதோடு தான் மாத்திரம் அறத்தினின்று வழுவாமல் நடந்து கொண்டதாகத் தன்னைத் தானே பாராட்டிக் கொள்வதாகவும் ஆகும். அத்தகைய இங்கிதமற்ற செயலை இலக்குவன் செய்யவில்லை. இதை மனத்திற்கொண்டு பார்க்கும் பொழுதுதான் தாடகை, சூர்ப்பணகை, அயோமுகி ஆகிய மூவரையும் ஒன்று சேர்த்துக் குறிப்பிட்ட கவிஞனுடைய நயம் விளங்கும்.

அதே சமயத்தில், தான் அயோமுகியைக் கொல்லாததற்கு பொய்யான காரணத்தைக் காட்டவும் இலக்குவன் முற்படவில்லை. ஆகையால் தான் அவளுடைய மூக்கையும் காதுகளையும் தனங்களையும் துண்டித்த போது அயோமுகி

கூக்குரலிட்டுக் கதறினாள் என்று இலக்குவன் பேச்சை முடித்துக்கொள்கிறான். அதற்கு மேல் அவன் செய்த செய்கை, அவன் அயோமுகியைக் கொல்லாததற்கான உண்மையான காரணத்தை இங்கிதமாக உணர்த்தி விடுகிறது. "நின்று இருகை கூப்பினான் என்ற கவிஞனின் சொல்லாட்சி இத்தனைப் பொருளையும் உள்ளடக்கிக் கொண்டு நிற்கிறது.

இளவலின் இவ் விங்கித்தை இராமன் உடனே புரிந்து கொள்கிறான். "மிகுந்த இருளிலே உன்னைக் கொல்லத் துணிந்தவளாகிய அரக்கியையும் கொல்லாதவனாய் அவளுடைய மூக்கை அரிந்து துரத்திவிட்ட நீ மனுவை முதலாகக் கொண்ட வம்சத்தில் மரபுக்கு ஏற்றவனே" என்று சொல்லி அவனைத் தழுவிக் கொள்கிறான். மகிழ்ச்சி மிகுதியால் உடல் பூரிக்கிறான்.

" தொல் இருள், தனைக் கொலத் தொடர்கின்றாளையும்
கொல்லலை; நாசியைக் கொய்து நீக்கினாய்
வல்லைநீ மனுமுதல் மரபினோய்! என
புல்லினன் - உவகையின் பொருமி விம்முவான்."
(ஆரணிய காண்டம் - அயோமுகிப் படலம் - 91)

என்பது கவிஞனின் வாக்கு. இலக்குவனை இப்படிப் பாராட்டுவதன் மூலம் அவனுடைய இங்கிதத்தை மாத்திரமின்றி அவன் அறவழியையும் பாராட்டுகிறான் இராமன். நாமும் பெண்ணினைக் கொல்லாத இலக்குவனின் பெருவீரத்தைப் பாராட்டுகிறோம். அதனை வெளிப்படையாகச் சொல்லாத இளவலின் இங்கிதத்தைப் போற்றுகிறோம். அந்த இங்கிதத்தை உணர்ந்து அதனையும் அதற்குப் பின்னால் நின்ற பெண்ணினைக் கொல்லாப் பெருவீரத்தையும் புகழ்ந்த இராகவனின் பண்பாட்டையும் வியக்கிறோம். ●

